நூ.ம. 4913

நூ.ம.
4913

# செல்வி
# தங்கம்மா
# அப்பாக்குட்டி

# பாராட்டு விழா மலர்

1974

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7, 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6



அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு



கலைத்தமிழ் மன்ற பாராட்டுப்பெறும் "கலைஞான வித்தகர்"
செல்வி ஞானமா.

உ
சிவமயம்

# பதிப்புரை

ஈழ நாட்டில் இன்று தலைசிறந்த தமிழ்ப் பேச்சாளராக, சைவசமயத் தொண்டராக விளங்கும் செல்வி தங்கம்மா அப்பாகுட்டி அவர்களைப் பாராட்டாத உள்ளம் எம்மிடையே இராது. சமயம், அரசியல், சமூக விஷயங்களில் வேறுபட்ட கொள்கையுடையவர்களாயிருக்கும், யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவர்; போற்றவும்படும் பேச்சாளர். இவர் ஈழம், தமிழ் நாடிரண்டும் தம்மிடையே கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஆட்செய்யும் வழக்கத்தைத் தொடர வகை செய்துள்ளமை எமது பெரும் பேறு.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பல தாபனங்கள் பலப்பல முறைகளில் பாராட்டியுள்ளன. இலங்கை முழுவதிலுமுள்ள சைவசமய தாபனங்களின் கூட்டுமன்றமான அகில இலங்கை இந்து மாமன்றமும், இம் மன்றத்தில் அங்கத்துவம் வகிக்காத வேறு பல சமய கலாசார தாபனங்களும், பெரியார்களும் ஒருங்கிணைந்து இவரைப் பாராட்ட எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவே 26-1-74 இல் நடைபெற விருக்கும் பாராட்டு விழாவும், அன்று வெளியாகவிருக்கும் இம்மலரின் மணமுமாகும்.

இவ்விழாச் சிறப்புற நிகழத் திருவருள் துணை மட்டிலுமன்றி, பல்வேறு சங்கத்தினரும் தனிப்பட்ட அன்பர்களும் பொருளுதவி புரிந்தும், உடலுழைப்பு நல்கியும் துணை நின்றனர். இம்மலரை உருவாக்குவதற்கு ஆதீன முதல்வர்களும், தாபனப் பொறுப்பாளர்களும், பெரியார்களும் ஆசியுரைகள், பாராட்டுரைகள் வழங்கியுள்ளனர். காஞ்சி மெய்கண்டார் ஆதீன முதல்வர் வாழ்த்துப்பா அருளியுள்ளார்கள். தலைசிறந்த அறிஞர்களும், எழுத்தாளர்களும் ஆய்வுக் கட்டுரைகள் வரைந்துள்ளனர். பேருள்ளம் படைத்த பெருமக்கள் விளம்பரங்கள் வாயிலாகப் பொருளுதவி புரிந்துள்ளனர். இந்த நல்விழாவில் பாராட்டுரைகள் வழங்குவதற்குப் பெரியார்கள் இசைந்துள்ளார்கள். விழாவில் முழுமனத்தோடு பேரார்வம்கொண்டு பணி செய்தவர் திரு. க. க.சுப்பிரமணியம் அவர்கள். எல்லோருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றி.

இம் மலர் உருவாகும்போது ஒப்புநோக்கிப் பிழை திருத்தி உதவிய நண்பர்களுக்கும், குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுதவிய நியூ லீலா அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி.

இங்ஙனம்
**பாராட்டு விழாக் குழுவினர்**

அ. இ. இந்து மாமன்றம்,
75, லோறன்ஸ் வீதி
கொழும்பு - 4.
25-1-74



1965-இல் கோப்பாயில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாச
வைர விழாவில் உரையாற்றும் செல்வி தங்கம்மா.

## சைவத் தமிழ் உலகின் தனிச் சொத்து

# சொல்லின் செல்வி தங்கம்மா

1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தி அடிகள் இலங்கைக்கு வருகை தந்தார்கள். நாடு முழுவதுஞ் சென்றூர்கள். சென்ற இடமெல்லாஞ் செழுமையான சொற்பொழிவுகள் செய்தார்கள். யாழ்ப்பாணமுஞ் சென்றூர்கள். அங்கும் பல பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் உரை நிகழ்த்திஞர்கள். அவற்றுள் சைவத்தமிழ் மகளிர் பண்பாட்டு நிலையமாக விளங்கும் சுன்ஞகம் இராமநாதன் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கு நினைவு கொள்ளக்கூடிய ஒன்ருகும். அப்பகுதியின் சுருக்கம் பின்வருமாறு :

" பள்ளிப் பருவம் முடிந்ததும், பெரும்பாலான பெண்கள் பொதுநலத் தொண்டு வாழ்விலிருந்தும் மறைந்து விடுகின்றனர். 'சைவ சமயிகள்' எனக் கூறிக் கொள்ளும் (இந்துக்கள் என்று அவர் கூறவில்லை 'சைவசமயிகள்' என்றே கூறிஞர். "You claim to be Saivites" என்பதே அவரது ஆங்கில வாக்கியமாகும்) இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளாகிய நீங்கள் அப்படியாக மறைந்து விடாது, தொண்டு வாழ்வில் பெருமை பெற்றுயர்ந்த உங்கள் குலத்துதித்த உத்தமப் பெண்மணிகள் போல் உலகூட்டும் நல்ல பொதுப்பணிகளாற்றிச் சமூகத்தில் மகளிர் திலகங்களாக ஒளிபரப்ப முன்வரவேண்டும்" என்பதே அப்பகுதியாகும்.

ஆம்! மகாத்துமாக்களின் வாக்குகள் – எண்ணங்கள் - ஆசீர்வாதங்கள் என்றும் பொய்ப்பதில்லை; நிலைகொள்ளாது போவதுமில்லை. வலிமை பெற்ற கடவுட்டன்மை அவற்றிற்குண்டு. அதஞலன்ருே கடவுளோடொப்ப அவர்கள் மதித்துப் பேசப்படுகின்றனர்; வைக்கவும் படுகின்றனர். இப்படியான கடவுட்டன்மைமிக்க காந்தியடிகள் இராமநாதன் கல்லூரியில் அன்று விடுத்த வேண்டுகோள் அவம் போகவில்லை.

அன்று அக்கல்லூரியில் மகாத்மாவின் பேச்சைக்கேட்ட மாணவிகளில் எத்தனை பேர் பொதுவாழ்வில் ஈடுபட்டுழைத்துப் பெருமைபெற்று வாழ்ந்தனரோ அன்றி இன்றும் வாழ்கின்றனரோ யாமறியோம். ஆயின், அம்மகான் இராமநாதன் கல்லூரியில் உரை நிகழ்த்தியபோது, பெற்ருேர் மனம் மகிழத் துர்க்கை அம்மன் கோவில் திருவீதியில் தன்மெல்லடி வைத்துச் சின்னநடை பயின்று கொண்டிருந்த செங்கீரைப் பருவத்துச் சிறுமி ஒருத்தியின் செவிகளில் அப்பேச்சின் தெய்வ அலை பாய்ந்து சென்று பதியப்பெற்று அத் தெய்வ அலையின் செறிவால் அக்கல்லூரியில் பின்ஞளில் தனது உயர்கல்வியைப் பெற்று வெளியேறியதுடன், சைவ சமயிகள் என மகாத்மா சொல்லிய பொருளை நுண்ணிதின் உணர்ந்து, அவர் வேண்டி நின்ற பெண்கள் சமூகவாழ்வு இலட்சியக் கனவை முழுமையாக நனவாக்கிவரும் மகளிர் திலகத்தைச் சைவத்தமிழ் உலகம் இன்று நன்கு அறியும். அவர்தான் பம்பரம்போற் சுழன்று தீந்தமிழ்த் தென்றல் சொற்பொழிவால் நாளும் சைவமும் தமிழும் பரப்பி நல்லறம் புரிந்துவரும் மேல்வரிச்சட்டச் சொற்பொழிவாளர்களுக்குத் தான் வரம்பாகி நிற்கும் இயல்புடைச் சிவக்கனி சொல்லின் செல்வி பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி ஆவார். இன்று சைவத் தமிழ் உலகின் தனிச் சொத்தாகிவிட்ட இவரின் வாழ்க்கையோடொட்டிய குறிப்புக்கள் சிலவற்றை இம்மலரில் முகிழ்க்கின்றனம்.

பிறப்பு : இரத்தாட்சி ஆண்டு மார்கழிப் பூரணையோடு கூடிய மிருகசீரிடம். திருவெம்பாவை 9ஆம் பூசை நாள் (7-1-25). கடந்த மார்கழிப் பூரணை மிருகசீரிடத்

தோடுகூடிய திருவெம்பாவை ஒன்பதாம் பூசைநாள், ஆங்கில நாட்குறிப்புப்படி 7-1-74 இல் வந்தமை, பாராட்டுவிழா எடுக்கும் இஞ்ஞான்று கருத்திற் கொள்ளத் தக்க ஒன்றாகும்.

**ஊர் :** யாழ்ப்பாணத்துப் பழைய பதினெண் ஊர்களில் ஒன்றான தெல்லிப்பழை. குறிச்சிப் பெயர் குளமங்கால். மருதநிலச் செறிவுடையதாகப் பண்டைநாளில் இருந்த படியால் வந்தபெயர் இதுவாகும். தெல்லிப்பழையின் பழையபெயர் தல்லிப்பள்ளி. தல்லிப்பள்ளி மருவியே தெல்லிப்பழை ஆயது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டிய மாருதப்புரவிகவல்லி தன் குன்மநோய் நீங்கி இளமையும் அழகுமுடையவளாய் விளங்கிய காலத்தில் தங்கிய இடம் இதுவாதலின், தல்லிப் பள்ளி எனப்பட்டதாம். (தல்லி - இளமையுடையவள், பள்ளி - சிற்றூர்)

**தந்தையார் :** அப்பாக்குட்டி. தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சி யுடையவர். மலைநாட்டில் ஆசிரியராக விளங்கியவர். நித்திய உடல்நலக் குறை காரணமாக அத்தொழிலினின்றும் தாமாகவே விலகிக் கொண்டவர். பின்னாளில் ஊரிலும் அயல் ஊர்களிலும் உள்ள மாணவர்கட்குப் பாடம் கற்பித்து வந்தவர். சிறப்பாக இவர் விரும்பிப் பழகியவர்கள் அந்தணர் குலத்தவராவர். 1960இல் இயற்கை எய்தியவர்.

**தாயார் :** தையற்பிள்ளை. நல்ல கல்வி கேள்வி ஞானமுடையவர். வாக்குண்டாம் முதலிய நீதி நெறி வரம்பு தெரிந்தவர். நோக்கும் எப்பொருட்கும் பேர் நுவன்றிடு தேக்குசீர் நிகண்டு செம்மையாகத் தெளிந்தவர். தியாகப் பிறவி. ஐந்தெழுத்தைத் தஞ்சமாகக் கொண்டவர். குடும்பம் வறுமையின் கொடுமுடியில் சிக்கித் தவித்த பொழுதும், தளரா மனத்துடன் குடும்பச் சுமையைத் தாங்கி மனையறம் பேணி நடாத்திய சோர்விலாப் பெண். 1957இல் இவ்வுலகை நீத்தவர்.

**சகோதரர்கள் :** நாலு பெண்களும் ஒரு ஆணுமாக ஐவர் கொண்ட குடும்பம். இரண்டாம் புதல்வி அம்மையார். தமக்கையாரும் தம்பியாரும் பல ஆண்டுகளுக்கு முன்னர் இயற்கை எய்திவிட்டனர். இன்று இரு சகோதரிகள் உளர்.

**குலதெய்வம் :** அசைவிலாச் சிவனடியே சிந்திக்கும் குடும்பம். ஆயின் துர்க்கை அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டவர்கள்.

**கல்வி :** துர்க்கை அம்மன் கோவிலில் ஏடுதொடக்கப்பட்டது. ஆரம்பப்பள்ளி மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலை. பாலர் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை இங்கு கற்றார். காலம் 1930 — 1935. 6ஆம் வகுப்பு முதல் 7ஆம் வகுப்பு வரை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை. காலம் 1936 — 1937. இங்கு 7ஆம் வகுப்பிற் கல்வி கற்கும்பொழுது நடந்த பேச்சுப் போட்டி ஒன்றில் முதலிடம்பெற்று ஞானப்பனுவலாகிய திருவாசக நூலைப் பரிசிலாகப் பெற்றார். இன்று "பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையேன்" என்ற பெருநோக்கோடு, சைவம் ஓங்கவும், தமிழ் தலையெடுக்கவும், சிவமயம் எங்கும் தேங்கவும், மெய்யறிவு நிலைகொள்ளும் நிலைபெருகவும், பல்லாயிரவர் கேட்டின்புற்றுக் குதுகலிக்கும் தெய்வமணங்கமழுந் தெவிட்டாத இன்சுவைத் தேன்மாரிச் சொற்பொழிவுகளை அம்மையார் ஊர் ஊராக நாள்தோறுஞ் சென்று சென்று உதிர்ப்பதற்கும், பட்டங்கள், பதக்கங்கள், பட்டாடைகள் பரிசிலாக நல்லோர் வழங்கவும், பாராட்டு விழாக்கள் எடுக்கவும் அடித்தளங்கோலி விட்ட இடம் விசாலாட்சி வித்தியாசாலையும், அன்று அங்கு நடைபெற்ற பேச்சுப்போட்டியும், அதில் அவர் பெற்ற பரிசில் நூலாகிய திருவாசகமுமேயாம்.

நன்னுவால் ஆற்றும் ஞானப் பனுவல் உரைகேட்க நாமகளும் நயந்து நாடி வருமளவு புகழ்பூத்த நன்மணி ஒன்று நம் மத்தியில் தோன்ற, அன்று கால் கோளிட்டு வைத்த அவ்விசாலாட்சி வித்தியாசாலையும், அதற்குக் காரணமாக விருந்த ஆசிரியரும் மானசீகமான எமது வாழ்த்திற்கும் வணக்கத்திற்குமுரிய ராவர்.

நடுநிலைக் கல்வி அளவெட்டி சதாநந்த வித்தியாசாலையில் தொடர்ந்தது. காலம் 1938 — 40. இங்கு இவருக்குத் தகைசான்ற ஆசிரியர் ஆதரவு கிடைத்தது. தமிழ், சமயம், இலக்கணம், இலக்கியம் ஆகிய பாடங்களை ஆர்வத்துடன் விரும்பிக் கற்க வைத்தவர்கள் இங்கு அக்காலத்தில் சிறந்த ஆசிரியர்களாகக் கருதப்பட்ட பண்டிதர் சின்னத்தம்பி, பண்டிதர் முருகேசு ஆகியோராவர். இங்கு இவர் கற்ற காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மரபுப்படி சைவத்தை ஈழத்தில் வளர்க்கும் நோக்கோடு கொழும்பு விவேகாநந்த சபையால் நடாத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைகளில் 1938, 39ஆம் ஆண்டுகளில் முதன்மைச் சித்திபெற்றுச் சபையார் பரிசில்கள் பெற்றிருக்கின்றார். 1937ஆம் ஆண்டிலும் இப்பரிசில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையாரை உழைக்க முடியா நோயாளியாக விதி செய்துவிட்டபடியினால், குடும்பம் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நேரம் கல்வியிற் சிறந்து விளங்கிய செல்வி தங்கம்மாவுக்கு சதாநந்த வித்தியாசாலை முகாமையாளராக விளங்கிய அளவெட்டியூர் வள்ளல் நாகலிங்கம் அவர்களது பேராதரவு கிடைத்தது. பிள்ளாய்! படிக்க விரும்புமளவிற்கும் நீர் படிக்கலாம், வேண்டிய உதவிகளை இயன்றமட்டும் யான் செய்கின்றேன், என அவர் கூறி உதவி வந்தார். ஆயின் பொல்லாக்காலன் அவரை நீண்டகாலம் வாழவிடவில்லை. உயர் கல்விக்காய ஆசிரியர் பயிற்சிபெற இவர் செல்வதற்குச் சிறிது மாதங்கட்கு முன்னர் காலன் வள்ளல் உயிரை வெளவிவிட்டான். இதனால் தங்கள் சொத்துக்களை ஈடு வைத்துப் பெற்ற பணத்தைக் கொண்டே உயர்கல்விச் செலவுகளைச் செய்ய நேரிட்டது. வள்ளல் நாகலிங்கம் காலத்தினாற் செய்த உதவியை நெஞ்சில் நீக்கமற நினைந்து கொண்டிருப்பவர் எமது அம்மையார்.

1940இல் சதாநந்த வித்தியாசாலை மூலம் தோற்றிய சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியவர், ஆசிரியர் பயிற்சிப் புகுமுகத் தேர்விற்கு அடுத்த ஆண்டு தோற்றி அதிலுஞ் சித்தியானார்.

**உயர்நிலைக்கல்வி :** சுன்னாகம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் உயர்நிலைக் கல்வி கற்றார். இங்கு 1941 செப்தெம்பர் தொடக்கம் 1944 ஆகஸ்ட் வரை ஆசிரியர் பயிற்சிபெற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியர் தகைமையுடன் வெளியேறினார். இங்கு இவருக்குத் தமிழாசானாக வாய்த்தவர் இலக்கிய வித்தகர் பிரம்மஸ்ரீ ஏ. எஸ். சுந்தரராஜ ஐயங்கார் ஆவர். இலக்கிய நூலாகிய இராமாயணத்தில் அம்மையாருக்கு ஈறிலா ஈடுபாடுவரக் காரணமாக இருந்தவர் இவ்வாசிரியரே.

**ஆசிரியர் நியமனம் :** பயிற்றப்பட்ட ஆசிரியத் தகைமை பெற்ற அம்மையார் கல்வி கற்பித்த - கற்பிக்கும் பாடசாலை விவரங்கள் :

| | |
|---|---|
| 1944 — இல் | பதில் ஆசிரியர் நியமனம் தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை |
| 1945 — 48 | மட்டக்களப்பு சென் யோசேப் கன்னியர் மடம் |
| 1949 — 59 | கொழும்பு பாத்திமா பாடசாலை |

**1960 — 63** அளவெட்டி சதாநந்த வித்தியாசாலை

**1964** தொடக்கம் இன்றுவரை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

**பட்டப்படிப்புக்கள் :** செல்வி தங்கம்மா யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதர் பட்டமும், சைவசித்தாந்தச் சைவப்புலவர் பட்டமும் பெற்றவர். இத்தேர்வுத் தேர்ச்சிப்படி விவரங்கள் :

1941 இல் பிரவேச பண்டிதர்
1953 இல் பால பண்டிதர்
1954 இல் பண்டிதர்
1958 இல் சைவப்புலவர்

பண்டிதர் தேர்வுக்குரிய தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை இலக்கண இலக்கிய ஆராய்ச்சி ஏறுக விளங்கிய மகாவித்துவான் சி. கணேசையரது தலைமாணவராகிய கட்டுவன் சைவமடத்தடிப் பண்டிதர் இ. நமசிவாயதேசிகரிடம் முறையாகப் பாடங்கேட்டுத் தெளிந்தவர். இப்பட்டப் பரீட்சைகளுக்குத் தேவையான பாடநூல்களைக் கொழும்பு விவேகானந்த சபை நூல் நிலையத்திலிருந்தே பெற்றுப் படித்து வந்துள்ளார். இதனால் தனது வாழ்க்கைப்படிகளில் தன்னை முன்னேற்றி வைத்த மேற்குறித்த பெரியார்க்கும், சபைக்கும் தான் என்றும் நன்றிக் கடனுடையவர் எனக் கூறிக்கொள்வார் அம்மையார்.

**சொற்பொழிவு :** 1941இல் 16ஆவது அகவையில், இராமநாதன் கல்லூரியில் அப்பூதியடிகள் பற்றிப் பேசியபேச்சே, முதன் முதலாகப் பிள்ளையார்சுழியிட்ட அம்மையார் சொற்பொழிவாகும். அன்று தொடங்கிய சொற்பொழிவு இன்று அம்மையாரை வானத்திற் கொண்டு செல்கின்றது. இற்றைவரை ஆயிரத்துக்கதிகமான சொற்பொழிவுகளை ஈழத்திலும் வெளிநாட்டிலும் நிகழ்த்தியுள்ளார். 1960 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில், இந்நாட்டில் செல்வி தங்கம்மாவின் சொற்கேளாத நகரமொன்று இருக்கமாட்டாதென எண்ணுகின்றோம். சிறப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள கோவிலோ, ஊரோ ஒன்றேனும் தப்பியிருக்க மாட்டாது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இன்றைக்குக் கூட்டத்திற்குப் பேசவருகின்றார் என்றால், அதற்குத் தனியான ஒரு மதிப்பும் ஆட்களும் வருவார்கள். இவர் மட்டக்களப்பில் ஆசிரியராக இருந்த காலத்தில், 1946 — 48 வரை ஞாயிற்றுக்கிழமைகளில் சமயச் சொற்பொழிவுகள் அந்நாள் மாவட்ட நீதிபதியாக விளங்கிய பொன் ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நிகழ்த்தியுள்ளார்கள். இராமகிருஷ்ண சபையிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதுண்டு.

கொழும்பில் முதன்முதலாக ஆற்றிய சொற்பொழிவு, 1953-ஆம் ஆண்டு விசயதசமி நாளன்று விவேகாநந்த சபையில் நிகழ்த்திய "நோன்பின் மகத்துவம்" பற்றிய உரையாகும். 1956 இலும் மேற்படி சபை மண்டபத்தில் நாவலர் விழாவின்போது முன்னாள் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகிய பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் தலைமையில் உரையாற்றியுள்ளார். தொடர்ந்து 1957 இல் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற "பத்துப் பாட்டு மாநாட்டில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் விரிவுரை செய்துள்ளார்.

மேலே கூறப்பட்டவை சில குறிப்பிடத்தக்க சிறப்புச் சொற்பொழிவுகளே தவிர, இக்கால எல்லைக்குள் இவராற்றிய சொற்பொழிவுகள் வேறும் பலவுள. விரிவஞ்சி அவற்றை விடுத்துள்ளோம்.

இப்படியான உயர்வு பெற்ற சொல்லின் செல்வி, கட்டளைப்படி ஆண்டு தோறும் சொற்பொழிவாற்ற வேண்டிய சில இடங்கள் உண்டு. அவை திருக்கேதீச்சரம், திருவாசக மடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் மார்கழித் திருவெம்பாவை நாட்களில் எடுக்கப்படும் திருவாசக விழா, காரைநகர் மணிவாசகர் சபை எடுக்கும் மணிவாசகர் விழா, அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் எடுக்கும் சேக்கிழார் விழா, குரும்பசிட்டி அம்மன் கோவில் உற்சவகால விழா ஆகியனவாகும். இவ்வாறு புகழ்பூத்த செஞ்சொற் செல்வியின் பெருமையும், திறமையும் கடல் கடந்த தமிழ்பேசும் நல்லுலகிற்கும் எட்டிவிட்டது. அங்கிருந்து அழைப்புக்கள் வந்தன. அம்மையார் அங்கெல்லாஞ் சென்று ஈழத்தின் சைவத்தமிழ்க் கல்விச் சிறப்பினை நிலைகொள்ளச் செய்து வந்துள்ளார்கள்.

**வெளிநாட்டுச் சொற்பொழிவு :** 1965 திசம்பரில் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த வைர விழாவிலே உரையாற்றியுள்ளார்கள். இவ்வரங்கிலாற்றிய உரைச் சிறப்பைக்கேட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் அழைப்பிற்கிணங்க அங்குஞ் சென்று "சிலம்பு" பற்றி உரையாற்றிச் சிறப்புச் செய்யப்பட்டார்.

1971 ஏப்பிரலில் மலேசியா சென்று பல இடங்களில் சொற்பொழிவாற்றி மதிப்புச் செய்யப்பட்டார். இங்கு இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் வடிவே "மலேசியச் சொற்பொழிவுகள்" என்ற இவரது நூல். இங்கு இவர் சென்ற கதை தனிக் கதையாகும். மலாயாவிலுள்ளோர் விருப்பத்திற்கு இணங்க, அங்குள்ள திரு. வ. செல்வநாயகம் அவர்களது வேண்டுகோள்படி, இப்பிரயாணத்திற்கு ஆகவேண்டிய ஒழுங்குகளை இங்கு செய்தவர்கள் காரைநகரைச் சேர்ந்த திருவாளர்கள் தில்லையம்பலம், பொன்னம்பலம் ஆகியோராவர். பிரயாணத்திற்குச் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி ஏப்பிரல் 8ஆம் நாள் அங்கு நிற்கவேண்டும். அன்று அங்கு நிகழ்ச்சியும் கூட இருந்தது. ஆனால் இங்கு அந்நாளிற்றான் சேகுவராக் குழப்பம். நாட்டில் ஊரடங்குச் சட்டம். எவரும் எங்கும் பிரயாணஞ் செய்யமுடியாத சங்கடநிலை. மலேசியப் பிரயாணம் குறித்தபடி இனி இல்லையென்ற நிலை வந்துவிட்டது. ஆயின் துர்க்கை தன் அடியாளை விட்டு விடவில்லை. ஏதோ ஒரு விதத்தில் தன் பேரருளால் பல இடர்களையும் நீக்கி, ஊரடங்குச் சட்ட நேரத்தில் 6ஆம் நாள் வான் ஊர்தி வழியாகத் தனியே கொழும்பு சென்று, அங்கிருந்து மறு ஊர்தி பெற்றுக் குறித்த நாளன்று மலாயா போய்ச் சேர வைத்துவிட்டாள். "வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லால் மற்று நானறியேன் மறுமாற்றம்" என்ற உறுதிப்பாடான–இறுக்கமான அடியவள் பிடி துர்க்கையை இரங்கி உதவமுன் வைத்துவிட்டது. இவ்வளவு தூர இடர்ப்பாடான பயணத்திற்கு வழித்துணையாக இவருக்கு இருந்தது, துர்க்கை அம்பாளின் படம் ஒன்றே ஒன்றாகும்.

மேலும் 1972 ஏப்பிரலில் சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கத்தார் மேற்கொண்ட ஒழுங்குகளின்படி மலாயா சென்று, சொற்பொழிவுகள் நிகழ்த்திப் பெருமதிப்பெல்லாஞ் செய்யப்பெற்று நாடு திரும்பினர்.

மலேசியப் பிரயாணகாலங்களில் சிங்கப்பூர் சென்று அங்குஞ் சொற்பொழிவுகள் ஆற்றி மதிப்புச்செய்யப்பட்டுள்ளார்.

இன்னும் அருள்நெறியும், அறநெறியும் தழைத்தோங்கச் சைவசமயத்தையும், தமிழையும் வளர்த்து வருபவர்களும், ஈழத்துப் பெரும் புலவர்கட்கெல்லாம் காலத்திற்குக் காலம் பட்டங்களும் பரிசில்களும் வழங்கி ஆதரித்து வந்தவர்களுமான அபிடேக பரம்பரையைச்சார்ந்த ஆதீனங்களுள் ஒன்றான திருவாவடுதுறை ஆதீனத்தார் செவிக்கும் அம்மையார் நாவன்மையும் புலமையும் எட்டவே, ஆதீனத்தார் சார்பில் 1973 ஒக்தோபரில் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை விழாவிற்கு அழைப்புச் செய்து, உரை நிகழ்த்துவித்து உள்ளம் பூரித்ததுடன், திருமுறைக் கருத்தரங்கில் மாதர் பகுதிக்குத் தலைமையுந் தாங்கச் செய்து, ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவமுஞ் செய்தார்கள். ஈழம் திரும்பி வருகையில் பலாலி வான் ஊர்தி நிலையத்தில் பெரும் தொகைச் சைவ அன்பர்களாலும், பள்ளி மாணவர்களாலும் வரவேற்றுபசாரஞ் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து பல இடங்களிலும் இவருக்கு வரவேற்புபசார வாழ்த்துக் கூட்டங்கள் நடந்தன.

**சேவைநலம் பாராட்டு :** செல்வி தங்கம்மா சைவத்திற்குந் தமிழிற்குஞ் செய்து வரும் சேவை நலத்தைப் பாராட்டி, 1973 ஆகஸ்டில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர் முதன் முதலாக விழாவெடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**பட்டங்கள் :** பயிற்றப்பட்ட முதலாந்தர ஆசிரியர், பண்டிதர், சைவப்புலவர் ஆயவை இவர் பெற்ற கல்வித் தகைமைச் சான்றுப் பட்டங்கள். சொல்வித்தகத்திற்காகப் பெற்ற பட்டங்கள் விவரங்கள் :

| | ஆண்டு | | பட்டம் | வழங்கியோர் |
|---|---|---|---|---|
| 1. | 1966 திசம்பர் | ... | செஞ்சொற் செம்மணி | மதுரை ஆதீனம் |
| 2. | 1970 ஆகஸ்ட் | ... | சிவத்தமிழ்ச் செல்வி | காரை – மணிவாசகர் சபை |
| 3. | 1971 திசம்பர் | ... | சித்தாந்த ஞானகரம் | காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் |
| 4. | 1972 பெப்பிரவரி | ... | சைவதரிசனி | இராஜேஸ்வரி பீடாதிபதி (தமிழ்நாடு) |
| 5. | 1972 ஏப்பிரல் | ... | திருவாசகக் கொண்டல் | சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கம் |
| 6. | 1973 பெப்பிரவரி | ... | திருமுறைச் செல்வி | வண்ணை - வைத்தீசுவரன் தேவஸ்தானம் |
| 7. | 1974 ஜனவரி | ... | சிவமயச் செல்வி | ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் |

துர்க்கை அம்மன் துதிபேசும் பொற்கொடி தங்கம்மா நீடு நல்நல வாழ்வு வாழ வைத்தருள் பெருமானே என அவனடி இறைஞ்சி வாழ்த்தி வணங்குவோமாக.

— தொண்டர் தொண்டன்

*Space Donated*

*by*

V

# ANANDHA STORES

Dealers in Textiles

105, Bankshall Street,

**COLOMBO 11.**

*Cable*: VINAYAGAR 'Phone: 27643

*With best Compliments from:*

# MERCANTILE CORPORATION LIMITED

Suppliers of

Concentrated Latex and Makers of

## "SLEEP-EZE"

Rubberised Fibre Mattresses and Cushions.

No. 263, Sea Street,
P. O. Box 440,
COLOMBO 11.

Telephone: **31913-6**    Telegrams: **"PRODUCE"**

*Showroom at*

## N. K. KALIAPPA PILLAI & Co.

No. 234, Main Street,
COLOMBO 11.

Telephone: **25618**

*With Best Compliments*

*from*

★

Messrs **RANJANA STORES**

52, BANKSHALL STREET,

COLOMBO - 11

*With Best Compliments*

*from*

**Vijaya Corporation**

243, MAIN STREET,

COLOMBO - 11

*With Best Compliments*

*from*

**ESESCEE (CEYLON) LTD.**

**169, Second Cross Street,**

**COLOMBO - 11.**

*With the Best Compliments from*

# Letchimi Textiles

**48, SECOND CROSS STREET,**

**COLOMBO 11.**

**For Fashionable Sarees, Suitings &**

**Palayakat Sarongs**

*Visit*

# S. P. PERIANNA PILLAI & CO.

180, Second Cross Street,

COLOMBO 11.

*With the Best Compliments from*

# SARAVANAS

TEXTILE MERCHANTS AND SAREE SPECIALISTS

**148, Main Street,**

**Colombo 11.**

*Dial* : **20077**

# LEYDEN

**BANIANS & SOCKS**

**STOCKISTS**

# LOTUS STORE

**157, SECOND CROSS STREET,**

**COLOMBO 11.**

*Phone* : 22285

*Grams* : 'LOTUS'

With Best Compliments
from

# INDO CEYLON LEATHER CO. LTD.,

80, Prince Street, Pettah,

COLOMBO-11.



எங்கள் ஸ்தாபன உரிமையாளர்களும்
ஊழியர்களும்
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
செந்தமிழுக்கும் சிவநெறிக்கும்
ஆற்றும் சேவையைப் பாராட்டுகிறோம்.

# ஸ்ரேளிங் புறடக்ஸ் லிமிடெட்

99, பிரதான வீதி,

கொழும்பு-11.

With Best Compliments from

# Lalitha

Jewellery Mart

Jewellers - Pawn Brokers

**99, 101, 103, 105, SEA STREET,**
**COLOMBO - 11.**

With Best Compliments from

# NITHYAKALYANI JEWELLERS

**40, SEA STREET,**
**COLOMBO 11.**

உ

# செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# சேவையைப் பாராட்டி

பிரமாதீச ஞூ தை மீ 13-ஆம் நாள் (26-1-1974) சனிக்கிழமை

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில்

அகில இலங்கை இந்து மாமன்ற அங்கத்துவச் சங்கங்களும்
இன்னும் பல இலக்கிய, கலாசார, சமய தாபனங்களும் ஒருங்கிணைந்து
எடுத்த விழாவின்போது அன்னாருக்கு வாசித்தளிக்கப்பட்ட

# வாழ்த்து மடல்

தங்கமும் பொன்னும் பொங்குநல் வளமெலாம்
மங்களத் தொடுவளர் துங்கமல் லாகத்து
அப்பாக் குட்டி அருந்தவப் புதல்வர்
இப்பார் வாழ்வெலாம் இயற்றமிழ் வாழ்வெனக்
கொண்டுசெந் தமிழும் குணத்திரு முறையுடன்
பண்டுறு சைவமும் பாங்கொடு வளர்க்கும்
நெறிதமக் குரித்தென நினைந்து முனைந்துசெய்
பொறிதழு வியவுயர் புனித வதியெனப்
பாவலர் நாவலர் பண்பினர் அன்பினர்
யாவரும் வாழ்த்தும் யானுடைத் தவத்தினர்
அமிழ்தினும் இனிய தமிழும்ஆங் கிலமும்
இமிழ்திரை நாப்பண் இருப்பவர்க் குரைக்க
வல்லவர் ஆகி மாட்சியா சிரியர்
எல்லவர்க் கும்பயிற் றியல்புறு கல்லூரித்
தேர்வடைந் திறைவியாய்த் திகழ்பவர் பண்டிதர்
தேர்விலும் வென்றவர் சிவநெறிப் புலமையும்
எய்தினர் சித்திநன் றிலங்கைக் கொழும்பொடு
மைபதிரத் தெல்லிப் பழைப்பெரு மக்கள்
கல்லூரித் தமிழ்க் கணக்காய் வாளராய்
நல்லூரி னர்புகழ் நவிலப் போதக
காரியத் தினராய்க் கண்ணியம் சான்ற
சீரிய தவத்தார் சித்தாந் தப்பெரு
நூலறி வுடையார் நுண்மாண் நுழைபுலம்
சாலமு குனத்தினர் சைவமே உயிரா
வாழ்வினர் தாழ்விலா வண்மையார் பேச்சால்
வாழ்வினை விழையா மாட்சியார் மலேயா
தமிழகம் எங்கும் சைவத் தமிழ்ச்சொற்
பொழிவுசெய் தெவரும் போற்றத் திகழ்பவர்
ஒழிவற நிறைந்தசை வொழிந்துறை சிவனடி
வழிபடும் கரத்தர் மனத்தர் சிரத்தர்
வெற்றித் திருநிலை விளங்குநற் பணியெலாம்
முற்றித் திகழ்வுற முடித்துக் களிப்புறும்
பெற்றியர் தருமம் பெருமையிற் புரிந்தூர்
சுற்றிலும் உளர்மிகத் தொழுதுநன் றெய்தப்
பொருளும் மொழியும் பொழிந்துணர் வகல
அருளும் அன்பும் அமைதியும் அடையத்
திருமுறை மடமெனத் தெளிவகம் தோற்றினர்
ஒருமுறை யெழுதுநா லுதவினர் பால
ஞானோ தயமெனும் நற்சபா மண்டபம்
தானே கட்டுவித் தவர்தமக் கிணையிலர்
சித்தாந்த ஞான கரம்செஞ்சொற் செம்மணி
சிவத்தமிழ்ச் செல்வி சீர்ச்சைவ தரிசனி
திருமுறைச் செல்வி திருவாசகக் கொண்டல்
வருமிவற் றொடுபிற வழங்குபல் பட்டம்
மருவிய தமிழ்த்திரு வடிவாய் ஒளிர்பவர்
மண்புகழ் அண்ணா மலைப்பல் கழகமும்
பண்புகழ் ஈழத்துப் பரசிவ னடியார்
திருக்கூட் டமும்நல்லூராத் திருஞான சம்பந்தர்
பெருக்கூட் டனிமடம் பெம்மான் மதுரை
ஆவனி மடம்ஆ வடுதுறைத் திருமடம்
மேவரும் மலேயா விழைபல சங்கமும்
பாராட் டியபெரும் பாக்கிய வதியாம்
காராட் டியவண் காமலர்த் திருமகள்
சொற்பொருட் பொழிவுத் தொகைபல பெருது
நற்பெரும் புகழெனும் நன்மகட் பெற்றுங்
கன்னியா மன்னிப் பொன்வியை வென்றவர்
முன்னிய கருணையால் முழுதுணர் ஞானி
கச்சியின் மேயமெய் கண்டர்சந் தானம்
இச்சகம் போற்ற எழில்சிவ நூற்பொருள்
விரித்துரை செய்வுழி மெய்யுணர் சீடருட்
பிரித்துவே றுரையிசை பெற்றசீர் மிக்கவர்
அந்தமிழ் புகழுடை அகில இலங்கை
இந்துமா மன்றமும் ஏனைப்பல சபைகளும்
தாபனம் பலவுடன் தனிப்பெரி யார்களும்
சோபனம் எடுக்கும் யாவரும் வாழ்த்துதும்
வாழ்கதங் கம்மையார் வாழ்க
சூழ்கதிர் மதிவாழ் துணையும்நன் இனிதே.

'சிவம்'

## அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்

# வாழ்த்துரை

காலத்துக்குக் காலம் எங்கள் நாட்டில் தோன்றிய அறிஞர்களும், சமயத் தொண்டர்களும் சைவத்தினதும், தமிழினதும் மேம்பாட்டுக்காகத் தமது வாழ்க்கையைப் பூரணமாக அர்ப்பணித்து அயராது பணி புரிந்து வந்துள்ளனர். இந்த மரபின் தொடர்ச்சியாக எமது நாட்டில், இப்போது சைவத் தமிழ்ப் பணி புரிந்து வருபவர் செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களாவர்.

செல்வி தங்கம்மா தமிழ் இலக்கண, இலக்கிய அறிவுமிக்க பண்டிதர். சித்தாந்த ஞானமும் திருமுறைகளின் அறிவும் நிரம்பப் பெற்றவர். சமயத் துறையில் புலமை மிக்கவர். சரஸ்வதி தேவியின் கடாட்சம் பூரணமாகக் கிடைக்கப் பெற்ற இவரின் கணீரென்ற குரல், கம்பீரமானது. இவரின் சொற்பொழிவுகள் கேட்போரைப் பிணிக்கும் தன்மை வாய்ந்தவை. இத்தனை தகைமை கொண்ட செல்வி தங்கம்மா, தமது வாழ்க்கையைச் சைவத்தமிழ்ப்பணிக்கென அர்ப்பணித்திருப்பது, சைவத்தமிழ் உலகத்தின் அதிட்டமேயாகும்.

இவர் தமது பேச்சாற்றலாலும், சமய ஞானத்தாலும், இலங்கையில் மட்டுமன்றித் தமிழகம், மலேசியா முதலிய நாடுகளிலும் புகழ்க்கொடி நாட்டியுள்ளார். இவரது பெயருக்கு முன்னுள்ள பட்டங்களே இதற்குச் சான்றுகளாகும்.

சைவசமய தத்துவங்களை விளக்க வல்ல அறிவும் ஆற்றலுமுடையவர்கள் அருகியுள்ள இக்காலத்தில், செல்வி தங்கம்மா போன்றோரின் பணி ஊக்குவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் அவரின் சேவையைப் பாராட்டி அகில இலங்கை இந்து மாமன்றத்தால் எடுக்கப்படும் விழாவும், அதனை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலரும், அவரது பணிக்கு மேலும் ஆதரவளிப்பனவாக அமையுமென நம்புகின்றேன்.

செல்வி தங்கம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளும், பூரண தேகாரோக்கியமும் மற்றும் எல்லா நலன்களும் கிடைக்க அருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, வாழ்த்துகின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

கொழும்பு.
7 – 1 – 1974

வீ. சிவசுப்பிரமணியம்
இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர்

Ministry of Posts and Telecommunication
Overseas Telecommunications Service Building

Duke Street
Colombo 1
Ceylon

*From*: The Minister of Posts and Telecommunications

*Telephone* : 29567–29112

தமிழும் சைவமும் எமது இரு கண்கள். இரு கண்களில் எதற்கு ஊறு நேரிடினும் பார்வை பாதிக்கப்படும். அதைப் போன்றே தமிழின் வளர்ச்சி தளர்ந்தாலும், சைவம் நலிந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வு குன்றும்.

தமிழையும் சைவத்தையும் அணைத்து இணைத்து வளர்ப்பவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். எமது ஈழத் தாய்நாட்டில் மட்டுமன்றி, தமிழ் நாட்டிலும் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் தமிழையும் சைவத்தையும் புகழ் மணக்கச் செய்தவர் அவர்.

ஈழத்து எழுத்தாளர்களையும், பேச்சாளர்களையும், கல்விமான்களையும் கௌரவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும் என்பதை நான் நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருபவன். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பாராட்ட அகில இலங்கை இந்துமாமன்றம் எடுக்கும் விழாவை வாழ்த்துகின்றேன். பண்டிதையவர்களின் ப்ணி மேலும் சிறக்க இது உதவட்டும்.

செ. குமாரசூரியர்.
தபால் தந்தித் தொடர்பு அமைச்சர்

உ
சிவசிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ காசி மடம்,
திருப்பனந்தாள்,
P. I. N. 612504
(தஞ்சை ஜில்லா)

# ஆசியுரை

மருணீக்கியாரைத் திருநாவுக்கரசராக்கியது திலகவதியார். கூன் பாண்டியனை நெடுமாற நாயனாராகத் திகழச் செய்தது மங்கையர்க்கரசியார். ராசராச சோழனைச் சிவபாத சேகரனாக்கியது அவனது தமக்கையாகிய பெரியகுந்தவையார். இங்ஙனம் பண்டு சைவத் தமிழ் மங்கை நல்லார் பலரும் சைவமும் தமிழும் சிவபக்தியும் வளர்ந்தோங்க ஆவன செய்தமை தமிழ்நாட்டு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. இங்ஙனம் தமிழறிந்த மகளிர் சிலர் சிவத்தொண்டில் ஈடுபட்டுச் சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த தொண்டுகள் பல புரிதல் கண்கூடு. அத்தகைய வழியில் சென்று பலருடைய பராட்டுதலுக்கு உரியவராக ஈழத்துப் புலவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் திகழ்வது அறிய மகிழ்ச்சி. தாய்க்குலம் சிவத்தொண்டு புரிந்தால் சைவம் சிறக்கும், வளரும். அங்ஙனம் தொண்டாற்றும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குச் சிவஞானச் செல்வம் பல்கி வளர்க எனச் செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சுபம்

சிவசிவ

உ
சிவமயம்

SRI - LA - SRI
**Ambalavana Pandarasannadhi Avl.,**
ADHEENAKARTHAR
**Thiruvavaduthurai Mutt.**

*Thiruvavaduthurai*
*(Thanjavur Dt.)*

# ஆசியுரை

சிவநெறியும் செந்தமிழும் மக்கள் தம் மன இருள் நீக்கித் தூய்மை செய்து எல்லா நலன்களையும் கொடுக்கவல்லன. சிவநெறியைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் 'ஆரியத்தொடு செந்தமிழ்ப்பயன்' எனப் போற்றுகின்றார்; செந்தமிழைச் சேக்கிழார் அடிகள் 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்' எனச் சிறப்பிக்கின்றார். சிவபிரான் உயர் மதிற்கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழையும் அதன் பயனாகத் திகழும் சிவநெறியினையும் ஈழத்தில் மட்டுமன்றி மலேயாவிலும் நந்தமிழ் நாட்டிலும் விளக்கி விரிவுரை ஆற்றிவரும் சைவப்புலவர் பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் நம் பாராட்டிற்கு உரியவர்களே.

அவர்களைப் பாராட்டு முகத்தான் அகில இலங்கை இந்துமாமன்றம் விழா ஏற்பாடு செய்வதும், விழா மலர் வெளியிட இருப்பதும் நமக்கு மிகுந்த உவகையை விளைக்கின்றது.

விழா நன்கு நடைபெறவும், விழாமலர் நல்ல கட்டுரைகளைத் தாங்கிக் கற்போர் உள்ளத்தில் அருளொளி மிகுந்து சிவமணம் கமழச் செய்யவும், விழாவிற்கு உரியவர் மேன்மேலும் சிறந்து எல்லா நலன் களும் பெருகப்பெற்று நீடினிது வாழவும், நமது பூசாமூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராசப்பெருமானுடைய செம்மலர் நோன்தாட்களைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**திருவாவடுதுறை ஆதீனம்,**
திருவாவடுதுறை.

# நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

204, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்,
(இலங்கை)

## ஞாலம் நின் புகழேயாக வேண்டும்

சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்தரத்னுகரம் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் செய்துவரும் சேவை பாராட்டுதற்குரியது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் சமய சேவையில் ஈடுபட்டுத் தன்னலமற்ற சேவை புரிந்த அன்னருக்கு இன்று பல சமயஸ்தாபனங்கள் பாராட்டு விழா நடத்துவது போற்றத்தக்க ஒரு செயலாகும்.

பண்டிதை அவர்களைப் பல்லாண்டுகளாக நாமறிவோம். அவர்கட்கு முதலாவது பட்டமளிப்பு எமது ஆதீனத்தில் நடைபெற்றது. இன்று தமிழகம், மலேஷியா ஆகிய இடங்களில் சமயப்பணியாற்றி ஈழத்திற்குப் பெரும்புகழ் தேடித்தந்துள்ளார்கள். தமிழ்கூறும் உலகெல்லாம் அவர்பணி பரவ வாழ்த்துகிறோம். மங்கையர்க்கரசியின் மனேதிடமும், திலகவதியாரின் தியாக உள்ளமும் ஒருங்கமைந்த பண்டிதை அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து சமயப்பணியாற்ற எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாயண்ணலை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

பண்டிதை அவர்கட்குச் சைவ ஸ்தாபனங்கள் செய்யும் பாராட்டு தமிழுக்கும் சைவத்திற்கும் செய்யும் பாராட்டு.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகள்**

உ

HIS HOLINESS THIRUVARUL THAVAYOGA
Sri-la-Sri Somasundara Sri Gnanasambanda
Desika Paramachariya Swamigal
MADURAI AADHEENAM

70, South Avani Moola St.,
Madurai (S. India)

## ஆசிச்செய்தி

சைவப்புலவர், பண்டிதர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது தொண்டு மேன்மேலும் சிறந்து ஓங்கவும், பாராட்டு விழாவில் கலந்து கொள்கிற அனைவரும் எல்லா நலங்களும் பெற்றுத் திகழவும், அகில இலங்கை இந்து மாமன்றம் அறப்பணிகள் பல புரிந்து, மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்குமாறு செய்யவும் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல எம் அங்கயற் கண்ணி பங்கனும் ஆவலாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்.

உ
சிவமயம்.

## மெய்கண்டார் ஆதீனம்

சைவ நாடெங்கும் சைவ சமய அடிப்படையில் ஆத்மிக தர்மத்தைச் சிவச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மக்கள் அரிதாக உணரும் முறையில் உணர்தி வரும் தொண்டு மிகவுஞ் சிறந்தது. அறவுரையும் அருளுரையும் வழங்கிச் சைவ மக்களை ஆன்ம நாட்டத்தில் ஈடுபடச் செய்வது அம்மையாரது செயற்கரிய செயல். அம்மையாரைச் சைவ சமயத்துக்கோர் அணிகலமென்றே நாம் போற்றி ஊக்கம் கொடுத்தல் வேண்டும்.

ஔவைப்பிராட்டிபோல் இறைவனின் பேரருள் பெற்று இத் தொண்டினைத் தளராது இயற்றிவர அம்மையாரை மனமாரத் திருவருளை முன்னிட்டு வாழ்த்துகிறோம்.

வாழ்க அடியார்கள். வாழ்க அடியாரைக் காக்கும் அருள்நெறி.
சிவம்.

ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள்.

# ராமகிருஷ்ண மிஷன்

## ஸ்ரீலங்கா கிளை,

புலனின்பம் பெறுவதையே இலட்சியமாகக்கொண்டு பிறப் பெடுத்ததன் நோக்கமே இதுவென்பதைச் சிந்தியாது சுயநலம் மட்டும் பேணி வாழும் மக்கட் சமுதாயத்துக்கு சமய வாழ்வு இது என்பதைத் தனது கருத்துப் பொதிந்த சொற்பொழிவுக ளால் விளக்கிவரும் சைவப் புலவர், பண்டிதை தங்கம்மா அப் பாக்குட்டி அவர்களது தொண்டு பாராட்டற் குரியது. அன்னார் தனது பிறந்த நாட்டில் மட்டுமன்றி, தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஆகிய இடங்களிலும் ஆற்றி வரும் பணி கண்டு மகிழ்கிறோம்.

மக்கட் சமுதாயம் பேச்சைப்போற்றிப் பாராட்டுவதோடு மட்டும் அமையாது, கேட்டதைப் பின்பற்றி வாழவும் முயற்சிப் பதாக. சாதாரண மனித வாழ்வு சமய வாழ்வாக மாறி, தெய் விக வாழ்வாகி, ஆத்மானுபூதிமான்களாகி நிலைத்த பேரின்பப் பேறுபெற முயற்சிப்பதாக. அம்மையாரவர்கள் தொண்டைத் தமிழ் உலகம் நன்முறையிற் பயன்படுத்துவதாக. அன்னார் பல்லாண்டு வாழ்ந்து, நற்பணி புரிந்துவர இறையருளை வேண்டி எனது ஆசிகளையும் ஈந்து உவக்கிறேன்.

சுவாமி பிரேமாத்மானந்தா.

# பாராட்டுரைகள்

அம்மையாரது சொற்பொழிவுகள் எளிய இனிய நடையில் அமைந்து அவையோரைக் கவர்ந்துநிற்கும் தன்மையன. அவர் பேசும் பொருளும், அதை அவர் சொல்லும் முறையும் கற்றோர் மற்றோர் ஆகிய அனைவரையும் வசீகரித்து நிற்பன.

அம்மையார் எம் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தில் சேக்கிழார் விழாக்களின்போது ஆற்றிய அரிய விரிவுரைகளுக்காகச் சேக்கிழார் மன்றம் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. அவர் தொண்டு மேன்மேலும் சிறக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அகில இலங்கை சேக்கிழார் மன்றம்.**

சைவப் புலவர் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஈழத்தின் தூண்டாமணி விளக்கு. ஈழத்தின் வரலாற்றிலேயே சைவத் தமிழ்ப் பெண்களுக்கு முதலிடம் தந்து நிற்பவர் அவரே. அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்துக்கு ஈன்றுளுமாய் எந்தையுமாகியவர் அவரே! அச்சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவராயிருந்து அதன் வளர்ச்சிக்கு இன்றும் அயராது உழைத்துவருகின்றார்.

1965-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் வைர விழா எடுத்தது. அன்று ஈழத்துப் பேச்சாளர்களில் ஒருவராகச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் தென்னிந்தியா சென்றார். சமாஜத்தின் வைர விழாவின் மாதர் மகாநாட்டில் கலந்து சொற்பொழிவாற்றி, ஈழத்திற்குக் கௌரவத்தினை யளித்தார்கள். கன்னியாகவிருந்து கன்னிப்பேச்சை நல்கிச் சிறப்புறச் செய்தமை ஒன்றே அவரின் எதிர்காலம் மிளிரக் காரணமாகியது. அதனோடு இணைந்து அவரின் சொற்பொழிவு அண்ணாமலைச் சர்வகலாசாலையிலும் நடைபெற்றுப் பலரதும் பாராட்டுக் கிடைத்தமை இன்று அன்னாரின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்ததென்று கூறலாம்.

அவர் புகழ் சுயமாக இயங்கிப் பெருமை தருவதற்கு அவர் ஸ்தாபித்த சைவப் புலவர் சங்கமும் காரணமாயிற்று என்று கூறுதல் மிகப் பொருத்தமாகும்.

ஈழத்தில் தோன்றிய செல்வி, கடல்கடந்த நாடுகளிலும் தம் சொல்வளப்பேற்றினால் மதிக்கப்படுவது நமக்கே பெருமை தருவதாகும். அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் விழாவெடுத்து மலர் வெளியிட்டுப் பாராட்டுவதில் நாமும் மகிழ்ச்சியடைகின்றோம். கேட்பார்ப் பிணிக்குந்தகைய. கேளாரும் வேட்பமொழியும் சொல்வளப் பேறுபெற்ற செல்வியவர்கள் பல்லாண்டு பிணி, மூப்பின்றிச் செல்வியாகவே வாழ்கவென்று செல்வன் கழல் ஏத்துகின்றோம்.

**அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம்.**

மனித வாழ்க்கையின் குறிக்கோளினைச் சிறு வயதினிலேயே நன்குணர்ந்து, 'இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' என்ற நாவலர் பெருமானின் வாக்கிற்கமையவும், 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு' என்ற மணிவாசகப் பெருமானின் திருவாசகக் கூற்றுக்கமையவும் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட பெரியார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். ஆழ்ந்த சமய அறிவு, சைவ சமயத்தின் தத்துவங்களை இலக்கிய ரசனை ததும்ப விளக்கும் திறன், இனிய சொல்லாட்சி, எளிய நடை, மக்களை ஈர்த்துத் தன்வயப்படுத்தும் உருக்கம், ஆகியன அம்மையாரின் சொற்பொழிவுகளில் பரந்து தொனிப்பவை. இதனாலன்றோ, இத்தரணியில் சைவமும், தமிழும் எங்கெல்லாம் பேணி வளர்க்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் புகழ்பரப்பி வாழ்ந்துகொண்டிருக்கின்றார் அம்மையார் அவர்கள்.

சைவத்துக்கும், தமிழுக்கும் அம்மையார் செய்துவரும் பணிகள் மேலும் மேலும் சிறந்து விளங்க, அம்பலத்தரசன் அருள் பாலிப்பானாக.

**அஞ்சல் தொலைத்தொடர்புத் திணைக்கள இந்து ஊழியர் கழகம்.**

பண்டைய பேரறிஞர்கள் பலர் வாழ்ந்த காலத்தில் பாராட்டப்படாமல், மறைந்த பின்புதான், பாராட்டப்பட்டிருக்கின்றனர். பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அவர்கள் வாழ் நாளிலே பொன்னாடை போர்த்தவும், பாராட்டுரை வழங்கவும் விழா எடுத்த ஈழ நாட்டு மாமன்றம் பாராட்டுக்குரியதே. அன்னார் சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் ஆற்றியிருக்கின்ற தொண்டு அளப்பரியது. அன்னார் சிங்கை, மலேசியா நாடுகளுக்கு இருமுறை வருகை தந்து பல ஆலயங்களிலும், மன்றங்களிலும் பேருரை ஆற்றியிருக்கிறார்கள். நாவலர் பெருமான் ஈழநாட்டில் பிறந்து தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் புத்துயிர் ஊட்டினார். அவரது பெயர் தமிழ் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவர் வழி வந்த ஈழநாட்டுப் பண்டிதையும் தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் அரும்பெரும் பணியாற்றி வருகிறார். இவருடைய பெயரும் தமிழ் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பது திண்ணம். பண்டிதை வாழும் காலத்தில் நான் வாழ்வது பற்றியும், அவரது சைவ சமய இலக்கியப் புலமை செறிந்த சொற்பொழிவுகளைக் கேட்கின்ற வாய்ப்புக் கிடைத்தமை குறித்தும் பெருமையடைகிறேன். அன்னார் பல்லாண்டு வாழ்ந்து சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்ற வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**க. அம்பலவாணன், சிங்கப்பூர்-19.**

ஈழத்தின் சமயப் பேச்சாளர்களில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்குத் தனியான ஓர் இடமுண்டு. அதேபோல ஈழத்திலுள்ள மத சார்பான இயக்கங்களில் இந்து மாமன்றமும் தனியான ஒரு சிறப்புப்பெற்றது.

கடந்த சுமார் இருபத்தைந்து வருடங்களாக 'செல்வி'யாகவே இருந்து ஈழத்தில் சமயத்துறைக்கு அவர் ஆற்றிவரும் சேவை அளவிடற்கரியது. இலங்கையில் மட்டுமன்றிக் கடல்கடந்து சென்று மலேஷியா, சிங்கப்பூர், இந்தியா எங்கணும் தமது 'கணீர்' என்ற குரலில் சமய உண்மைகளை விளக்குவதன்மூலம் ஈழத்தின் புகழைப் பரப்பி வருபவர் இவர். திருவாவடுதுறை ஆதீனமும் அண்மையில் இவரைக் கௌரவப்படுத்தியுள்ளது

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையைப் பாராட்டி இந்து மாமன்றம் எடுக்கும் விழா எண்ணிய சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**சி. அருளம்பலம், பா. உ. நல்லூர்.**

## மங்கையருள் மாணிக்கம் மகிழ்வுடனே வாழ்க

தங்கம்மாப் பேருடைய தண்மதியே வாழ்க!
தாரணிக்கோர் தாயாகி வந்தாய் நீ வாழ்க!
அங்கமெலாந் திருநீறு அணிந்தாய் நீ வாழ்க!
ஆண்டினிலே ஒருநூற்றுக் கதிகமாய் வாழ்க!
துங்கவர்தம் துயர்துடைத்த தூமணியே வாழ்க!
துரியநிலை தந்தெம்மைத் தூக்கிவிட்டாய் வாழ்க!
மங்காத புகழ்கொண்டு மாநிலத்தில் என்றும்
மங்கையருள் மாணிக்கம் மகிழ்வுடனே வாழ்க!

'ஆத்மஜோதி'

பாரொடு விண்ணும்ப் பரந்து சிவபுரத்தில் சீரொடு பொலியும் எம் பெருமானே! என்னை "நீ" வருகவென்று அழைத்து ஆண்டு அருள் புரியாயெனில், கடலால் சூழப் பட்ட இவ்வுலகில் வாழ்கிலேன் என்று இரந்து இறையன்பில் மூழ்கிப் பேரின்பமடைந்த அன்பர்கள் பரம்பரையில் தோன்றிய, சைவமக்களாகிய நம்முடன் தோன்றி, அடிய வர்க்கு எளியவராகிய நம் இறைவன் புகழைப் பாரெலாம் பரப்பும் சைவப்புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அரியதொண்டை, வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். அவனருளாலே அவன் புகழ் பரப்பும் சைவ அன்பர்கள் அனைவருக்கும் இவ்விழா ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும்.

ஆரையம்பதி இந்து மன்றம்.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே எனக்கு அறிமுகமானவர். அந்நாட்கள் தொடங்கி அறிவு விருத்தியும் கலைவள மும், ஆராய்ச்சி ஆற்றலும், வாக்கு வன்மையும் தாம் "எண்ணும் போது எளிதெய்த" அவருக்குக் கலைமகள் கடாட்சம் துணைநின்றதை அவருடைய சாதனைகளைக் கொண்டு நாம் தெளியக்கிடக்கின்றது. தங்கம் எப்போதும் தங்கமே. என்றாலும் சைவப்பணிக்கும், தமிழ்ப்பணிக்கும், தன் வாழ்க்கையை முற்றிலும் அர்ப்பணித்து. ஆத்மிக விஷயங்களைச் சொற்பொருள் நயம்பொலிய இன்னிசை கலந்த பிரசங்கங்கள் மூலம் விரித்துரைக்கும் தங்கம் இது. மேலும் நம் நாட்டிலும், பிறநாட்டிலும் தன் அறிவாற்றலைப் புலப் படுத்தி, பல வாழ்த்துக்களையும் விருதுகளையும் பெற்ற தங்கமன்றோ! அது மாற்றிலும் மெருகிலும், மதிப்பிலும் மாட்சியிலும் மேன்மேலும் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

சைவநீதி நிலைக்கச் செய்யவும் பெண்குலப் பெருமையை நிலைநாட்டவும் அருஞ் செயல்கள் புரிந்துவரும் தங்கம்மா ஓர் அபூர்வப் பிறவி; அற்புதப் பெண்மணி. அவர் நீடூழி வாழ, அவருடைய பணிகள் மேன்மேலும் சிறக்க எம்பெருமானை வாழ்த்துகிறேன்

கோ. ஆழ்வாப்பிள்ளை, கொழும்பு.

சிவமணங்கமழும் செல்வியே! சீர்சேர்ந்த செந்தமிழ்த்தாய் தந்த உயர் செல்வமே! நம்மீழத் திருநாட்டின் மணிவிளக்காய் விளங்கிடும் நல்லம்மையே! நாநலம் சேர் பண் பாட்டுத் தமிழ்பொலிந்த பண்டிதையே! பாரேத்தும் சைவப் புலவர் திருமணியே! தாய் நாடு பெருமைபெற வெளிநாடு புகழ் பெருக்க, சீர்மேவி எம்முன்னோர் செல்வமெனும் பெருஞ் சைவப் பேறுகளை உலகோர்க்கு இன்மொழியால் அருள்கின்றீர். இது நமக்குப் பெரும் புகழையேதருகின்றது. இன்புடனே நீங்கள் மேன்மேலும் புகழ்பரப்பி நீடாண்டு வாழ இறைவன் அருளை வேண்டுகிறோம்.

இந்துசமய விருத்திச் சபை, குருக்கள்மடம்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் பணி கண்டு இந்து இளைஞர் இறும்பூதெய்துகின்றனர். தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றத்தினை வழி நடத்தி வரும் அவர் ஏனைய இடங்களில் உள்ள இந்து இளைஞர்கட்கும் உறுதுணையாய் ஊக்கமளித்து வந்துள்ளார்கள். தமிழகத்திலும், மலாயாவிலும், சிங்கப்பூரிலும் உள்ள விபூதிதாரிகள் அனைவரின் ஒருமித்த போற்றுதலையும் பாராட்டையும் பெற்ற பண்டிதையாருக்குச் சிறப்பளித்துப் பாராட்டிப் பேசவேண்டியது ஈழத்தவரின் கடமையாகும். அகில இலங்கை இந்து மாமன்றத்தினர் முன்னின்று செய்யும் இப்பணிக்கு இந்து இளைஞர்களின் ஆக்கமும் ஊக்கமும் உண்டு. பண்டிதையார் நீடுவாழ்ந்து, நற்பணி புரிந்து, சைவத்தையும் தமிழையும் வளர்க்க இந்து இளைஞர்களின் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**இலங்கை இந்து இளைஞர் பேரவை, கொழும்பு.**

திருவருள் முன்னிற்க, சிவநெறியும் செந்தமிழும் சிறந்து விளங்கச் சிவப்பெரும் பணியில் தம்மை அர்ப்பணித்துள்ள சிவத்தமிழ்ச் செல்வி, சித்தாந்த ஞானகரம் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத் தமிழ் உலகிலே ஓர் பேரொளிப் பிழம்பாகத் திகழ்கிறார்கள். அவர்கள் பல்லாண்டுகளாகச் சிவநெறி விளக்கச் சொற்பொழிவுப் பணி ஆற்றி வருவதை ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் பெருமகிழ்ச்சியுடன் பாராட்டிப் போற்றுகின்றது.

அம்மையார் மேற்கொண்டு இயற்றி வரும் சிவப்பணி மேன்மேலும் சிறந்து, மக்கள் உள்ளத்து மாசகன்று திருவருளொளி பெருகச் செய்யவும், அவர்கள் எல்லா நன்மைகளும் நிரம்பப் பெற்று நீடினிது வாழ்ந்துவரவும், பொய்கண்டார்காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்டநாதனும் நடராசப் பெருமானின் செம்பொற் கழல்களைச் சிந்தையில் இருத்தி அச்சிந்தைகொண்டு பணிவன்புடன் வாழ்த்துகின்றோம்.

**ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், கொழும்பு.**

பிரதிபலன் கருதாது சென்ற பல ஆண்டுகளாக மிகப் பண்பாகவும் திறம்படவும் சமயத் தொண்டை ஆற்றி வருகின்ற சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவ மக்கள் அனைவரதும் பாராட்டுதலுக்கு உரியவர். அம்மையாரின் சொற்பொழிவில்லாத சமய மகாநாடுகளோ இலக்கிய மகாநாடுகளோ ஈழத்தில் இல்லை என்ற அளவுக்கு இவரின் புகழ் பரவியுள்ளது. அம்மையார் நீடூழி வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் நற்றொண்டாற்றுவதற்கு ஈழத்துச் சிதம்பரக் கூத்தப்பிரான் பேரருள் புரிவாராக

**ஈழத்துச்சிதம்பர தேவத்தானம், காரைநகர்.**

ஈழநாடு செய்த தவப்பயனாய் சைவமும் தமிழும் வளர்க்க அவதரித்த சிவத் தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டிக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தார் பாரட்டு விழா எடுப்பது சாலப்பொருத்தமானதே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அம்பலவாண நாவலர், காசிவாசிசெந்திநாதய்யர் போன்ற பெருமக்கள் தோன்றிய நம்நாட்டில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்குப் பெண் தெய்வங்கள் தோன்றவில்லையே என்ற குறையைப் போக்குவதற்கு வந்தவர்களே அம்மையார் அவர்கள். அவர்கள் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் நடக்கின்ற விழாவில் வருடந்தோறும் பங்குபற்றி சொற்பெருக்காற்றியும் பல்லாற்றானும் உதவி செய்தும் வருகின்ற தொண்டு பலரும் அறிந்ததே. அம்மையாரின் தொண்டு நிலைபெற எல்லாம் வல்ல கேதீஸ்வரப் பெருமான் திருவருள் புரியப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி! வளர்க அவர்கள் தொண்டு!

**ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்.**

கல்வியுஞ் செல்வந் தானுங் கதித்துயர் கலைகொண் டோங்கும்
தெல்லியூர் தன்னில் துர்க்கை திருவருட் செறிவு மிக்க
நல்லசீர் அப்பாக் குட்டி நாமவேள் குடும்பம் முன்செய்
பல்தவப் பயனுய் வந்த பண்புறு மகள்தங் கம்மா!

பாலரைப் பயிற்ற வல்ல பண்டிதா சிரியை யாயும்,
சாலவுஞ் சைவந் தேர்ந்த சற்பிர சங்கி யாயும்
ஈழமிந் தியாம லாயா எங்கணும் புகழ் மணக்குஞ்
சீல்மார் தங்கம்மாப் பேர்ச் சிவத்தமிழ்ச் செல்வி யாரே!

நாவலர் மரபு காக்க நான்றிரு பத்தைந் தாண்டு
சேவகஞ் செய்யும் நின்மேல் திருப்புகழ் சொல்லி வாழ்த்த
ஆவலுற் றிந்து மன்றம் அருவிழா வெடுத்தல் கேட்டுப்
பாவலோய் யாமுஞ் சொன்னேம் பரனருள் பரக்க வாழி!

உருவிலுந் திருவுற் றேங்கும் உத்தமி சுவை ததும்பத்
திருமுறை விளக்கஞ் சொல்லிச் சிவநெறி காட்டு முந்தன்
அருமுறை கேளா தோர்க்கும் ஆவலை யூட்டு கின்ற
பெருமையை உணர்வோம் ஔவைப் பிராட்டிபோல் வாழ்க நீடே!

**உருப்பராய் இந்து சமய விருத்திச் சங்கம்.**

சைவப் புலவர் பண்டிதர் செல்வி அப்பாக்குட்டி அம்மணீ! நீவிர் மலேசியா மக்கள் மகிழ்ந்து போற்றவும், தமிழ் நாடெங்கும் தமிழ் மணம் வீசவும் ஆற்றிய சைவச் சொற்பொழிவெல்லாம் நம் ஈழநாட்டின் புகழ் உலகெங்கும் பரவி ஓங்க வழி வகுத்துள்ளன. சைவப் பணியே தவப்பணியாக்கிய நின்புகழ் பரவுக! நீடூழி வாழ்க!

**ஓமந்தை இந்து மன்றம்.**

பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி ஒரு சிவச் செல்வி. 'சிவத் தமிழ்ச்செல்வி' என்ற பட்டம் ஈழத்தில் அவருக்குப் பொருத்தமாய் அமைந்ததுபோல, வேறு யாருக்கும் அமையவில்லை. சமயப் பேச்சாளர்களிலே நம் நாட்டின் முன்னணியில் நிற்கிறுர். பொருளோடும் இசையோடும் பேசிச் சமயத்திற்கு நல்ல தொண்டு செய்துவருகிறுர். சமயத் தொண்டு செய்பவர்கள் சிலர்தான். அதிலும் பெண்கள் மிகச் சிலர். அவர்களில் செல்வி தங்கம்மா செய்துவரும் சேவை மிகச் சிறந்தது. அவரின் சேவை மேலும் வளர்வதற்கு இறைவன் கருணை புரிவாராக.

**கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு.**

சைவப்புலவர் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய சமயப் பணியைப் பாராட்டுவது சாலச் சிறந்ததே. எங்கள் சமயத்திற்குக் கஷ்டங்கள் ஏற்படும் காலத்தில் நிமிர்ந்து நிற்பவர் சிலரே. நாமார்க்கும் குடி அல்லோம் என்று வீரத்தோடு அப்பர் சுவாமிகள் வழியிலே சைவ மக்களை வழிநடத்துவது பெரும் பணியாகின்றது. இந்தப் பாராட்டிலும், விழாவிலும் நானும் சேர்ந்து கலந்து கொள்ள மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

**சி. கதிரவேலுப்பிள்ளை, பா. உ. கோப்பாய்.**

பரங்கருணைத் திருவருளின் பரிசுபோல, ஈழம்வாழ் தமிழ் மக்கள் மத்தியில் விளங்கும் சைவப் புலவர் பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவமும் தமிழும், தழைத்தினிதோங்க இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிவரும் அருஞ் சேவையைப் பாராட்டுவது பொருத்தமானதுமட்டுமன்றி, சைவத் தமிழ் மக்களின் கடமையுமாகும். செல்வி தங்கம்மா அவர்கள் தமிழ்பேணும் தகைமையாளராகவும், சிவம்பெருக்கும் பெருந்தகையாகவும், சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்குகின்றார்கள். இந்நாட்டிலும், தமிழ்நாட்டிலும், மலேசியா சிங்கப்பூர் நாடுகளிலும், பல சபைகளிலும், சங்கங்களிலும், மன்றங்களிலும், மகாநாடுகளிலும் சொல்நயமிக்க, பொருள்நயம்செறிந்த, தமிழ் இலக்கியத் தேறலின் தெளிவு பொருந்திய பேருரைகள் பல நிகழ்த்தியிருக்கிறார்கள். அறம்பொருளின்ப அறவழிநின்று, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை விளக்கி, அவர்கள் செய்துவரும் அரும்பணி போற்றுதற்குரியது.

பெண்ணின் பெருமையை நிலைநாட்டி, இந்நாட்டிற்கே புகழீட்டுவதும் அவர்களது தனிச்சிறப்பாகும். தமிழ் வளர, சைவம் நின்றோங்க செல்வி தங்கம்மா வாழ்க, வாழ்கவே!

வே. க. கந்தசாமி, கொழும்பு.

செந்தமிழ் மொழிக்கும் சிவனெறி யதற்கும்
அந்தமில் தொண்டுகள் ஆற்றிடு செல்வி,
தண்டமிழ்ப் பண்டிதர், சைவப் புலவர்,
எண்டிசை போற்ற இலங்குதங் கம்மா
அப்பாக் குட்டி, ஆண்டவன் அருளால்
செப்புநற் பேறெலாம் செழிக்கப் பெற்றுக்
கன்னித் தமிழ்போல், கம்பன் கவிபோல்,
மன்னிப் பொலிக மகிழ்ந்து! என,
வாழ்த்தி மகிழ்வென் மனம்வாய் குளிரவே.

கம்பன் அடிப்பொடி (சா. கணேசன்), காரைக்குடி.

1. செந்தமிழின் திருவுருவே! சிவப்பொலிவே! கலைவிளக்கே! தெளிந்தஞான
விந்தை ஒளிர் செழுமணியே! விமலனருள் பெருநிதியே! மிகுசொன்மாரி
சிந்தைமகிழ்ந் தேபொழியுங் கொண்டலெனத் தமிழ்விளங்கு தேசமெல்லாம்
எந்தைஅருட் பணிபுரியும் பண்டிதைதங் கம்மாநீ டிலங்கிவாழ்க.

2. முன்னாளிற் சமணஇருள் மூடாது சிவநெறியை முயன்றுகாத்த
மின்னும்மங் கையர்க்கரசி யார்மீட்டும் பிறந்துபணி விளக்குமாபோல்
இந்நாளிற் பண்டிதைதங் கம்மாசெய் அருட்பணியா மிலங்குசேவை
தன்னாலிஞ் ஞாலமெலாந் தமிழ்மொழியுஞ் சிவநெறியுந் தழையுமாதோ.

3. நல்லைநக ராறுமுக நாவலர்தம் அடிச்சுவட்டை நயந்துபோற்றி
எல்லையிலா உவகையொடு நெறிகாட்டி மன்பதைசீ டேறும்வண்ணம்
சொல்லுசிவப் பிரசங்க மாரிதுய்த்தார் இங்கமுதச் சுவையேதுய்த்தார்
எல்லவரு மேற்றுசிவத் தமிழ்மணிதங் கம்மாநீ இனிதுவாழ்க.

களுவாஞ்சிகுடி சைவ மகாசபை.

“வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க” நால்வர் அவதரித்தனர். நால்வருக்குப் பின் நாவலர் என்பர் அறிந்தோர். நாவலருக்குப்பின் அம்மையார் தங்கம்மா என்றே சைவ உலகம் போற்றும் என்பதை யாரும் மறுப்பரோ?

சைவ சித்தாந்த சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள் முதலாம் சிவமணங் கமழும் நூல்களிற் பரந்துகிடக்கும் சிவநெறியினைச் செந்தமிழால் வாரி வழங்கி, புன் செயலினேடும் புலன்செயலை முத்திநெறியில் ஆற்றுப்படுத்தும் சொற்பதங் கடந்த செவ்விய பணியில் பெண்கள் திலகமாம் செல்வி தங்கம்மா அம்மையார் அல்லும் பகலும் ஓயாது உழைத்து வருகின்ருர் என்பதில் மிகையொன்றுமில்லை.

அம்மையாரின் தெய்விகச் சாயலும், தயையும், பொறையும், ஆன்ற அறிவும், சொல்விற்பனமும் அன்னரின் சைவப் பணியைச் சிகரமாய்க் கோடலின் தமிழ்நாடெங்கும் அவர் புகழ் நிறீஇயின.

சுகவாழ்வும் நீண்ட வாழ்நாளும் அம்மையாருக்கு அருளுமாறு இறைவனை வழுத்துவாம்.

**காரைநகர் சைவ மகா சபை.**

தமிழையும் சைவத்தையும் வளர்க்க அயராது பாடுபடும் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் இன்றுபோல் என்றும் வாழ்க.

**கிரான்குளம் இந்து இளைஞர் மன்றம்.**

நாவலர் பெருமான் நல்கிய நெறியின்
காவல ராகிக் கடல்சூ ழீழம்,
எல்லையிற் றிகழும் இந்தியத் தமிழகம்,
ஒல்லையிற் சிங்கை ஓங்குறு மலாயும்
சிவநெறி பரப்பும் செந்தமிழ்ச் சிவமணீ !
தவமணீ, செல்வி தங்கம் மாள்நின்
பணியால் முன்னுள் மும்மணி மாதரின்
அணிசெய் கொழுந்தாய் அணைந்தனை அதனுல்,
தேனெனுஞ் சிவநெறி தெளிவுறப் பெற்றனம்!
வான்புகழ் நினதே! வாழி, வாழியவே.

**கிருஷ்ணபாய் இந்து மாதர் சங்கம்,**
கல்லடி உப்போடை, மட்டக்களப்பு.

சைவப் புலவர், பண்டிதை, சிவத்தமிழ்ச் செல்வி, திருவாசகக்கொண்டல், தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முன்னைப் பிறவிகளில் ஈட்டிய கல்விச் செல்வம் இப் பிறப்பில் மலர்ந்து பிரகாசிக்கும் நற்பேறுடைமையால், பிறந்த நாட்டிலும் பிறநாடுகளிலும் பல பட்டங்களும் பாராட்டுகளும் பெற்று விளங்குவது நமது நாட்டுக்கே பெருமை தருவதாகும். அம்மையார் இன்னும் நீடூழியாக எல்லாச் சிறப்புகளுடனும் வாழவேண்டும் என்று வாழ்த்தி, அம்மையப்பர் அருள்புரியவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

**த. குமாரசுவாமிப்பிள்ளை, கொக்குவில்.**

தமிழும் சைவமும் எமது இரு கண்கள். இரு கண்களில் எதற்கு ஊறு நேரி டினும் பார்வை பாதிக்கப்படும். அதைப்போன்றே தமிழின் வளர்ச்சி தளர்ந்தாலும், சைவம் நலிந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வு ஒளி குன்றும்.

தமிழையும் சைவத்தையும் அணைத்து இணைத்து வளர்ப்பவர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். எமது ஈழத்தாய்நாட்டில் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் தமிழையும் சைவத்தையும் புகழ் மணக்கச் செய்தவர் அவர்.

ஈழத்து எழுத்தாளர்களையும் பேச்சாளர்களையும் கல்விமான்களையும் கௌரவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும் என்பதை நான் நீண்ட நாட்களாக வற்புறுத்தி வருபவன். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பாராட்ட அகில இலங்கை இந்துமாமன்றம் எடுக்கும் விழாவை வாழ்த்துகின்றேன். பண்டிதையவர்களின் பணி மேலும் சிறக்க இது உதவட்டும்.

செ. குமாரசூரியர், தபால் தந்தித் தொடர்பு அமைச்சர்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைத் தமிழ்கூறு நல்லுலகும் சைவ உலகும் நன்கு அறியும். அன்னார் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றி வரும் தொண்டு நாடெல்லாம் அறிந்ததொன்று. கேட்டார்ப் பிணிக்கும் தகைய, கேளாரும் வேட்ப மொழியும் சொற்பொழிவை குருநாகல் வாழ் சைவப் பெருமக்களும் பன்முறை கேட்டு இன்புற்றனர். இன்றும் "சுந்தரர் செந்தமிழ்" சைவமகா சபையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. மிக அண்மையில் தமிழ்நாடு சென்று இணையற்ற புகழீட்டிய பண்டிதை அவர்கள் தம் சைவப்பணியைத் திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணிகள் வரிசையில் தொடர்ந்து ஆற்றுவதற்குரிய தீர்க்க ஆயுளையும், உடல் நலனையும் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

குருநாகல் சைவ மகா சபை.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் செந்தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் ஆற்றிவரும் தொண்டுகளைப் பாராட்டுகிறோம். இன்றைய சைவமக்கள் பக்தியுடனும், பண்புடனும் வாழ்ந்து வருவதற்கு, கட்டுரைகள் மூலமாகவும், ஆங்காங்கு நேரில் சென்றும், செய்து வருகின்ற பிரசாரமே மூலகாரணமாகுமென்பதை அறிய அகமகிழ்கின்றோம்.

அம்மையார் செய்து வரும் பணிகள் மேலும் மேலும் சிறந்து விளங்கக் கௌரியம்மாள் சமேத திருக்கேதீச்சரநாதர் அருள்புரிவாராகுக.

கைதடி இந்து வாலிபர் சங்கம்.

தமிழ் கூறும் நல்லுலகமெங்கணும் சைவத்தையும் தமிழையும் தமது சிவப்பணியாக ஏற்று மங்கையர்க்கரசியாகவும் திலகவதியாராகவும், பணியாற்றிவருகின்ற சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதர், சைவப்புலவர், செஞ்சொற் செம்மணி, ஆசிரியை - செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு, கொழும்பு கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், மனப்பூர்வமான வாழ்த்தைத் தெரிவிக்கின்றது.

'மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.'

சைவப் புலவர் பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அரும் பெரும் சேவைகளைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆர்வத்துடன் அவதானித்து வந்திருக்கிறது. தமிழுக்கும் சைவத்திற்கும் அவர் ஆற்றிவரும் சீரிய தொண்டைப் பற்றிப் பெருமைப்படுகிறது. அவர் மேன்மேலும் தமது தொண்டை ஆற்றித் தீந்தமிழை வளர்ப்பதற்கு வேண்டிய சுகவாழ்வையும் நீண்ட ஆயுளையும் பெறவேண்டுமென்று வாழ்த்துகிறோம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பெண்ணின் நல்லாள் ஒருத்தியைப் பெற்றதால் புகழடைந்துள்ளது ஈழமணித் திருநாடு. தங்கம்மாவின் தூயவாழ்க்கையும் சமய ஈடுபாடும், கருத்தாழம் நிறைந்த இனிய சொற்பொழிவு செய்யும் ஆற்றலும் மற்றையோருக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. இலங்கையில் எந்தவொரு சமய விழா, அல்லது இலக்கிய விழாவும் செல்வி தங்கம்மா இல்லாமல் நிறைவு பெறுவதில்லை என்ற நிலையில் அவர் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளார். அவர் அனைத்து நலன்களும் பெற்று நெடுநாள் வாழ்ந்து மக்களை நல்வழியில் இட்டுச்செல்ல அனுக்கிரகிக்கும் வண்ணம் எல்லாம் வல்ல பரம்பொருளைப் பணிகின்றேன்.

இரா. சபாநாயகம், கொழும்பு.

எமது ஈழத்திருநாட்டில் நாவலர் பெருமானைப் பின்பற்றித் தமிழும் சைவமுந் தழைத்தோங்க ஏறத்தாழ இருபத்தைந்தாண்டுகள்வரை சீரிய சேவையாற்றி வருபவரும், தமிழகம் மலேசியா முதலான நாடுகளுக்குஞ் சென்று ஆற்றிய சொற்பொழிவுகள்மூலம் ஈழத்தின் பண்டைப்பெருமையை நிலைநாட்டியவருமாகிய சொல்லின் செல்வியார், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவையினைப்பாராட்டி விழாவினை எடுக்கவும், மலரினை வெளியிடவும் இந்து மாமன்றம் முன்வந்தமைக்கு எமது சங்கச் சார்பில் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அம்மையார் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து பணியாற்ற அருள்புரியும் வண்ணம் எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சுந்தரஸ்வரப் பெருமானின் இணையடிகளை இறைஞ்சுகின்றோம்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி சமயக்குழு.

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் நாடறிந்ததொன்றே. ஈழ நாட்டில் மட்டுமன்றி, சிங்கப்பூர், மலேசியாவில் வாழ்கின்ற தமிழ்ப் பெருமக்களும் நன்கு அவரை அறிவார்கள். அவர்கள் தமது சைவசமய இலக்கியச் சொற்பொழிவுகளால் இந்நாட்டு மக்களைக் கவர்ந்ததோடு மட்டுமன்றி நீதித்துறையில் பணியாற்றுகின்ற நீதிபதிகளைக் கூடக் கவர்ந்திருக்கிறார்கள்.

சங்க காலத்தில் பல பெண்பாற் புலவர்கள் இருந்ததாகப் படித்திருக்கின்றோம் ஆனால், நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டில் பெண்பாற் புலவரைப் பார்த்து, பேச்சினைச் செவிமடுக்கின்ற பேறு நமக்குக் கிடைத்திருக்கின்றது. இந்நாட்டுக்கு வந்த சைவ சமயச் சொற்பொழிவாளர்கள் பலர். அவர்களில் தலைசிறந்த ஒருவராகப் பண்டிதை இந்நாட்டில் போற்றப்படுகிறார்கள். அவர்கள் வருகையால் இந்நாடு தமிழ்மணம் கமழ்ந்தது. ஆலயங்கள் தோறும் சைவ சமயப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின. அன்னாரின் இன்சுவைப் பேச்சை, இனிய பாடல்களைச் செவிமடுத்த பலர், இந்நாட்டிற்கு ஆண்டு தோறும் வந்து செல்லவேண்டுகோள் விடுத்தனர். தமிழ்ப்பெருமக்களின் அன்புக்குரியவரான இருபதாம் நூற்றாண்டின் பெண்பாற் புலவரைப் பாராட்டவும், விழா எடுக்கவும் நாம் கடமைப்பட்டவர்களாவோம். பண்டிதை நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம்.

பண்டிதர் அவர்கள் ஈழம், தென் இந்தியா ஆகிய நாடுகளோடு மாத்திரம் நின்றுவிடாது சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலும் வந்து தங்களது வாக்கு வல்லமையி னாலும், இசை வளத்தாலும், தேனினும் இனிமை பெருகும் வண்ணம் சொற்பெருக்காற்றி இங்குள்ள தமிழ் மக்களனைவரையும் மகிழ வைத்தது மிகவும் பாராட்டத்தக்கது.

சிவமணமும் தமிழ்மணமும் ஒருங்கே கமழப் பண்டிதர் அவர்கள் ஆற்றிவரும் அரிய சிவப்பணி நீடூழி காலம் நிலைத்தோங்க இறையருள் துணைபுரிய வேண்டி, அவன் தாள் பரவி, எங்கள் நல்லாசியைக் கூறி மகிழ்கிறோம்.

**சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கம், கோலாலம்பூர்.**

காலதர்மத்திற் கேற்ற வகையில் சைவசித்தாந்தக் கருத்துக்களை அமிர்த வர்ஷம் போல் மக்களுடைய உள்ளங்குளிரும் வண்ணம் வாரிவழங்கும் சைவப்புலவர் - பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அந்தரங்க சுத்தியோடு வாழ்த்துகின்றோம். பரமதக் கோட்பாடுகளுக்கு மாறுபடாமல் சைவ சித்தாந்த நெறிகளைச் சாஸ்திரங்களிலும், தோத்திரங்களிலுமிருந்து தேடியெடுத்துத் தானும் அனுபவித்து மக்களையும் அனுபவிக்கச் செய்துவரும் சித்தாந்தச் செம்மணி சிறப்புடன் வாழ்க.

**சிவயோக சமாஜம், திருகோணமலை.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஈழத்துத் தமிழ்ப் பேரறிஞர் வரிசையில் முதலாவது பெண்மணியாகத் திகழும் பெருமைக்குரியவர். நாவலர் பெருமானுக்குப்பின் ஈழத்தில் மட்டுமன்றி தமிழ்நாடு, மலேசியா ஆகிய அயல்நாடுகளிலும் சென்று சைவமும், தமிழும் வளர பிரதி பலன் கருதாது ஆற்றிவரும் தொண்டுகள் வரலாற்றில் நிலையான இடம்பெறற்குரியன. வாழ்வுக்கு வளம்தரும் வகையில் திருமுறைக் கருத்துக்களைத் தமது செந்தமிழ்ச் சொற்பொழிவுகளால் வழங்கும் பெருமை அவருக்கே உரியதாய் வாய்த்துள்ளது. பண்டிதை அவர்கள் ஈழத்துச் சைவத்தமிழ்ச் சமூகத்தின் ஓர் அரிய சொத்து. அன்னார் பல்லாண்டு வாழ்ந்து சைவத்தமிழ்ப் பணி புரிய இறையருளை வேண்டி வழுத்துகின்றோம், வாழ்த்துகின்றோம்.

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் உண்மை தெளிந்த பேச்சில் உரைப்பதெல்லாம் கருத்து நிரம்பியது; கேட்டுக் கேட்டு "கசிந்து கண்ணீர் மல்கி" சிந்திக்கத்தக்கது, போற்றவேண்டியது. மலாயாவில் 1971இலும், 1972இலும் நடந்த பேச்சுக்கள் தமிழ்பேசும் எம்மெல்லோருள்ளும், பிரதானமாகப் பெண்களுக்குள் ஒரு மறுமலர்ச்சியை, எழுச்சியை ஏற்படுத்தின.

வெறும் சொல்லடுக்குகளால் சொற்பொழிவு செய்தல் உயிரற்ற உடலுக்கே ஒப்பாகும். பண்டிதர் செல்வி தங்கம்மாவோ உயிரொளி நிறைந்தவர். அவரைப் போல்வார் பிறக்கின்றதல்லாது, உருவாக்கப்படுவதுமில்லை, வளர்க்கப்படுவதுமில்லை. அம்மாவின் உவமையில்லாப் பேச்சு வல்லமை இன்னும் பல்லாண்டுகளுக்கு நாம் கேட்டு அனுபவிக்க ஆண்டவனருள்வேண்டி வழுத்துகின்றேன்.

**வல்லிபுரம் செல்வநாயகம், கோலாலம்பூர்.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், சகல வசதிகள் படைத்தும், குடும்ப பந்தபாசத்தில் சிக்காமல், சுதந்திரமான சீவியம் நடத்துவதைச் சிந்தித்தால் சமயத் தொண்டு செய்வதற்காகவே செல்வியாக இருக்கிறுர் என்பது அறியக்கிடக்கின்றது. எனவே செல்வி தமிழர் மத்தியில் சமூக, சமய, தமிழ்த்தொண்டு செய்வதற்கென்றே அவதரித்த பெரும் தியாகி என்றே சொல்ல வேண்டும்

அம்மையார் வாழ்க, நீடூழி வாழ்க.

ச. த. சின்னத்துரை, ஜே.பி. கொழும்பு.

''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்கிறது சிவபுராணம். ஆகவே, அவன்தாள் வணங்குவதும் அவனருளாலேதான். கடந்த 25 வருட காலமாக ''மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்...'' என்ற சுந்தரரின் தேவாரத் தினின்று இம்மியளவும் வழுவாது, இறைவனை இதயக் கமலத்தில் இருத்தி, அவன் பெருமையைப் பரப்புவதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துவருபவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். என்றுமே பேரின்பத்தை அளிப்பது இறைமார்க்கமே என்பதையறிந்து, யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வைய கம் என்ற சீரிய பண்பிற்கிணங்க, ஏனையோரும் இப்பேரின்பத்தினை அனுபவிக்கும் வண்ணம், தனது சிறந்த சொற்பொழிவுகளின் மூலம் பணிபுரிந்துவருகின்றுர் அம்மை யார் அவர்கள். அத்துடன் நின்றுவிடாது, ''யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெறவேலவர் தந்ததனுல்'' என்ற அனுபூதி வாக்கியத்தின் உண்மையை உணர்ந்து, தனது மாணவர்கள் பலரைச் சிறந்த சமயச் சொற்பொழிவாளர்களாக ஆக்கும் பணியிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

சைவ சமயத்திற்குத் தொண்டுசெய்த காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், பகவதியார், மாதினியார் போன்ற மாதர்கள் வரிசையில் அம் மையாரும் இடம்பெறுகிறுர் என்று கூறின் மிகையாகாது.

இவர் பணிகள் மேன்மேலும் தொடர, இவருக்கு நீண்ட ஆயுளையும் சிறந்த உடல் நலத்தினையும் அளிக்கவேண்டுமென்று தில்லைக்கூத்தனைப் பிரார்த்திப்போமாக.

சைவ ஊழியர் கழகப் பேரவை.

''சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது''

என்னும் குறளமுதத்திற்கு ஒரு காட்டாய் அண்ணுமலைநகரிலே அன்று விளங் கிய பண்டிதை அவர்கள் தொடர்ந்தும் தமது சைவத்தமிழ்த் தொண்டால் திக்கெங்கும் சென்று இலங்கைக்குப் பெருமை சேர்ப்பது பேருவகைக்குரியதாகும். அன்ஞரின் சேவையை மெச்சி அவர் நீடு வாழ்ந்து பீடுடன் திகழ சைவகலா சங்கம் ஞானகரனை குமரவேளை வழுத்தி வாழ்த்துகின்றது.

சைவ கலா சங்கம், புங்குடுதீவு.

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்' பெற்ற பண்டிதை அவர்களை வாழ்த்துவதில் சைவ பரிபாலன சபை பெருமை அடைகின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் அருள்வாக்கை நம்மவர்கட்கு நடைமுறையில் காட்டி அதற்கேற்பப் புகழுடன் வாழும் இன்தமிழ்ச் செல்வியை, சிவத்தமிழ் அணங்கை, செஞ்சொற் செம்மணியைச் சித்தாந்த ஞானகரத்தைச் சைவ மக்கள் சார்பில் 'நின் சீரிய பணி வாழ்க' என வாழ்த்துகின்றோம். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற மூலனுரையை 'திருவாசகக் கொண்டல்' என்ற சிறப்புப் பட்டத்தால் மெய்ப்பித்துள்ளீர்கள். கணீரென்ற குரலில், பண்ணென்ற இசைபாடி ஆணித்தரமாகச் சிவத்தின் திறனை விளக்கும்பொழுது அதை மக்கள் மெய்ம்மறந்து, துயில் மறந்து, பசி மறந்து கேட்டுக்கொண்டிருக்கும் காட்சியே சிவத்தமிழ்ச் செல்வியின் முதிர்ந்த ஞானத்திற்குச் சான்றாகும். அருமையான கருத்துக்களை, எளிமையான மொழியில், இனிய நடையில் கற்றோரும் மற்றோரும் உவந்து ஏற்கும் வகையில் ஆழ்ந்த பொருளறிவுடன் சுவையாக, தெளிவாக, உளம் கவர எடுத்துச் சொல்லிவரும் சிந்தனைப் பேரொளியை, சைவப்புலவரை உளமாரப் பன்முறை நலனே வாழி, வாழி என வாழ்த்துகின்றோம்.

**சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மலேசியாவுக்கு இருமுறை வருகை புரிந்து தேனினும் இனிய தமது சமயச் சொற்பொழிவுகள் மூலம் அரும் பெரும் சைவத் தொண்டு புரிந்திருக்கிறார். அன்னாரின் சொற்பொழிவுகளில் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளத் தக்க எளிமையும் தெளிவும் கருத்தாழமும் பொதிந்திருப்பதைக் கண்டு நான் பெருமிதமடைந்தேன்.

நாவலர் பெருமான் வழியில் சைவமும் தமிழும் நமது மக்களிடையே தழைப்பதற்குக் கடந்த 25 ஆண்டுகளாகச் சொற்பொழிவுத் தொண்டு புரிந்து வருகிற சிவத்தமிழ்ச் செல்வி அவர்களுக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நற்றொண்டு இலங்கைக்கு மட்டுமன்றித் தமிழ் கூறும் நல்லுலகம் முழுமைக்குமே நன்கு பயன்பட்டு வருகிறது.

மலேசியா போன்ற நாடுகளுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வருகை புரிந்து நமது மக்கள் வாழுகின்ற இடங்களிலெல்லாம் அவர்கள் சமய விரிவுரை நிகழ்த்த வேண்டும் என்னும் என் விருப்பத்தையும் புலப்படுத்திக்கொண்டு இறையருள் அவர்களின் இச்சீரிய தொண்டுக்குத் தொடர்ந்து துணைபுரிய வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.

**முருகு சுப்பிரமணியன்,**
**ஆசிரியர், 'தமிழ் நேசன்' கோலாலம்பூர், மலேசியா.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வழங்கப்பட்ட "சிவத்தமிழ்ச் செல்வி" என்னும் விருது மிகப் பொருத்தமாய் அவரது சேவைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. அவர் முதலிற் செல்வியாய், பின்னர்த் தமிழ்ச் செல்வம் பெற்ற தமிழ்ச் செல்வியாய் அதன் பின்னர் தமது தமிழ்ச் செல்வத்தைச் சைவத்துக்காக - சிவப்பணிக்காக - அர்ப்பணித்துச் சிவத்தமிழ்ச்செல்வியாய் ஆகினார். அவரது பணி ஈழநாட்டில் மட்டுமன்றி, கடல் கடந்து வாழும் தமிழர் கூட்டத்திலும் பயன்பட்டு, மக்களுக்குப் பயனையும் தமக்குப் புண்ணியத்தையும் ஈட்டிவருகிறது. அவரது சேவையைச் சைவ ஸ்தாபனங்களும் சைவ மக்களும் பாராட்டி உற்சாகமளிக்கவேண்டியது அவசியம். அதனை அகில இலங்கை இந்து மாமன்றம் செய்ய முன்வந்தது மிகப் பொருத்தமே. அவர் பல்லாண்டு வாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**வி. தர்மலிங்கம்** பா. உ., **உடுவில்.**

சென்ற கால் நூற்ருண்டு காலமாக, சைவத்துக்கும் தமிழுக்கும் சைவமக்கள் வாழும் நாடெல்லாம் சென்று, அருந்தொண்டு ஆற்றிவரும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு இந்து மாமன்றம் பாராட்டுவிழா எடுப்பதைப் பாராட்டுகின்றேன். பிரசித்திபெற்ற ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவெம்பாவை காலத்தில் சென்ற 20 ஆண்டுகளாகச் சொற்பொழிவு ஆற்றி வருவதைச் சைவ உலகம் நன்கு அறியும். நாவலர் பெருமான் செய்த சிவத்தொண்டை, தொடர்ந்து செய்பவர் செல்வி தங்கம்மா. ஈழநாட்டில் வாழும் சைவ மக்கள் சார்பிலும், வட்டுக்கோட்டை மக்கள் சார்பிலும் அம்மையார் பல்லாண்டு வாழ்ந்து தொண்டுபுரிய வேண்டுமென்று எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆ. தியாகரர்சா பா. உ. வட்டுக்கோட்டை.

திருவளர் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எங்கு தமிழ் மொழி பேசப்படுகிறதோ அங்கெல்லாம் சென்று தமிழையும் சைவத்தையும் ஒருங்கே வளர்ப்பதற்கு அளப்பரும் சேவை புரிந்துள்ளார். அதற்குச் சான்ருக அவர் போன விடங்களில் எல்லாம் அன்பர்களும் ஆதரவாளர்களும் அவருக்கு விருதுகளையும் புகழ் மாலைகளையும் வழங்கித் தங்கள் உள்ளத்தின் உணர்வை வெளிப்படுத்தி உள்ளார்கள். அவ்விதம் அவர்பெற்ற விருதுகள் - சித்தாந்த ஞானகரம், திருமுறைச் செல்வி, சிவத் தமிழ்ச் செல்வி, சைவ தரிசினி ஆதியன ஒரு மாலையாகவே அமைந்துள்ளன.

இவர் ஆற்றிய சிவப்பணியை அறியும் அன்பர்களின் உள்ளத்தில், அன்று சைவத் தில் திளைத்து விளங்கிய மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்ற பெண்களின் வழிவழியாகவே இவரும் வந்துள்ளார் என்னும் எண்ணம் உதிக்கத் தவறமாட்டாது. வள்ளுவர் பெருமானின் 'மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை யென்னேற்றான் கொல் லெனுஞ் சொல்'' என்னும் வாக்குக்கு இலக்காகத் தமிழுக்கும், சைவத்திற்கும் அரும் பணி புரிந்து தமிழ் அன்னையின் உள்ளத்தைப் பூரிப்படையச் செய்துள்ளார்.

அவர் நீண்ட ஆயுளும், திடகாத்திரமும் சகல செல்வமும் பெற்று, மேன்மேலும் தமது சிவப்பணியைத் தொடர்ந்து சிறப்புடன் ஆற்றக் கௌரி சமேத திருக்கேதீச்சரப் பெருமான் பேரருள் புரிவாராக.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இந்நூற்ருண்டில் இலங்கையின் புகழைத் தென் கிழக்காசியாவில் நிலைநாட்டிய பெருமைக்குரியவர் ஆவார்.

தமிழுக்கும் ஆத்மிகத்திற்கும் தங்களை அர்ப்பணித்த ஆறுமுகநாவலர் – சுவாமி விபுலானந்த அடிகள் போன்றவர்களின் அடிச்சுவட்டில் தன்னை வழிநடத்திச் சிறந்த கல்வி அறிவுடன், ஆழ்ந்த கருத்துக்களை மக்கள் மத்தியில் ஆழமாகப் பதியச் செய்யும் நாவன்மையையும், தமிழுக்கும், சைவத்திற்கும் தன்னை அர்ப்பணித்த அளப்பரிய சேவை உள்ளத்தையும், தமிழ் உலகம் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் தொடர்ந்து நல்லபணி செய்யக் கோணேஸ்வரப் பெருமான் அருள்புரிவாராக.

திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை.

தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் பரந்து வாழ்கின்ருர்களோ அங்கெல்லாம் தமிழ் மணம் பரப்பிவரும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் விழா எடுத்துக் கௌரவிப்பது ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு, குறிப்பாகப் பெண் குலத்திற்குப் பெருமைதேடித்தரும் ஓர் அரிய செயலாகும். அவர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றி வரவேண்டுமென வாழ்த்துகின்ருேம்.

**திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்.**

ஈழத்திரு நாட்டின் தவப்பேற்ருல் எங்கள் காலத்தில் தோன்றிய அறிஞர்களில் சைவப் புலவர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் முதல் வரிசையில் இடம்பெறத் தகுதியும், நிறைவும் உடையவர். அன்னுர் மேன்மைகொள் சைவத்திற்கும், இன்பத் தமிழுக்கும் ஆற்றிவரும் அரிய தொண்டுகள் எமக்கு மட்டுமல்ல, தமிழ் கூறும் சைவ உலகு அனைத்திற்குமே உரித்தானவையாகும். அவர்கள் இத்துறையில் ஆற்றிய பேருரைகள் அலைகடல் கடந்த நாடுகளிலும் ஒலித்து, ஒளிவிட்டுப் புகழ்பரப்பி நிற்கின்றன. அவரின் அறிவு, ஆற்றலால் இந்தத் திருநாட்டின் பெருமையே உயர்ந்து நிற்கின்றது என்ருல், இது மிகைப்படுத்திக் கூறும் கூற்றல்ல. அம்மையார் இன்னும் பல ஆண்டு எம்மிடையே இருந்து, தான் கொண்ட இச்சீரிய பணியைத் தன் பிறந்தநாட்டிற்கும், மற்றும் சைவ உலகிற்கும் அளித்துநிற்க அன்னுரை வாழ்த்திப் பாராட்டுகின்ருேம்.

**திருமுருகானந்த சங்கம், திருக்கோணமலை.**

சீராருந் தெல்லிநகர்த் தென்றிசையிற் செல்லுகின்ற தெருவின் மேல்பால்
ஊராரும் செலவறியா ஒருவெளியாய் உழுகுடையென் றேத நின்ற
பேராரும் பதிமுன்னுட் புதர்பலவும் செறிந்திருக்கும் பெற்றித் தாகி
ஏராரும் சிறுபாலை எனவுரைப்ப இசைந்திருந்த தென்பர் முன்னோர்

அப்பதியிற் காடுகிழாள் எனப்புகலுந் தன்பெயரை அறிய வைக்கும்
ஒப்பிலருட் கருணையினல் உலகனைக்குந் துர்க்கையம்மை உவப்பி னேடு
சுப்பரெனப் புகல்பெரியார் இடத்தினிலோ ரியந்திரமாய்த் தொடர்ந்து வந்து
செப்பமுற ஓர்தருவின் நீழலிலே கொலுவமர்ந்து சிறந்து நின்ருள்

பாலையெனும் நிலைமாறி உயர்ந்தபெருந் தருவினங்கள் பலவுஞ் சேர்ந்த
சோலைவன மாகியதவ் வுழுகுடைதான் சுந்தரியாள் தொடர்பி னலே
நாலுமறை தெளிந்தவரோர் அந்தணர்அப் பதிஒருநாள் நண்ணி வந்தார்
சூலிஅவர் தம்மைஅருச் சகராக்கித் தலைப்பரவுந் தொண்டிற் சேர்த்தாள்.

தெல்லிநகர் வாழ்நாக நாதவுடை யாரென்னுஞ் செல்வர் ஓர்நாள்
அல்லதனில் அருங்கனவிற் சயமகள்வந் தாணையொன்றை அருளக் கேட்டார்
ஒல்லையினிற் திருக்கோயில் ஒன்றெடுத்தே அன்னையவட் குவகை செய்தார்
நல்லதிருக் கோயிலது சின்னுளில் மிகச்சிதைவு நணுகிற் றம்மா

செயலறியார் அன்னைதிரு வுளமறியார் அடியார்கள் தேம்பி நின்ருர்
அயலுளதாங் குளமண்கால் எனும்பதியிற் ரேன்றியருள் அமுத மேந்திப்
பயிலுமொரு மடமங்கை வடிவினிலே அப்பதியிற் பரிந்து சென்ற
குயிலொன்று தேவிபுகழ்க் கீதவிசை திசைபரப்பிக் கூவிற் றம்மா

எங்கம்மா எம்துணையே இன்னருள்செய் திப்பதியில் என்றென் றும்நீ
தங்கம்மா தங்கம்மா எனத்தனது தண்ணார்பைந் தமிழைக் கோத்துத்
தங்கம்மா எனும்நாமந் தரித்திடுமப் பைங்குயிலி தனித்து நின்று
கொங்கினிமைத் தேன்குரலிற் தளிர்ஞானச் செழும்பொருளைக் கூவிற் றம்மா

கொந்தணவும் பொழிற்சோலைக் கூட்டியிலே எனவிளித்துக் கூடும் அன்பால்
அந்தணராம் மாணிக்க வாசகனார் அருட்பொழிவாம் அரனார் சீர்த்தி
புந்திகொளப் பயிற்றிவிட்ட பூங்குயிலே போந்திங்குப் புகுந்த தென்று
சிந்தையுற அக்குயிலி சிவநெறியின் பெருமாண்பு தெளிந்த தம்மா

தேடிவந்து குயிலோசை தெவிட்டநின்று கேட்டார்கள் தேவி யன்பு
கூடினர்மா நிதிகுவித்தார் குமரரெலாம் புதுமையுறக் கோயில் கண்டார்
நீடுயர்மா ளிகைமடங்கள் மதிலிடங்கள் திருக்கிணறு நிலைக்க ஆங்கே
ஈடில்பெரு விழாக்களுடன் இணையிலரு ளொளிப்பெருக்கும் இசைந்த தாமே

அன்னையருள் எமக்காக்குந் தங்கம்மா மென்குயில்நீ அவனி யெல்லாம்
முன்னையரன் புகழ்பெருக மொழிந்தெடுத்துக் கூவுவதே முதன்மை யாக்கி
உன்னையந்தப் பணியினுக்கே ஆளாக்கி உயர்ந்திட்டாய் உனது கீர்த்தி
பன்னுதமி ழகத்தினுக்கும் மலேசியநன் னாட்டினுக்கும் பரந்த தன்றே

ஆங்கெல்லாம் பறந்தணைந்தெம் பெருமானார் அரும்புகழை ஆர்வத் தோடு
தேங்கரும்பின் கொழுஞ்சாருய்த் தித்திக்க அளித்தவர்கள் தெளிய வைத்தே
ஈங்கெவரும் புரியாத அருட்பணியைப் புரிந்திருக்கும் இனிமை கண்டோம்
பூங்குயிலே தங்கம்மா மென்கொடியே நினைவாழ்த்திப் போற்றுகின்றோம்

கொற்றவையாந் தேவிதிருக் கோயில்எமக் காக்கிவைத்த குயிலே எங்கள்
நற்றவமாம் நாயகியே நின்புகழை நம்புகழாய் நயக்கின் றோம்யாம்
பெற்றமுயர்த் தவர்பெருமை பேருலகில் எத்திசையும் பிறங்க நீசெய்
சொற்றிறங்கள் என்ஞான்றும் துர்க்கையரு ளால்நின்று தொடரவாழி.

**துர்க்காதேவி ஆலய பரிபாலன சபை, தெல்லிப்பழை.**

பண்டிதை தங்கம்மா தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரும் தொண்டாற்றி வருகின்றார். இந்து மதத்தின் மகத்தான சிறப்பினை அம்மையார் உள்நாட்டில் மட்டு மன்றி, தமிழகம், மலேசியா போன்ற பிறநாடுகளிலும், தமது நாவன்மையால் நயம்பட எடுத்துரைத்து ஈழத்தின் புகழை வெகுவாக உயர்த்தியுள்ளார்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்னும் உன்னத இலட்சியத்தினால் உந்தப்பட்டு, போற்றும் பணி ஆற்றிவரும் அம்மையாரைக் கௌரவப்படுத்த இந்து மாமன்றம் எடுக்கும் பாராட்டு விழாவுக்கு எமது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரிதும் பூரிப்படைகிறோம். அம்மையார் நலமும் வளமும் பெறவும், அவரது சமயப்பணி வலுவும் பொலிவும் பெறவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக!'

**தெரணியகல சைவ பரிபாலன சபை.**

அத்தேவர் தேவர் அவர்தேவர் என்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற (திருவாசகம் -திருக்கோத்தும்பி)

நம்மவரிடையில் சிவநெறியும் செந்தமிழும் செழித்திட, சீரிய புலமையுடனும் நாவன்மையுடனும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரவர்கள் பெரும் பணி ஆற்றி வருகின்றார்கள். இவர்கள் வாழையடி வாழையென வந்த சமய நன்மரபுகளைப் பல்லாண்டு சைவ நன்மக்களுக்கு எடுத்துரைத்து, சமயத்திற்கும் தமிழிற்கும் நல்லன எல்லாம் செய்து நீடூழிவாழத் திருக்கேதீச்சுரநாதர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

இ. நமசிவாயம், கொழும்பு.

காலத்துக்குக் காலம் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிவந்த அம்மையார்கள் வரிசையில் இடம் பெற்றுவிட்டவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். கலியுகத்திலே, சந்திரனை மனிதன் சாடிவிட்ட விஞ்ஞான மயக்கமே தலைதூக்கிநிற்கின்ற இக்காலத்திலே மெய்ஞ்ஞானத்தை இளைஞர்கள் மனத்திலே படியும் வண்ணம் ஒருவர் உரையாற்றி மக்கள் எல்லோரையும் மெய்ம்மறந்து கேட்கச்செய்ய முடியுமானால் அந்தச் சாதனையின் அருமை பெருமை அளவிடற்கரியதொன்றாகும். அதைத் தன் வாழ்க்கையில் தமிழர் வாழும் நல்லுலகமெல்லாம் சாதித்துக்கொண்டுவரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை எங்ஙனம் வாழ்த்துகினும் போதாவாம். எல்லாம் வல்ல இறைவன் அம்மையார்க்கு நிறைஞானமும், ஆயுளும் நல்கி, அவர்மூலம் பல்லாண்டுகள் இப்பணி நடைபெற அருள்வாராக.

நில அளவை திணைக்கள இந்து சங்கம்.

எல்லா உயிர்களின் மொத்தத் தொகையே தெய்வ தத்துவத்தின் சாரமாகும். அதனை மனிதன் வாழ்க்கையில் உணர்ந்து நடத்தச் செய்வதே சமயநிலை. எனவே சமயமானது மக்கள் வாழ்க்கையில் கலந்து எல்லாத்துறைகளிலும் புகுந்து பண்படுத்தப்படவேண்டுமானால் அதற்கான கொள்கை யமைப்புக்களும், செயல்களும் சமைய வேண்டுவது இன்றியமையாதது. இதற்கு முன்னோடியாக விளங்குபவர்கள் சமயப்பேரறிஞர்களே யாவர்.

தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் வதியும் சைவப்பெருமக்கள் மத்தியில் தனது அரிய சொற்பொழிவுகள் மூலம் உயரிய தத்துவங்களைச் சுருங்கக்கூறி விளங்க வைத்துச் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றி வரும் சைவப்புலவர், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயப்பணியும் இவ்வகைத்ததே.

சமயப் பெரியார்களுக்கும், அறிஞர்களுக்கும் விழாவெடுப்பது அவர்தம் பணியைச் சைவப்பெருமக்கள் மேன்மேலும் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளிப்பதாகும். எனவே இவ்வகையில் அகில இலங்கை இந்துமாமன்றம் முன்வந்தது பாராட்டுதற்குரியது.

ஈழவள நாட்டில் மாத்திரமன்றி மலேசியா, தமிழ்நாடு ஆகியபிற நாடுகளிலும் தனது ஆழ்ந்த அறிவாலும், அரும்பெருங் கருத்துச் செறிந்த இனிய பேச்சினாலும் அளப்பரிய சேவைசெய்து வரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சீரியதொண்டு சிறப்புடன் வளர இறையருள் கிட்டுவதாக.

பா. நேமிநாதன், பா.உ. திருக்கோணமலை.

கொற்றவை சீரருளால் கோதிலறந் தான்வளர்க்கும்
நற்றவம் சேர்வாழ்க்கை நாடியே—கற்றுணரும்
பெற்றியோர் போற்றியே பேணுதமிழ் ஔவையெனச்
சொற்றிடுவா ரீதுன் சிறப்பு.

ஈண்டுபுகழ்ச் செந்தமிழின் இனிமையதும்
இயல்சைவ நெறித்திறம் பலவும்
பூண்டநின் இன்சொலால் புவிபரப்பும்
புகழதனைப் பலரும் போற்ற
தூண்டுதவ விளக்கனையாய் தூயசெந்திற்
சேராழிக் கரைவாய் நுண்மணலின்
ஆண்டுபல வாழ்கவென அகங்கனிந்த
சொன்மலரால் வாழ்த்து கின்றோம்.

பாலர் ஞானோதய சபை, தெல்லிப்பழை.

சிவத்தமிழ்ச் செல்வி, சைவப்புலவர், பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் சீரிய தொண்டுகளைப் பாராட்டும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் எடுக்கும் விழா இனிது நிகழ என் மனப் பூர்வமான வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

ஐந்தாங்குரவரெனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் வகுத்த தூய வழியிலே நின்று வாழ்வதிலும், திருமுறைகளைப் பரப்புவதிலும், தம்மரிய காலத்தைச் செவ்வனே கழிக்கும் சிவத்தமிழ்ச் செல்விக்குப் பொன்னாடை போர்த்தி, வாழ்த்து மடல் நல்கி, பாராட்டுரைகள் வழங்குவது சாலவும் சிறந்ததாகும்.

சிவசின்னங்களும், திருமுறைகளும் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ, திருமுறைச் செல்வி குன்று உடனலம் முதலாய பலநலன்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

இ. பாஸ்கரலிங்கம், கல்வி அமைச்சு.

தமிழொடு பிறந்து யாழ்ப்பாண நன்னாட்டில் வளர்ந்து வருகின்ற, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெய்வத்தின் அருட்கொடையாதலால், "வாழ்வெனும் மையல் விட்டு–வறுமையாம் சிறுமை தப்பித்–தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயஞ்சாரும்–ஊழ்" பெற்ற உத்தமியாக இங்கு விளங்குவதில் ஒரு வியப்பில்லை. தெய்வத் திருக்குறிப்பு அவர் மீது செல்கின்றது. இறைவனின் பொருள்சேர் புகழைப் புரிந்து கொண்டு, அவர் விரித்துரைத்து வருகின்றார். அவன் பெரும் புகழுக்கே தம்மை அடியுறை செய்து வாழ்கின்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சைவத்தமிழ் ஒளியில் தமிழ்மக்களின் உள்ளக் கமலங்கள் மலர்வனவாக.

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை - மட்டக்களப்பு.

பண்டையில் சைவத்தை அழித்து ஒழிக்கச் சமணர்கள் கங்கணங்கட்டிச் சூழ்ச்சிகள் பலசெய்த ஞான்று, மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்றோரது புனித சேவைகள் மூலம் சைவத்தின் உண்மைத் தத்துவத்தை மக்கள் விளங்கி, சமயத்தை அழிவின் விளிம்பிலிருந்து பாதுகாத்தனர். அதே ஒரு நிலை பிறமதங்களால் நமக்கேற்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் சைவத்தின் பெருமையை உலகமறியச் செய்து, அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்திவரும் இவ்வம்மையாரின் சமயப்பணி ஈடு இணையற்றதோர் பெரும் பணியாகும். இவரது புனிதசேவை நீடு நிலைக்கவும், இதன் பயனாய் சைவநன் மக்கள் ஈடேறவும் இறைவன் திருவருள் கிடைப்பதாக. இன்பமே சூழ்க!

**பெரிய கல்லாறு - ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயசங்கம், கல்லாறு.**

ஈழத்திருநாட்டின் மங்கையர்க்குத் தனியரசியென யாவராலும் போற்றப்படும் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாகுட்டியை அறியாதார் அறியாதாரே. இவர் மலேசியாவில் 7-4-71 முதல் 1-5-71 வரை 17 பிரதான பட்டணங்களில் 27 சொற்பொழிவுகள் நிகழ்த்த ஒழுங்கு செய்யும் பேற்றைப் பெற்றேன்.

கைம்மாறு கருதாக் கடப்பாடுடைய இவர்கள் நாவலர் பெருமானுக்குப்பின் அவர்காட்டிய புனித வழியில் நின்று சைவத்தையும் தமிழையும் வளர்க்கத் தன் வாழ்வை அர்ப்பணித்தார்கள். இவர்கள் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் சென்றும் எம் ஈழத்திருநாட்டுப் பெண்ணினத்தின் பெருமையைப் புலப்படுத்திப் புகழ்பெற்றுள்ளார்கள். இவருக்கு இலங்கை இந்துமாமன்றம் பாராட்டு விழா நடத்தி, மலர் வெளியிடுவது சாலப்பொருத்தமானதே. இம்மன்றம் இவரைப் பாராட்டுவது சைவத்திற்கும் தமிழுக்கும் செய்யும் பெருந்தொண்டாகும். இவர் பல்லாண்டு பணிபுரிய எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவாராக.

**மு. பொன்னம்பலம், களபூமி, காரைநகர்.**

சைவப்புலவர், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழுக்கும், சைவத்திற்கும் ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டுகளுக்கு நாம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாவோம். நம்நாட்டில் மட்டுமன்றி, தமிழ்நாடு, மலேசியா போன்ற வெளிநாடுகளிலும் புகழை நிலைநாட்டி இருப்பது கண்டு நம் உளம் பூரிப்படைகின்றது.

**மடுல்கலை இந்து மகாசபை.**

நாத்தழும்பேற நாத்திகம் பேசும் இவ்விருபதாம் நூற்றுண்டின் கடைக்கூற்றிலும் புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறியொழுக்ச் செய்யும் நற்பிரசங்கங்கள் செய்து, தமிழ் கூறும் நல்லுலகெங்கணும் ஆத்திகத்தை நிலைநாட்டி வரும் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவை பாராட்டுதற்குரியது. சென்றவிடமெல்லாம் சிறப்புப் பட்டங்கள் பெற்றுக் கௌரவிக்கப்பட்டு வரும் அன்னாரை இருபதாம் நூற்றுண்டின் 'ஔவை' என்றால் மிகையன்று. அன்னாரின் சைவத் தமிழ்ச் சேவை மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்.

**மணிவாசகர் சபை, காரைநகர்.**

சிவநெறியும் செந்தமிழும் செழித்தோங்கச் செயலாற்றிய உத்தம ஆசிரியை பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அன்பும் அருளும் நிறைந்த சமய பக்தியாலும், பன்னிருதிருமுறைகளையும் மெய்கண்ட சாஸ்திரங்களையும், தமிழிலக்கியங்களையும் நன்கு கற்றுப்பாண்டித்தியம் பெற்றதாலும் வந்த கீர்த்தி இந்நாட்டில் மாத்திரமன்றி, மலாய் நாடு, தென்னிந்தியா முழுவதிலும் பரவலாகிற்று.

மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கத்தில் பலமுறைகளிலும் சொற்பொழிவாற்றியும், இளைஞர்களைச் சமயத் தொண்டில் ஊக்குவித்தும் செய்த அரிய தொண்டினைச் சைவமக்கள் எப்பொழுதும் மறக்கமாட்டார்கள். தெல்லிப்பழைக் கிராமத்திலுள்ள பழமை, புதுமை, மூர்த்திகரம், தனிச்சிறப்பு ஒருங்கு அமைந்துள்ள துர்க்காதேவி ஆலயத்தின் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுச் சரியை கிரியை என்ற வழிகளில் ஒழுகி, அந்த ஆலயத்திற்கு ஓர் மடமும் தமது செலவிற்கட்டிப் புராண வகுப்புகளை நடாத்தி வருகின்ற பெருமை அவருக்குரியது. பல்லாண்டு இவர் சகல செல்வங்களுடன் வாழ இறைவன் அருள் புரிவாராக.

**மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கம்.**

செந்தமிழ்ச் செல்வி, சைவப்புலவர், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிவரும் சேவைகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். இவ்வம்மையார் கடல் கடந்த நாடுகளுக்கு எல்லாம் சென்று தமிழையும் சைவத்தையும் மேன்மையுறச் செய்யும் பணியானது, நமது தாய்நாடான ஈழமணித் திருநாட்டிற்குப் புகழையும் பெருமையையும் தேடித் தந்துள்ளது.

ஈழநாட்டில் தமிழுக்காகவும் சைவத்துக்காகவும் உழைத்த பெருமக்கள் வரிசையில் இவ்வம்மையாருக்கும் ஒரு சிறப்பான இடம் உண்டு. இவர் நிறைந்த ஆயுளைப் பெற்று, நீண்ட நாட்கள் வாழ்ந்து, நமது நாட்டுக்கு மேன்மேலும் பணிபுரியவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தி. மாணிக்கவாசகர், வட மாநில கல்வி அதிபதி.**

அருமைமிகு சகோதரியார், ஆன்றசைவப் புலவர்,
அருட்செல்வி தங்கம்மா நல்அப்பாக் குட்டி,
பெருமைமிகச் செந்தமிழும் சிவநெறியும் போற்றிப்
பெரிதுமிக ஆற்றிவரும் தொண்டுகளை எல்லாம்
உரிமையுடன் பாராட்டல் உணர்ந்துமகிழ் கின்றேன்;
ஒப்பில்உயர் பண்டிதர்ஆம் அவ்வம்மை யார்தாம்,
திருமெய்நலங் கள்மேன்மேற் செழித்தோங்கிச் சிறந்து
சிவத்தமிழ்தாம் பரப்பிமிக, நீடூழி வாழ்க!

இலங்கையினில் யாழ்ப்பாணத்தும், காரைநகர் தனிலும்,
எழில்திருக்கே தீச்சரத்தும், இடைமருதூர் முதலா
வலங்குலவு தமிழ்ச்சைவ மாநாடு நிகழும்
மற்றையபல் இடங்களிலும், மாட்சிமிகும் அவர்தம்
நலங்குலவு விரிவுரைகள் நயந்துமிகக் கேட்டு
நனிபெரிதும் மகிழ்ந்துள்ளேன்; நலந்திகழ்அம் மையார்தாம்,
தலங்குலவத் தமிழ்ச்சைவம் தகப்பரப்பி, நந்தம்
தமிழ்மகளிர் தலைமணியாய் நீடூழி வாழ்க!

**ந. ரா. முருகவேள், ஆசிரியர் 'திருக்கோயில்'**
**அறநிலையத்துறை, சென்னை-34.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எமது கல்லூரிச் சமய நிகழ்ச்சிகளைச் சிறப்புற ஒழுங்குசெய்து மாணவர் சமூகத்தின் அகவளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றார். இக் கல்லூரி மாணவர்கள் சமயத் தேர்வுகளில் சிறப்புறத் தேறக் காரணம் அன்னாரின் பலன் கருதாச் சமய வகுப்புகளேயாம். கல்லூரித் தமிழ் மன்றப் போஷகராக இருந்து செந்தமிழுக்குச் செல்வி யாற்றும் தொண்டு அளப்பரிய தொண்டாகும். நீணிலத்தில் இன்னும் பலகாலம் தொடர்ந்து நற்பணி புரிய அன்னாருக்கு எல்லாம்வல்ல இறைவன் நல்லருள் புரிவாராக.

**அதிபர் யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

செல்வி தங்கம்மா என்னும் சிந்தனைப் பேரொளி நவரசம் பொங்கும் நாவன்மையால் எவரும் எளிதிற் பின்பற்ற நாவலர் காட்டிய வழிநின்று தமிழும் சைவமும் தழைத்து ஓங்கச் சென்ற கால்நூற்றாண்டில் செய்த தொண்டினைப்போல் இன்னும் பல்லாண்டு தொண்டு செய்ய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**யா/யூனியன் கல்லூரித் தமிழ் மன்றம், தெல்லிப்பழை.**

சைவப்புலவர், பண்டிதர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிவரும் அரியபெரிய தொண்டிற்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிதெனறே கருதுகின்றேன். அவரின் ஆழ்ந்த பக்தியும், பண்பும், புலமையும், நாவன்மையும் மிகப்பாராட்டத்தக்கன. சைவத் திருமுறைகளிலும், தமிழ் இலக்கிய நூல்களிலும் உள்ள அரிய, திவ்விய கருத்துக்களையும், உண்மைகளையும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது பேச்சு மூலமும், எழுத்து மூலமும், மிகத் தெளிவாகவும், கற்றோர், கல்லாதோர் எவரும் விளங்கக்கூடிய முறையிலும் பரப்பி வருகின்றார். கேட்கக் கேட்கத் தெவிட்டா இன்பத்தினை ஊட்டிப் பக்தியினை வளர்க்கும் பண்புடையது அவர்களின் பேச்சு.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சுகபெலத்துடனும் இன்பத்துடனும் நீடூழி வாழ்க! அவரின் தொண்டு ஓங்கி வளர்ந்து பெருகுக!

**செ. ரங்கநாதன், கொழும்பு.**

ஈழ மணித் திருநாடு ஈன்றெடுத்த தவக்கொழுந்தே! நீவீர் அன்பின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய்த் திகழ்ந்து, 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்ற தீர்க்கதரிசி பாரதியின் நல்வாக்கைச் செயலிலே காட்டி, சைவமும் தமிழும் தரணி எங்கும் தழைத்தோங்க, தாராள மனத்துடன் அருஞ் சேவையாற்றியுள்ளீர். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற வாக்கிற்கு இலக்கணமாய்த் திகழ்ந்துள்ளீர். கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பன்றோ! அந்தச் சிறப்பால் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற உமது தூய்மையான இலட்சியத்தால் ஈழநாட்டிற்கு நற்பெயரையும் நற் புகழையும் பெற்றுத் தந்துள்ளீர். அச்சிறப்பால் நாமும் பெருமையடைகின்றோம். தங்கள் நாவன்மையும் சீலத் திருத்தொண்டும் மேல்மேலும் வளர்வதாக என்று வாயார வாழ்த்தி, வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாகிய கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரப் பெருமானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கின்றோம்.

'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'

**வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்.**

'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாஞ் சிறப்பு'. இத்தகைய சிறப்பைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடத்தே இன்று காணக்கூடியதாயிருக்கிறது. அவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்துவரும் அளப்பற்ற சேவைகள் தமிழ் கூறும் நல்லுலக மெங்கும் பாராட்டப்பெற்று, புகழ் ஒளி வீசுகின்றன. ஆசிரியையாக அரும்பணி ஆற்றி வரும் அம்மையார் தம் நன்முயற்சியாலும் சீரிய ஒழுக்கத்தினாலும் கல்வித்திறனாலும் எம் ஈழவள நாட்டில் கல்விப்பகுதியில் ஒரு தனிச்சிறப்பெய்தி இருக்கிறார். சைவ சமயக் கல்விப் பாடத்திட்டக் குழுவில் ஓர் உறுப்பினராய், சமயபாட அமைப்பில் பெரும் பங்குபற்றி இருக்கிறார். அம்மையாருக்கு என்றும் நற்சுகமும், நீண்ட ஆயுளும், ஈற்றில் பிறவிப் பெரும் பயனும் கிடைக்க எல்லாம் வல்ல எம்பெருமானை வழுத்தி நிற்போம்.

**மு. வயிரவப்பிள்ளை, கொழும்பு.**

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால் 'நல்லவர்' என்றே கூறி முடித்துவிடலாம். அன்னாருடைய இன்னிசை கலந்த பேச்சு, கேட்பவர்களைப் பிணித்துவிடும் தன்மையது. ஈழத்தில் மாத்திரமன்று; தமிழ்நாடு, மலேசியா, முதலிய இடங்களிலும் சென்று பேசியுள்ளார். அத்தோடு அமையாது அவர் குரல் தமிழ் வழங்கும் இடமெல்லாம் சென்றொலிக்கவேண்டுமென்பது எமது வேண்டுகோள். எங்கள் முருகன் கோவிலில் அவர் பொழிந்த சமயமாரி என்றும் வற்றாத ஊற்றாக அமைந்துள்ளதை எம்மால் மறக்கமுடியாது.

**விசுவத்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபை, சுழிபுரம்.**

அரியதான மானிடப் பிறவி எடுத்து, வாழ்நாளெல்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டும் நல்வினை புரிந்து, சகோதர மக்களுக்கு அறிவொளி காட்டி, நல்வழிப்படுத்தும் பேறு கோடியில் ஒருவருக்குக்கூடக் கிட்டாத பெரும் பேறாகும். அத்தகைய பேற்றினைப் பெற்று, எண்ணற்ற மக்களைச் சைவசீலர்களாகத் திகழ வைப்பவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். சைவத் திருமுறைகளின் பரப்பையும், சித்தாந்த சாத்திரங்களின் ஆழத்தையும் கண்டு, தாம் கண்டதை விண்டுகூறும் வித்தகம் கைவந்த சித்தாந்த ஞானாகரம். இச் செஞ்சொற் செம்மணிக்கும் எமது சபைக்கும் உள்ள தொடர்பு மிக நெருங்கியது; நெடுங்காலத்தது; நிலைத்து நிற்பது. உலகம் அவரைப் பாராட்டுவது கண்டு நாம் பெருமித மடைகிறோம்.

அவர் பல்லாண்டு பயனுடை வாழ்க்கை வாழ அம்பலத்தரசன் குஞ்சித சரணத்தை இறைஞ்சுகின்றோம்.

**விவேகானந்த சபை, கொழும்பு.**

''வாழ்வாங்கு வாழ்பவர் தெய்வத்துள் வைக்கப்படுவர்''. உண்மையான உள்ளத்துறவுகொண்டு, அறம், அன்பு, அறிவு நிரம்பப்பெற்றுச் சமுதாயத்திற்குப் பயனுள்ளவராகத் திகழ்ந்து, மாணவருக்குக் கல்வி புகட்டும் கடமையை ஆற்றிவரும் பண்டிதை அவர்கள் ஈழப் பெண்மணிக்கு வழிகாட்டி. ஆண்டாள், ஔவையார், திலகவதியார் போன்ற வாழையின்பின் வாழைதாம் பண்டிதை அவர்கள். இறைவனையும் நம்மையும் ஒன்றுபடுத்துஞ் சேவையிலீடுபட்டவர்களிவர். ஒருவகையில் இவர் வாழ்வு ஆண்டாள் வாழ்வைப்போன்றது. எமது பாராட்டுக்களையும் நன்றியையும் பண்டிதை அவர்கட்கு இந்து மாமன்றத்தோடிணைந்து சமர்ப்பிக்கின்றோம்.

**வேலணைச் சைவச் சங்கம்.**

சமயத்தின் உண்மையை யறியாது, தம் மதத்தையும் தம் கலைப் பண்புகளையும் தாமே பேணுது தடுமாறுகின்றது ஈழத் தமிழினம். இவ்வேளையில் தன்னடக்கத்தோடு அயராது உழைத்து, தன்னலமற்ற சேவைபுரியும் உயர்ந்த உள்ளம் படைத்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற கரும வீராங்கனைகள் பலர் வேண்டும். அன்னூர் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

க. ஜெயக்கொடி பா.உ., உடுப்பிட்டி.

கேட்போர் உள்ளம் அலுக்காமலும், மாறுபாடான எண்ணங்களைத் தோற்றுவிக்காமலும் பேசவல்ல வித்தகர் செந்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். குழந்தைகள், பெண்கள், வாலிபர்கள், பெரியார்கள், மூதறிஞர்கள் அனைவருக்கும் அவர் பேச்சில் பயன் இருக்கும். நாஸ்திகர்கள், ஆஸ்திகர்கள் அனைவருக்கும் சந்தேக விபரீதமின்றித் தெளிந்த ஞானம்பிறக்க அவரது சொற்பொழிவு பெருவிருந்தாக அமையும். சமூகப்பணி, சமயப்பணி இரண்டையும் தமது சொல்லாலும் செயலாலும் வலியுறுத்திவரும் இவருக்கு அரசும், தெய்வமும் உதவிபுரியத் தவறுவதில்லை. அவரது பணி மேலோங்க இறைவனைத் துதிக்கிறோம்.

ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னுகம்.

அன்று ஒரு மங்கையர்க்கரசி இருந்தார். பாண்டிமாநாடு உய்ந்தது. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை அழைப்பித்து, தமது கணவனையும், நாட்டையும் காக்கச் செய்தார்.

இன்றோ ஈழநாடு மட்டுமன்றித் தமிழ்கூறும் நல்லுலகமனைத்தும் செல்லும் வழி யறியாது தவிக்கின்றது. ஈழத்தமிழகம் செய்த தவத்தின் பயனாகச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது வாழ்க்கையையே சைவ உலகுக்கு அர்ப்பணித்து நாடுநாடாகச் சென்று தமிழ் மக்களுக்கு நல்வழிகாட்டி, நற்றொண்டு புரிந்து வருகின்றார்கள்.

வெறும்பேச்சால் மட்டுமல்ல, தமது தவ வாழ்க்கையாலேயும் கண்டோர் மனத்தை எல்லாம் பரிசுத்தமாக்கிப் புனிதப்படுத்தி வரும் இந்த மங்கையர்க்கரசி நமக்குச் சிவபெருமான் தந்துள்ள பேரருள்.

அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றத்தார் கௌரவிப்பது, சைவத்தையும், தமிழையும் மட்டுமன்றி நம்மை நாமே பெருமையுடன் கௌரவித்துக் கொள்வதாகும். சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் நீடூழி வாழ வாழ்த்துவதுடன், அவர் காட்டிய வழியிலே நமது பெண்மணிகள் வாழ்ந்து, தொண்டாற்றி எம்மை உய்விக்கவும் வேண்டுமென்று எல்லாம் வல்ல திருவருளை மனமாரப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ ராம கான சபை, கொழும்பு.

சைவ சித்தாந்தம் எல்லாம் கசடறக் கற்றுக் கன்னலினும் இனிய சொற்பெருக்காற்றும் பண்டிதை தங்கம்மாள் வாழ்க, வாழ்கவே!

THE CEYLON HINDU LEAGUE.

# பகவத் கீதையும் பெரிய புராணமும்

— ச. அம்பிகைபாகன் —

வாழ்க்கைக்கு வழிகாட்டும் இந்து சமய நூல்களில் பகவத்கீதை முக்கியமான தாகும். இந்துக்களின் மூன்று பிரதான நூல்களில்-பிரஸ்தான திரயங்களில்-கீதையொன்றாகும். மற்றையவை உபநிடதங்களும் பிரமசூத்திரமுமாகும். ஓர் ஆசாரியர் தமது கொள்கைகளை இந்து சமயத்தவர் மத்தியில் நிலைநாட்ட விரும்பினுல் அவர் பிரஸ்தான திரயங்களுக்கு உரையெழுதி அவற்றில் தமது கொள்கைகள் அமைந்திருக்கிறனவென்பதை நிலைநாட்டவேண்டும். இதனாலேயே சங்கராசாரியரும் இராமனுசாச்சாரியாரும் மத்துவாசாரியரும் இம்மூன்று நூல்களுக்குப் பாஷியங்களை எழுதினர். பிரம்ம சூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியர் ஓர் உரையெழுதியுள்ளார். அது சைவ சிந்தாந்தக் கொள்கைகளுக்குப் பெரிதும் ஒத்துப்போவதாலேயே காசிவாசி செந்தி நாதையர் அதைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

பிரஸ்தான திரயங்களில் உபநிடதங்கள் வேதங்களின் ஞானகாண்டமாக இருந்தபோதிலும் குரு சிஷ்ய சமவாதங்களாக அமைந்து மிகப்பரந்து கிடக்கின்றன. பிரம்ம சூத்திரமோவெனில் உபநிடதங்களின் கருத்தை மிகமிகச் சுருக்கமாகச் சூத்திரவடிவில் கூறியுள்ளது. இந்நூல் கண்ணபிரான் மகாபாரதத்தில் தளர்ச்சியுற்றிருந்த அர்ச்சுனனுக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிறது. பகவத்கீதையின் சிறப்பைப் பின்வரும் வெண்பா நன்கு எடுத்துக் காட்டுகிறது.

சீரார் உபநிடதம் சேதாவாம் தேவர்பிரான்
பாராரும் ஆயனும் பார்த்தனோர் — நீரார்
இளங்கன்றாம் கீதையே இன்னமுதாம் உண்பார்
களங்கமில் உள்ளத்தை உடையவர்காண்!

(உபநிடதங்கள் பசு, கண்ணபிரான் இடையன், அர்ச்சுனன் பசுக்கன்று, கீதை பால், இப்பாலைஉண்போர் தூய உள்ளத்தை உடையவர்கள்.)

இனி பகவத்கீதைக்கு ஓர் உரை கண்ட சேர் பொன்னம்பலம் இராமநாதன் இந்நூலைப் பற்றிக் கூறியிருப்பதைக் காண்பாம். "இந்த ஸ்ரீக்ருஷ்ணர் ஜுனஸம்வாத பகவத்கீதையில் காமக்ரோதபயதுக்க நிவிர்த்திகள் எவ்விதம் ஸித்திக்குமென்பது பூரணமாக உணர்த்தியிருக்கின்றது. ஆத்ம உத்தாரணத்தைக் கருதிவாழும் உலோகத்தாருக்கு இதனினும் மேலான நூல் இல்லை. இந்நூல் ஆதிதொட்டு அந்தம் வரையில் அனுபவ முறையாகவே திருவாய் மலர்ந்தருளப்பட்டது.

கீதை கர்மத்தையே போதிக்கிறதென இக்காலத்தவர் சிலர் கூறுவர். ஆனல் அதைப்படிக்கும் பொழுது கன்மம், ஞானம், யோகம், பக்தி முதலிய பல வேறு மார்க்கங்களைப் பதினெட்டு அத்தியாயங்களில் கூறுவதைக் காணலாம். இவற்றில் ஒருவன் தனக்குகந்த மார்க்கத்தைப் பின்பற்றிப் பெருவாழ்வு பெறலாம். ஆனல் இந்நூல் முழுவதிலும் தலைசிறந்து நிற்பது பக்தியேயாகும். தமது பல்வேறு உபதேசங்களின் மத்தியில் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் பக்தியைப் பற்றிக்கூறிவந்த கண்ணபிரான் தமது கடைசி உபதேசத்தில் பக்தியை வற்புறுத்திக் கூறியுள்ளார். "என்பால் மனம் வைத்து என்னிடம் பக்திபூண்டு என்னை ஆராதித்திடுவாய். என்னை வணங்கு. என்னையே அடைவாய். உனக்கு உறுதி கூறுகிறேன். எனக்கினியான் நீ. தர்மங்களையெல்லாம் பரித்தியாகம் செய்துவிட்டு என்னையே சரண் அடைக. பாபங்களினின்றும் உன்னையான் விடுவிப்பேன். வருந்தாதே."

## பெரிய புராணம்

இனிப் பெரிய புராணத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்பாம். இது அறுபத்து மூன்று

தனியடியார்கள் சரித்திரத்தைக் கூறுவதோடு ஒன்பது தொகையடியார்களைப் பற்றியும் கூறுகிறது. இவர்கள் "சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார்கள்." பெரிய புராணத்தில் கூறப்பட்ட அடியார்கள் பலவேறு வழிகளைப் பின்பற்றிய போதிலும் அவற்றுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பது பக்தியே. இவ்வடியார்களின் சரித்திரத்தைப் பாடிய சேக்கிழார் பரமபக்தராகவிருந்த படியாலேயே தமது புராணத்தை 'தெய்வம் மணக்கும் செய்யுள்களில் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியுள்ளார்'.

இனிப் பகவத்கீதையில் கூறப்படும் உபதேசங்களைக் கொண்டு பெரிய புராணத்திற் கூறப்படும் அடியார்களின் சரித்திரத்தை எவ்வாறு செவ்வனே விளங்கிக் கொள்ளலாம் என்பதை ஆராயலாம். பகவத் கீதை உண்மையான பக்தராயிருப்பின் அவர்கள் எவ்வருணத்தைச் சேர்ந்தவராயினும் ஆண் பெண் என்னும் பாகுபாடின்றி இறைவனை அடைவார்களென்று கூறுகின்றது. இவ்வுண்மையைப் பெரிய புராணத்தில் பரக்கக் காணலாம். நாயன்மார்களுள் அரசரைக் காணலாம். பிராமணரைக் காணலாம். வேடரைக் காணலாம். பறையரைக் காணலாம். பெண்களையும் காணலாம்.

### சுவதர்மம்

ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளை, சுவதர்மத்தைச் செய்யவேண்டுமென்று பகவத் கீதை கூறுகின்றது. 'பரதர்மத்தைக் காட்டிலும் குணமற்றதெனினும் சுவதர்மமே சிறந்தது. சுவதர்மத்தில் இறந்துவிடினும் நன்றேயாம்'. மேற்கூறியபடியே நமது நாயன்மாரும் வாழ்ந்தனர். கண்ணப்பர் வேடர்; திருநீலகண்டர் குயவர்; இளையான்குடிமாற நாயனர் வேளாளர்; திருக்குறிப்புத்தொண்டர் ஏகாலியர்; நந்தன் புலையர்; அதிபத்தர் பரவர். இவர்களெல்லாம் தத்தம் குலத்துக்குரிய தொழில்களை நிஷ்காமியமாகச் செய்தனர்.

தத்தம் தொழில்களை நிஷ்காமியமாகச் செய்பவர் இறைவனைத் தவறாது அடைவர். பற்று நீங்கிச் செய்யத்தக்க தொழில்களைச் செய்துகொண்டிரு. பற்றில்லாமல் தொழில் செய்துகொண்டிருக்கும் மனிதன் பரம்பொருளை எய்துகிறான்.

நிஷ்காமியகர்மத்தைக் கையாளுவதற்குள்ள இரு வழிகளுள் ஒன்று கர்மத்தின் பயனைத் துறப்பது. மற்றையது கர்மத்தின் பயனை ஈசுவரனுக்கு அர்ப்பணமாக்குவது. பின்னையதே இலகுவானதும் சிறந்ததுமான வழி. கண்ணபிரான் அர்ச்சுனனுக்குப் பின்வருமாறு கூறுகிறார். "எல்லாச் செய்கைகளையும் உள்ளளவினால் எனக்கு அர்ப்பணமாகத் துறந்துவிட்டு, எனது என்பதற்று மனக்காய்ச்சல் தீர்ந்தவனாய்ப் போர் செய்யக் கடவாய்." நமது நாயன்மார்களும் தாங்கள் செய்த பணிகளையெல்லாம் சிவனுக்கே அர்ப்பணமாகச் செய்தார்கள். இதைப் பத்தராய்ப் பணிவார் புராணத்திலுள்ள பாட்டொன்று நன்கெடுத்துக் காட்டுகின்றது.

'யாதானும் இவ்வுடம்பாற்செய்வினைகள் ஏறுயர்த்தார்
பாதாரவிந்தத்தின் பாலாகவெனும் பரிவாற்
காதார்வெண் குழையவர்க்காம் பணிசெய்வார்
கருக்குழியிற்
போதார்கள் அவர்புகழ்க்குப் புவனமெலாம்
போதாவால்'

இன்னும் நமது நாயன்மார் தமது பணிகளை மாத்திரமல்லாமல் தமது ஆவியையும் உடலையும் உடைமையையும் கடவுளுக்கே அர்ப்பணஞ்செய்தார்கள். இயற்பகையார் மனைவியைக் கொடுத்தார்; சிறுத்தொண்டர் பிள்ளையைக் கொடுத்தார்; குங்குலியக் கலயர் தமது பொருள் முழுவதையுங் கொடுத்தார். இப்படி அர்ப்பணம் செய்தவர்கள் செய்யும் செயல் சிவன் செயலாகும். இவர்கள் செய்யும் பாதகத்துக்கும் பரிசு கொடுப்பார்!

இனி நாம் கவனிக்கப்போகும் விஷயமே பகவத் கீதைக்கு உயிர்நிலையாயுள்ளது. ''செய்கையில் செயலின்மையும், செயலின்மையில் செய்கையும் எவன் காண்கிறுனே அவனே மனிதரில் அறிவுடையோன். அவன் எத்தொழிலைச் செய்கையிலும் யோகத்திலிருப்பான். எவனுடைய செய்கைத் தொடக்கங்கள் எல்லாம் விருப்பு நினைவு தவிர்ந்தனவோ, அவனுடைய செயல்கள் ஞானத்தீயால் எரிக்கப்பட்டனவாம். அவனை ஞானிகள் அறிவுடையோன் என்கிறுர்கள். கர்மப்பயனிலே பற்றுக் களைந்தவனும், எப்போதும் திருப்தியுடையோனுய் எதனிலும் சார்பற்று நிற்போன் செய்கை செய்து கொண்டிருக்கையிலும் செயலற்றவனுவன்.'

இதற்குதாரணமாகச் சனக மகாராசாவின் வாழ்க்கையை எடுத்துக்காட்டுவது வழக்கம். அவர் மகாராசாவாக இருந்த போதிலும் உலகப்பற்றுச் சிறிதுமில்லாதவராய் வாழ்ந்தார். ஒருமுறை அவருடைய அழகிய நகரமாகிய மிதிலை தீப்பற்றியெரிந்ததாம். அப்பொழுது மிதிலை எரிகிறதென்றும் தம்முடைய உடைமை ஒன்றும் எரியவில்லையென்றும் கூறிஞராம். தாம் அழிவற்ற ஆத்மா என்பது அவர் மனத்தில் உறுதியாயிருந்ததே இதற்குக் காரணம்.

இவரைப்போல் வாழ்ந்த இரண்டு நாயன்மார்களின்—அவர்களும் அரசர்கள்—சரித்திரத்தை இங்குக் கவனிப்பாம். ஒருவர் மூர்த்தி நாயஞர். இவர் வைசிய குலத்திற் பிறந்து சோமசுந்தரக் கடவுளுக்குச் சந்தனக்காப்புக்கொடுப்பதே தமது கைங்கரியமாகக் கொண்டு வாழ்ந்தவர். இப்படி வாழ்ந்து வருங்காலத்தில் இவருடைய நாடு ஆருகமத அரசனுல் கைப்பற்றப்பட்டது. அவன் இவரது கைங்கரியத்துக்கு முட்டுக்கட்டையாயிருந்ததும் அதனுல் இவர் முழங்கையைச் சந்தனக் கட்டையாக உபயோகித்ததும் சகலருமறிந்த விஷயம். அக்கொடிய அரசன் சிறிது காலத்தில் இறந்துவிட, அவனிடத்தில் ஆளுவதற்கு வேறரசர் இல்லாதபடியால் அமைச்சர் பட்டத்து யானையின் கண்களைக் கட்டிவிட்டு அரசாள்வதற்கு ஒருவரை எடுத்து வரும்படிவிட்டனர். அது மூர்த்திநாயனுரைத் தூக்கிக்கொண்டுபோய் அமைச்சர் முன் விட்டது. மூர்த்திநாயஞர் இது சிவன் செயல் என்பதையறிந்து தான் அரசாள்வதாயிருந்தால் துறவியாக விருந்தே அரசாள்வதாகக் கூறிஞர்.

'வையம்முறை செய்வேனுகில் வயங்கு நீறே
செய்யும் அபிடேகமுமாக செழுங்கலன்கள்
ஐயன் அடையாளமுமாக அணிந்து தாங்கும்
மெய்யன்புடை மாமுடியே முடியாவதென்ருர்.'

மற்றையவர் சேரமான் பெருமாள் நாயஞர். சேர வம்சத்தில் பிறந்தும் இளம் வயதிலேயே உலக இன்பங்களின் நிலையாமையை உணர்ந்து, இளவரசர்கள் வாழ வேண்டிய முறையை விட்டு, திருவஞ்சைக் களத்திலுள்ள சிவத்தலத்தை அடைந்து, சிவதொண்டில் ஈடுபட்டு வாழ்ந்தார். அவர் வாழ்ந்த முறையைத் தீத்திக்கும் செந்தமிழால் சேக்கிழார் வர்ணித்துள்ளார்.

' உலகினியல்பும் அரசியல்பும் உறுதியல்ல வெனஉணர்வார்
புலரியெழுந்து புனல்மூழ்கிப் புனிதவெண்ணீற் றினும்மூழ்கி
நிலவுதிருநந் தனவனத்து நீடும் பணிகள் பலசெய்து
மலரும்முகையுங் கொணர்ந்துதிரு மாலைசாத்த மகிழ்ந்தமைத்து

திருமஞ்சனமுங் கொணர்ந்துதிரு வலகுமிட்டுத் திருமெழுக்கு
வருமன்புடன்இன் புறச்சாத்தி மற்றுமுள்ள திருப்பணிகள்
பெருமைபிறங்கச் செய்தமைத்துப் பேணும்விருப்பிற் றிருப்பாட்டும்
ஒருமைநெறியின் உணர்வுவர வோதிப்பணிந்தே ஒழுகுநாள்.'

இவர்க்குமுன் அரசாண்ட அரசன் தவம் செய்ய விரும்பி அரச பதவியைத் துறந்தான். இப்படி அரசர் தவஞ் செய்வதற்காக அரச பதவியைத்துறத்தல்பாரத நாட்டில்தான் அறிவோம். அரசபதவிக்கு இன்னெருவரை நியமிக்களண்ணிய அமைச்சர்கள் அப்பதவிக்குரியவர் சேரமான் பெருமாள் நயனுர் என்பதையறிந்து அவரிடம் போய் அரசபதவியை ஏற்கும்படி அவரைக் கேட்டார்கள். அப்பொழுது அவர்,

'இன்பம்பெருகும் திருத்தொண்டுக்கு இடையூருக இவர்மொழிந்தார்
அன்புநிலைமை வழுவாமை அரசுபுரக்க அருளுண்டேல்
என்பும்அரவும் புனைந்தாரை இடைபெற்றறிவேன் எனப்புக்கு
முன்புதொழுது விண்ணப்பஞ் செய்தார்முதல்வ ரருளினுல்

மேவுமுரிமை அரசளித்தே விரும்புகாதல் வழிபாடும்
யாவும்யாருங் கழறினவும் அறியும்உணர்வும் ஈறில்லாத்
தாவில்விறலும் தண்டாத கொடையும்படைவா கனமுதலாங்
காவல்மன்னர்க் குரியனவும் எல்லாங்கைவந் துறப்பெற்ருர்'

பெற்று அவர் வாழ்ந்த வரலாற்றை அவர் புராணத்திற் படித்தின்புறலாம்.

### மனத்தூய்மை

பகவத் கீதையிலும் பெரிய புராணத்திலுமிருந்து நாமறியத்தக்க இன்னுமொரு உண்மை யாதெனில், மனத்தூய்மையே செய்கைத் தூய்மையிலும் சிறந்த தென்பதும், மனத்தூய்மையுடையோர் செய்யும் செயல்கள் உலகத்தாருக்கு அனுசாரமாகத் தோன்றிடினும் அது கடவுளுக்குப் பிரீதியாயிருக்கு மென்பதுமாம். இவ்வுண்மையை நாம் கண்ணப்பர் சரித்திரத்திலிருந்து அறியலாம்.

கண்ணப்பர் காளத்தியப்பருக்குப் பூசை செய்யப்போகும் பொழுது, ஒரு கையில் உருசி பார்த்த மாமிசத்தையும், மற்றைக்கையில் வில்லையும் கொண்டு தலைமயிரில் பூக்களைச் செருகிக் கொண்டும், வாயில் திருமஞ்சன நீரையும் கொண்டு போனுர். போய்த் தன்காற்செருப்பால் நிர்மாலியங்களை நீக்கினுர். இதைப் பார்த்த சிவகோசரியார் துன்பப்பட அவருக்குக் காளத்தியப்பர் கனவில் தோன்றிக் கண்ணப்பரின் மெய்யன்பை எடுத்து விளக்கினுர்.

'அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலைஇவ்வாறு அறிநீயென்று அருள்செய்தார்'

மேற்கூறியவற்ருல், பகவத் கீதையை வாழ்க்கை நெறிகளைக் காட்டும் இலக்கண நூலாகவும், பெரியபுராணத்தை வாழ்வாங்கு வாழ்ந்த அடியார்களின் சரித்திரத்தைக் கூறும் இலக்கிய நூலாகவும் கொள்ளலாமெனப் பெறப்படுகின்றது.

# அத்துவித வேதாந்த சித்தாந்தம்

— க. இராமச்சந்திரா —

மெய்கண்டதேவர் அருளிய "சிவ ஞான போதம்" என்னும் ஞான சாஸ்திரமானது வடமொழியிலுள்ள ரௌரவ ஆகமத்தின் ஓர் படலத்தின் மொழி பெயர்ப்பு என்ற ஆதாரமற்ற, அசம்பாவிதமான பிரசாரம் எப்போது தமிழ் நாட்டில் தலை காட்டியதோ அப்போதே வடமொழி தென்மொழிப் போட்டியும், பொறாமையும், பூசலும் தோன்றினவெனலாம்.

அவற்றை மேலும் உரம்போட்டு வளரச் செய்யச், சிவஞான சித்தியார் பரபக்கத்தில் வகுத்துக் கூறப்பட்டுள்ள சமயங்களெல்லாம் வைஷ்ணவ ஆசாரியரான மாதவாசாரியர் இயற்றிய "சருவதரிசன சங்கிரகம்" என்னுஞ் சாத்திரத்திலிருந்து எடுத்தாளப்பட்டவை என்ற அபாண்டமான பிரசாரம் வெளியாயது. ஆரம்பத்தில் மொழி அளவில் அடங்கிய பிரச்சனை, சைவ-வைஷ்ணவப் போட்டிக்கும் சகுண-நிர்க்குண வாக்குவாதங்கட்கும் வழிவகுத்தது. இவ்வித பொய்ப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வித்துவான்கள், அருணந்தி சிவாசாரியார் மாதவாசாரியருக்கு எழுபது ஆண்டுகளால் முற்பட்டவர் என்ற உண்மையைக் கூடக் கவனிக்கவில்லை. தமிழ்ப் பண்டிதர்களும் சும்மா இருக்கவில்லை. படித்த பதர்கள் அவர்களிடையேயும் மலிந்திருந்தனர்.

மாணிக்கவாசகர் சங்கரருக்கு முந்தியவர் என்பது ஆராய்ச்சியாளர்கள் இன்று கண்ட முடிபு. அப்படியிருந்தும், தமிழ்ப் பண்டிதர்கள், "மிண்டியமாயா வாதமென்னுஞ் சண்டமாருதம் சுழித்தடித்தார்த்து" என்ற மணிவாசகர் வாக்கு சங்கரரின் உபதேசங்களைக் குறித்தெழுந்ததென அட்டகாசஞ் செய்தனர். இன்னும், சில புத்தகப் பூச்சிகளான தனித்தமிழ்ப் பண்டிதர்கள் வேதாந்திகளை மாயாவாதிகளென இகழ்வதைக் கேட்கின்றோம். சைவசமய சாத்திரங்களைப் படித்தவர்கள் எவராவது இப்படிக் கூச்சலிடமாட்டார்கள்.

வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், யோகசாஸ்திரங்களின் களஞ்சியமாக விளங்குவது பதினெண் சித்தர்களுள் ஒருவரான திருமூலர் அருளிய "திருமந்திரம்." இது சைவத் திருமுறைகட்கும் சாத்திரங்கட்கும் முற்பட்டதாய், அவற்றின் கருவூலமாய்ப் போற்றப்படும். இந்நூல் சாத்திரமும் தோத்திரமுமான தனிச்சிறப்புடைத்து. அவர் கருத்துகளைத் துருவி ஆராய்ந்தால், வேதாந்தம் என்பது சுத்த சைவந்தான் என்பது தெளிவாகும். இந்த இடத்தில் திருமூலர் எவ்வாறு மாயாவாதியை வேதாந்தியிலிருந்து பிரித்துக் காட்டியுள்ளார் என்பதை அவரது அரிய பாடல் ஒன்றால் விளக்க விரும்புகிறோம்:-

"ஆகின்ற தொண்ணூற்றே டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாறு நருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறு ஐயைந்து மாயாவாதிக்கே"

இங்கே இருபத்தைந்து தத்துவங்களைக் கூறும் சாங்கியர்களையே மாயாவாதிகளெனக் குறிப்பிடுகிறார் திருமூலர். எனவே அத்துவித வேதாந்திகளை மாயாவாதிகளென அழைத்தல் அறியாமையாகும். அவர்கள் உண்மையில் பிரம்மவாதிகளே. இத்தகைய பிரம்மவாதிகளே வைதிக சைவர்களும் ஆனார்கள்.

உயர்வற உயர்ந்த ஞானமார்க்கத்தில் அத்துவித தத்துவம் மிகவும் நுட்பமானது; பரம இரகசியமானது; வேதத்தையும், ஆகமத்தையும், உபநிடதத்தையும், ஓதி அதிகாரமுள்ளவர்கட்கே பயன்படும் நெறியது. அத்துவித வேதாந்தத்தின் முக்கிய

உண்மைகள் இரண்டு: (1) ஒன்றான பரம் பொருளே எல்லாமாய்த் தோன்றுகிற தென்பது; (2) சிவனும் பரம்பொருளும் வேறல்லவென்பது. இவ்விரு கருத்துக்களை ஆதரிக்கும் பாடல்களைச் சைவத்திருமுறை களில் பரக்கக் காணலாம். உதாரணமாக, இரு திருமந்திரங்களை மாத்திரம் இங்கு தருகின்றோம் :-

" நீரு நிலனும் விசும்பங்கி மாருதந்
தாரு முடம்புறு சேர்தியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞக னெம்மிறை
ஊருஞ் சகல னுலப்பிலி தானே "

" சீவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே "

தாயுமானாருக்கு மெய்கண்டதேவரே ஓர் சிறந்த அத்துவித அனுபூதிச் செல்வ ராய்க் காட்சியளித்த உண்மையை அவர் அருளிய,

" பொய்கண்டார் காணாப் புனிதமெனுமத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ!"

என்னும் எந்நாட்கண்ணியால் உணரக் கிடக்கின்றது. மேலும், மெய்கண்டாரு டைய சீடராகக் கருதப்படும் சிவஞான வள்ளலார் "வள்ளலார் சாத்திரம்" என்னும் நூல் இயற்றியுள்ளார். அவர் பாடிய குருதோத்திரமொன்றில் முத்திக் காய அத்துவிதம், இரண்டு சித்தாந்தங் கட்கும் ஒன்றேயென்ற உண்மை அருமை யாகத் தரப்பட்டுள்ளது. அப்பாடல் பின் வருமாறு :-

"சைவசித் தாந்தமெல்லாம் தானவனுகி நிற்றல்
மையறு வேதசித்த மற்றது நானேயென்னல்
உய்வகைக் கிரண்டுமொன்றென் றேதியென்
னுயிர்க்கிலாபஞ்
செய்தசற் குரவனீயே திருப்புலி வனத்துளானே"

வள்ளலாரென்பவர்கள் 64 சந்தானத் தார். இவர்கள் வைதிக சைவசிந்தாந்தி கள்; ஞானசம்பந்தப் பெருமானை ஆதி குருவாகக் கொண்டெழுந்த சீர்காழி மடத் தைச் சேர்ந்தவர்கள். சிவஞானவள்ளலார் போல் சிறப்புற்றவர் "ஒழிவிலொடுக்கம்" என்னும் பிரமஞானநூலை இயற்றிய கண் ணுடைய வள்ளலாராவர்; விரிவஞ்சி இத் துடன் மேற்கோள்கள் தருவதை நிறுத்து கின்றோம்.

சைவ சமய இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவில்லாத தனித்தமிழ்ப் பண்டிதர்கள் தத்துவக் குப்பைகளைக் கிளறும் போது, சாதாரண தமிழ் இலக்கியத்தில் மிளிரும்

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்னும் வள்ளுவர் வாக்கிற்கும்,

" தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்று ணர் "

என்னும் ஔவையார் பாடலுக்குமாவது மதிப்புக் கொடுத்தார்களானால் மயக்கம் நீங்கப்பெறுவர்.

சமய உலகில் இன்று சமரச உணர்ச்சி எங்கும் பரவியுள்ளது. பலநூற்றாண்டுக ளாகப் பகைமை உணர்ச்சி கொண்டிருந்த றோமன் கத்தோலிக்க மதமும் புறற்றெஸ் ரன் பிரிவுகளும் ஏசுநாதரின் திருப்பெய ரால் ஒருங்குகூடி வழிபட்டு ஈடேற முயல் கின்றன. இந்தச் சூழ்நிலையில் இந்துக்கள் அத்துவித - துவைத வாக்குப் போர்களில் ஈடுபடுதல் முற்றிலும் பொருத்தமற்றதா கும். "இறைவனே! எனக்கு மோக்ஷமும் வேண்டாம்; உன்னுடன் இரண்டறக் கலக்கும் சாயுச்சிய பதவியும் வேண்டாம்; என்னிடம் உன்மீது பக்தி இருந்தாற் போதும்" என்று கூறும் அடியார்களுக்கே, அவர்களது சுத்த பக்தி முதிர்ச்சியில், அவர்கள் வேண்டாமென்கின்ற அத்துவித நிலை அவர்கள் அறியாமலே அவர்களை அடையும் என்பது திண்ணம். இந்தப் பேருண்மையைத் தாயுமானவர் "வேத முடன் ஆகம புராணமிதிகாச முதல்" என வரும் பாடலில் 'ஓதரிய துவிதமே அத்தவித ஞானத்தையுண்டுபண்ணும் ஞான மாகும்" என்று தமது சொந்த அத்துவிதா

னுபவங்கொண்டு சைவ உலகிற்கு அழகாக வற்புறுத்தியுள்ளார். இதற்குமேல் யாம் கூறுவதற்கு என்ன உள்ளது?

தமிழ் நாட்டினதும், ஈழநாட்டினதும், முக்கியமாகச் சைவ நன்மக்களினதும் அதிர்ஷ்டவசமாக இன்று சைவ சித்தாந்தப் பிரசாரம் பன்மொழிப் பயிற்சியும், ஆழ்ந்த அறிவோடு கூடிய சாதனையால் விரிந்த உள்ளமும் படைத்த பெருமக்கள் கையில் உள்ளது. இந்தக் குழுவைச் சேர்ந்தவரே ஈழத்துச் சைவ நன் மக்களால் ஆர்வத்தோடு இந்த விசேட மலர்கொண்டு இன்று கௌரவிக்கப்படும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். எமது மொழிக்கும் சமயத்திற்கும் இந்தச் செந்தமிழ்ச் செல்வி செய்துவரும் தொண்டு அளவிடற்கரியது. சகல கலாவல்லியின் அருள் முன்னின்று அப்பணி மேலும் ஓங்குக!

1949–ஆம் ஆண்டு மார்கழி மாசத்தில் கொழும்பில் நடந்த சைவ மகாநாட்டின் தலைவரான திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் பிரசங்கம் நினைவுக்கு வருகின்றது. தமது தலைமைப் பேருரையில் அவர் சங்கரரைப் புகழ்ந்து பாராட்டிய விதம் மறக்கும் தரத்ததன்று. அவ்வித உண்மை செறிந்த பாராட்டு முன்னர் எந்தச் சைவப் பிரமுகர்கள் வாயிலும் வந்ததுமில்லை:–

'தில்லைத் திருநடனத்திற்கு உருகாதார் யார்? உலகம் பொய்யென்ற கொள்கையைத் தமிழ் நாட்டிற் பிறந்த சங்கரர் மறுத்துரையாடி, அனைத்தும் ஆனந்தம் பிரம்மனே என நிலைநாட்டுவது எளிதாயிற்று. சண்மதத் தாபகரென அவர் பெயர் பெற்றது தமிழ் மரபுக்கு ஒட்டியதேயாம். வியவகார உண்மையென்றும் பாரமார்த்திக உண்மையென்றும் அவர் கூறியபாட்டினை மறந்து பிரமம் அன்றி ஒன்றும் இல்லை; அறமேது வீடேது, எனத் திண்டாடும் நிலைமையும் ஏற்பட்டது' இதுவே சுந்தரனார் கூறிய மணிவாசகம்.

அண்மையில் ஈழத்தில் உபதேசிக்கப்பட்ட இன்னுமோர் மணிவாசகத்தை எடுத்து விளக்கி இக்கட்டுரையை முடிக்க விரும்புகின்றோம். யாழ்ப்பாணத்துச் சைவ நன்மக்கள் செய்த புண்ணியத்தினால், சென்ற நூற்றாண்டுப் பிற்பகுதியில், தென் இந்தியாவிலிருந்து வந்த ஓர் அற்புத ஞான சித்தரான ஸ்ரீ கடையிற்சுவாமிகளால், தாய்நாட்டிற்போலவே சேய்நாட்டிலும் ஒரு ஞான குரு பரம்பரை ஸ்தாபிக்கப்பட்டது. அப்பெரியாரின் சீடர்களுள் ஒருவரே நல்லூர் செல்லப்பசுவாமிகள். அன்னார் தமது குருவிடம் பெற்ற ஞானப் பேற்றை மிகவும் சுருக்கமாக நான்கு மகா வாக்கியங்களில் தமது சீடரான ஸ்ரீ யோகர் சுவாமிகளுக்கு அருளினார். அவை வருமாறு:-

1. ஒரு பொல்லாப்புமில்லை
2. எப்பவோ முடிந்த காரியம்
3. நாம் ஒன்றும் அறியோம்
4. முழுதும் உண்மை

இந்த வாக்கியங்களின் விரிவுரையாக ஸ்ரீ யோகசுவாமிகளின் ஆசியுடன் வெளிவந்த 'குருநாதன் அருள்மொழிகள்' என்ற அரிய சிறுநூலில் நாம் இக்கட்டுரையில் விளக்கத் துணிந்த அத்துவித வேதாந்த சித்தாந்த சமரசம், கீழ்க்கண்டவாறு மிகவும் அழகாய்த் திரட்டப்பட்டுள்ளது:–

"சீவபோதம் நீ என்றும் அவ்வறிவுக்கு அறிவு செய்பவன் சச்சிதானந்த சொரூபியாகிய சிவம் என்றும், அந்தச் சிவ சொரூபத்தைச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனாதீதத்தையடைந்து, சீவபோதமற்றுச் சிவமாதலே முக்தியென்றும் கூறும் சைவ சித்தாந்தம். வேதாந்தமோ வென்னில், சீவபோதம் நீ அன்றெனத் தள்ளிச் சீவபோத சாட்சி நீ என்றும் அச்சீவசாட்சியே சச்சிதானந்த பிரமம் என்றும் அப்பிரமமே நீ என்றும் அறிந்து நின் நிச சொரூபமாகிய பிரம சொரூபமாயிருத்தலே முத்தியென்றும் கூறும். சீவபோத ஒழிவிலேயே இன்பம் உதிப்பதென்பதும், இன்பாதீதமே முக்தியென்பதும் இரு சாரார்க்கும் ஒத்த முடிபு. வேதாந்த - சித்தாந்த - சமரசம் இதுவேயாம்."



1972 ஏப்பிரலில் மலேசியா சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கத்தினர் "திருவாசகக் கொண்டல்" என்ற பட்டம் செல்வி தங்கம்மாவிற்கு அளித்துப் பொன்னாடை போர்த்தியும் மாலையால் அணி செய்கின்றனர்.

# சிவவழிபாடு

கங்கேஸ்வரி கந்தையா, மட்டக்களப்பு

உலகிலே பல மனிதர்களை நாம் காணுகின்றோம். ஆயினும் எல்லோரும் ஒரே விதமானவர்களாகத் தெரியவில்லை. மனிதராகப் பிறந்தும் மாக்களாக வாழ்பவர், மரத்தைப்போன்று வாழ்பவர்களும் நம்மிடையே உள்ளனர். இவர்களையே 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்று கூறுகின்றார் வள்ளுவப் பெருந்தகை. மனிதன் தன் தீய குணங்களினின்றும் விலகி நற்குணங்களாகிய அன்பு, அருள், அறம் இவற்றைச் சார்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே மக்கட் பண்பு எனலாம். அத்தகைய வாழ்வினால் ஆன்மா ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அவ்வாறு ஆன்மாவை அன்பு, அருள், அறம் நிறைந்ததாக்கும் தத்துவத்திற்குத்தான் சமயம் என்று பெயர். சமயம் என்பது வாழும் நெறி. ஆத்மிக நிறைவைப் பெறுதற்குச் சமயம் அவசியமாகின்றது. அன்பு கனிந்து அறம் பெருக்கும் இச்சமய நெறிக்கு ஆற்றலளிப்பது திருவருளே. இத்திருவருளாலேயே உலகம் இயங்குகிறது. மக்களது இம்மை, மறுமை வாழ்வினை வளம்படுத்தி மலரச் செய்த இவ்வருள் நெறியினை நாம் சைவத் திருநெறி என்கிறோம். இந்தச் சைவ நெறி சிவனை முதல்வனாகக் கொண்டது. சிவன் என்னும் திருநாமம் சிவம், செம்மை, மங்களம், ஒளி எனப் பல பொருள் கொள்ளுவதால், இது சிவநெறி, செந்நெறி, மங்கள நெறி, ஒளி நெறி எனப் போற்றப் படுகிறது.

ஒரு நாட்டின் பழக்க வழக்கங்களை நமக்கறிவிப்பன அந்த நாட்டுக்குரிய நூல்கள். அந்நூல்களிலிருந்து மக்களது கொள்கைகள் வழிபாடுகள் முதலியவற்றை அறிய முடிகின்றது. பண்டைத் தமிழிலக்கண நூலான தொல்காப்பியச் சூத்திரமொன்று,

> கொடிநிலை, கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே

எனத் தொல்காப்பியருடைய காலத்திலும் கடவுள் வாழ்த்துப் பெருவழக்காயிருந்த தனைக் காட்டுகின்றது. மற்றுமோரிடத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலத்தையும் கூறும் பொழுது,

> மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வண்ணன் மேய பெருமணல் உலகமும்

என அவ்வந்நிலத்தவர் வணங்கும் தெய்வங்களைச் சிறப்பாகப் புலப்படுத்துகின்றார். முல்லைநிலத் தெய்வமான மாயோன் திருமால் என்றும், குறிஞ்சிநிலத் தெய்வமான சேயோன் முருகன் என்றும், மருதநிலத் தெய்வமான வேந்தன் இந்திரன் என்றும், நெய்தல் நிலத் தெய்வமான வண்ணன் வருணன் என்றும் உரையாசிரியர்கள் இதற்கு விளக்கங் கொடுக்கின்றனர். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற ஒரு பெருங் கொள்கையினைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர் நம் முன்னோர் என்றும் அறிகின்றோம். இதனால், ஒரே முழு முதற் கடவுளை நால்வகை நிலத்துமக்களும் தம் வாழ்வுக்கேற்ப வெவ்வேறு பெயரிட்டு அழைத்தனர் என்று நாம் கொள்ளுதலே சிறப்புடையதாகும். இம் முழுமுதற் கடவுளே செம்மையனாகித் தமிழர் வாழ்வைச் செம்மைசெய்துள்ளான்.

இந்தச் செம்மை நெறியே சிவநெறி. இந் நெறிக்கு முதல்வன் சிவன். சிவபெருமா னுக்குப் பற்பல பெயரிட்டுப் பரவி வழுத் தினர் அடியார்கள். 'பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மான்' என்று ஆராமை யோடும் கூறுகின்றார் அப்பரடிகள். இப்படி யன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என உருஎழுதிக்காட்டமுடியாத சிவபிரானுக்கு உருவம் காட்டினர் நம் முன்னோரான தவ முதல்வர்கள். சங்க இலக்கியங்களில் சிவன் எனும் திருநாமத்தைக் காணமுடியாவிடி னும் அப்பெயரைக் குறிக்கும் குறிப்புகளைக் காணலாம்.

இமையாமுக்கண், மூவெயில் முருக் கிய முரண்மிகு வெல்வன், ஆல்கெழு கட வுள் -எனத் திருமுருகாற்றுப்படையிலும்;

முக்கட் செல்வர், நீலமணி மிடற்றொ ருவன் - எனப் புறநானூற்றிலும் வரும் தொடர்கள் அக்காலத்தில் சிவவழிபாடு இருந்தமையைக் காட்டுகின்றன. இவ்வாறு வழிபட்டு வாழ்ந்த மக்கள், செல்வமே நோக்கமாகவும், தெளிவே கொள்கையாக வும் கொண்டு வாழ்க்கை நடாத்தினர் என்பதை,

> இருவேறு உலகத் தியற்கை திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு

என்று வள்ளுவர் மிக அழகாகக் கூறியுள் ளார். இம்மையில் இன்பமனுபவித்து வாழ்வதற்கு, வேண்டிய பொருள்களைப் பெறுவது திரு அடைதல். மறுமை இன் பத்திற்காக மனத்தைத் திருத்திக் கடவுள் குணங்களைப் பெறுவது தெளிவு அடைதல். முன்னையதை முயற்சியால் எளிதிற் பெற்று விடலாம். அது ஆத்மிக வாழ்வுக்கேற்ற முயற்சியாக ஆகிவிடாது. பின்னையதான தெளிவு என்பது உணர்வின் தெளிவு. செம்மையான மனதும் நல்ல நினைவும் கொண்டவர்களுக்கே இந்த உணர்வுத் தெளிவு உண்டாகும். இறைவனை வழிபட்டு வந்த அடியார்கள் எல்லாரும் இவ்வுணர் வுத் தெளிவு பெறுதற்பொருட்டு, அவனி டத்தில் பொருளும், பொன்னும், போக மும் வேண்டாது, அருளும் அன்பும் அற னும் வேண்டி நின்றனர் என்பதனைப் பழைய இலக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இவையே தெளிவுபெற்ற உணர்வினை நல் குவன. இவ்வுணர்வுத் தெளிவினைப் பெறு தற்காகவே அக்காலக் கடவுள் வழிபாடு நடைபெற்றதென்பது தெளிவாகின்றது. உணர்வுத் தெளிவு பெற்ற அருளாளருக் கன்றிச் சாதாரண மனிதருக்கு இறைவ னுடைய இயல்பும் இருப்பும் தெரிவது அருமையாக இருக்கும் ஆதலால், இறைவ னுக்கு உருவமும், கோயிலும் எழுப்பப் பெற்று திருவிழாக்களும் நிகழ்த்தப்பட லாயின. சிலப்பதிகாரத்தில் மதுரையிலி ருந்த கோயில்களைக் கூறவந்த இளங்கோ வடிகள்,

'நுதல்விழிநாட்டத்து இறையோன் கோயிலும்'

எனச் சிவபெருமானுடைய கோயிலுக்கே முதலிடம் கொடுத்துள்ளார். கண்ணகிக்குக் கோயிலெடுத்தபோது, அவளது சிலையை வைத்து வழிபாடு செய்யுமுன், தான் வழி படுகடவுளாகிய சிவபெருமானைச் செங்குட் டுவன் வணங்கினன் என்பது,

> ''இமையவர் உறையும் இமயச் செவ்வரை
> சிமயச் சென்னித் தெய்வம்பரசி'' —

என்னும் அடிகளால் அறியக் கிடக்கின்றது. இவ்வாறு சிவன் எனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி எம்பிராற்குத் தமிழ் நாட்டு மூவேந்தரும் பெருங்கோயில்கள் எடுத்து வழிபாடு ஒழுங்குற நடக்க அடி கோலினர். அவன் அருள்பெற்ற அருளாளர் கள் உலகை இயக்கும் வகையில் இறைவனை இருவித நிலைக்காளாக்கினர். ஒன்று அறிவு நிலை, மற்றது ஆற்றல்நிலை. அறிவு சிவம்; ஆற்றல் சக்தி என்று உணரவும் வைத்தனர். ஆணும் பெண்ணுமாயியங்குகின்ற இவ் வுலக முதல்வனான இறைவன் சிவமும் சக்தியுமாகி இருக்கின்ற தன்மையினாலே அர்த்தநாரீஸ்வரன் என அழைக்கப் பெறு கின்றான்; அருவம், அருவுருவம், உருவம் என முத்திறத் திருமேனிகளையும் தாங்கி அருளுகின்றான். மனங்கடந்து நின்று மாசு

கன்ற நல்லோர், சிவபெருமானை அருவமாய் வழிபட்டு அருட்பேறுற்றனர். சிலர் அருவும் உருவுமான நிலையில் சிவலிங்கப் பெருமானைக் கண்டு களித்து நற்கதி பெற்றனர். ஆயினும் மக்களிற் பெரும்பாலானோர் ஈடுபாடு கொள்வது உருவத் திருமேனியிலேயே. இதனால், கண்ணுதற் கடவுளாய், பெண்பாலுகந்தானாய், நட்டம் பயின்றானாய்க் கண்டு கண்டு ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம்பாடிப் பரவினர் அடியார்கள். திருமுறைகள் பன்னிரண்டும் அடியார்களுடைய சிவவழிபாட்டினை வளர்த்து நிற்கப் பயன்படுவன.

'பகுத்தறிவு நிறைந்த இன்றைய உலகிலே சந்திரனை எட்டிப்பிடித்துள்ளான் மனிதன். இதற்குள் சமயம் சொல்கிறபடி வாழவேண்டும் என்கின்றனர் ஒருசாரார். விஞ்ஞானம் என்னென்ன விந்தைகளை யெல்லாம் காட்டியுள்ளது, இதனோடு இணைந்து வாழ்வதால் எத்தனை புதுமை இன்பத்தைப் பெறலாம்''? என்ற கேள்வியிலேயே வாழ்பவர்கள் சிலர், சமயவாழ்க்கை அறிவுக்குப் பொருந்தாததொன்று என்ற முடிபுக்கு வந்து விடுகின்றனர். கல்வி தானே வாழ்க்கைக்கு அறிவைத் தருகின்றது, 'அறிவுடையார் எல்லாமுடையர்' என்று கூறுகிறதே பொய்யாமொழி எனத் தம் கூற்றுக்கு உறுதுணையும் தேடிக் கொள்கின்றனர். எம்பிரானின் பொன்னடி தொழுதலே கற்ற கல்வியின் பயனாகும்.

''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்''

என்பதும் பொய்யா மொழியேயன்றோ? வாலறிவன் என்பதற்கு மெய்யுணர்வினை உடையவன் என்றார் பரிமேலழகர். மெய்யுணர்வினையுடையவனும் மெய்யறிவு மயமானவனும் என்பது நோக்கத்தக்கது. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் 'நற்றாள்' எனப்பட்டது. இறைதாள் தொழுது பிறவியறுத்தலே கல்வியறிவிற்குப் பயன் என்று கூறுகிறது இக்குறட்பா.

'இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

என்கின்றார் அப்பரடிகள். சமயவாழ்க்கையும் கல்வியும் கடவுளைப் பற்றிய தூய அறிவைக் கொடுக்கிறது. இவ்வறிவு தமக்கு வரக்கடவதை முன்னரே அறியத் தக்கதொரு ஆற்றலை நல்குகிறது. 'அறிவுடையார் ஆவதறிவார்' என வள்ளுவர் கூறியதும் இதனாலேபோலும். பிறவிப் பயனையடைய ஆன்மிகக் கல்விக்கு உலகக் கல்வி தூண்டு கோலாயமைதல் வேண்டும். இத்தகைய கல்வியறிவு பெற்றவர்களே, தூய அறிவுமயமான இறைவனைக்காண வல்லவர்கள் என்பதைச் சைவத்திருமுறைகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

'கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்' திருமுறை 3

'கல்லாதார் காட்சிக்கரியாய் போற்றி
கற்றாரிடும்பை களைவாய் போற்றி' திருமுறை 6

'கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்களுற்றோருங் காதலானை' திருமுறை 6

'கற்றவர் தொழுதேத்தும்
நற்றவா' திருமுறை 7

'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை' திருமுறை 9

இவ்வாறாக, கற்றவர்களே கடவுளை அறிவர் என்னும் கருத்து வலியுறுத்தப் பெற்றுள்ளமையைக் காணலாகும். ஆலவாய்ப் பெருமானைப் பாடிய சம்பந்தப் பெருமான், குற்றம்நீ, குணங்கள்நீ, சுற்றம்நீ, பிரானுநீ என்றதோடமையாது, 'கற்றநூற் கருத்து நீ' என்று கூறியமை, கல்வியின் பொருள் இறைவனே என்பதைச் சுட்டுகிறது. செல்வம் மல்கு திருக்கானூரீசனைப் பாடவந்த நாவுக்கரசர், 'கல்வி ஞானம் கலைப்பொருளாயவன்' சிவன் எனத் தெளிவாக்குகின்றார். கல்விப்பொருளும், கலைப்பொருளும், ஞானப்பொருளும், சிவபெருமானே என்பது இவர்களது துணிபு. ''அறிவினைக் கொடுக்கும் ஆரூரப்பனே' எனத் திருவாய்

மலர்ந்த ஆரூரர், 'அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே' என்றும் பாடுகின்றார். அறிவினைத் தருபவரும், அறிவாயிருக்கிறவருமாகிய பரம் பொருளைக் குருவாகக் காண்கிறது சுந்தரரது உள்ளம். இதனால்,

'மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக்கும்திருக் காளத்தியுள்
அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே'

என்று பாடுகின்றார்.

'உருவும் அருவும் உருவோடருவும்
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்கும்
குருவுமென நிற்கும் கொள்கைய னாகும்'

—திருமூலர்

ஆதலால், சிவஞானமாகிய பேரின்பத்தைப் பெறுதற்கு, அவனருளாலே அவன் தாள் வணங்கி அவனைக் குருவாய்ப் பெறுதலே மேலானது. இது மிகவும் எளிதான காரியமல்ல. இதற்குச் சீரான சைவ வாழ்க்கையும், தெளிந்த சமயப் பற்றுள்ளமும், சிவன் திருவடிகளில் தளராத பக்தியினால் ஏற்பட்ட மனவுறுதியும் தேவை. இவ்வாறு வாழ்ந்து, சமணப் புயலை எதிர்த்து நின்றவர் திருநாவுக்கரசர். சிவபெருமான் குருவடிவிலே வந்து சிவஞானத்தை அருளுவதென்பது, மன்னுயிரின் தவத்தால் நிகழ்வது. 'தென்னவன் பிரமராயன்' பட்டத்தோடும், முதலமைச்சர் பதவியோடும் இருந்த வாதவூரரது முன்னைத் தவத்தால், எம்பெருமானே குருவாகி வந்து அவரைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்டான். இதன் பேறாகப் படிப்பவரது மனம் கரைத்து மலம் கெடுக்கும் எட்டாம் திருமுறையாகிய திருவாசகம் மக்களுக்குக் கிடைத்தது. வாதவூரரும் மாணிக்க வாசகரானார். தருமசேனர் எனச் சமணர் போற்றும் துறவியாகத் திகழ்ந்த மருணீக்கியாரது பின்னைப் பெருந் தவத்தால், அவரைப் பெருஞ் சூலை நோய்க்கு ஆளாக்கி ஆட் கொண்டருளியது சிவன் திருவருள். பரமசிவன் திருவடியே பற்றுக் கோடாகக் கொண்டு தாம் வாழ்ந்தது போல் மக்களையும் வாழுமாறு ஏவும் இனிய பாடல்களைக் கொண்ட நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளான தேவாரங்கள் இவர் திருவாய் மலர்ந்தவையாகும். இதனால் மருணீக்கியாரும் வாக்கின்மன்னர், நாவுக்கரசர் எனப் போற்றப்பட்டார். இவர் தாம் பாடிய உள்ளத் திருக்குறுந்தொகையில்,

''மருவினை மடநெஞ்சம் மனம் புகும்
குருவினைக் குணத்தாலே வணங்கிநும்
திருவினைச் சிந்தையுட் சிவனாய் நின்ற
உருவினைக் கண்டு கொண்டதென் னுள்ளமே''

என்று பாடுவதில், குருவாகி மனம் புகுந்து குணமளிக்கும் சிவம், உவாகிச் சிந்தை நிறைத்தமையால் தாம்பெற்ற தூய உணர்வினைப் புலப்படுத்துகின்றார். இவ்வாறே அம்மா அப்பா என்று அழுத சப்பந்தக் குழந்தைக்கு ஞானப்பால் கொடுத்து, மூன்று வயதிலிருந்தே முதலாம், இரண்டாம் மூன்றும் திருமுறைகளான தேவாரப் பதிகங்களை அருள வழிவகுத்தது குருவெனக்கருதும் தோணிபுர அம்மை அப்பன் திருவருள். தோழரென உரிமை கொண்டாடிக் கால்நோவத் தூது நடந்து, ஏழாந் திருமுறையான தேவாரமென்னும் சுந்தரர் திருவாயமிர்தத்தை நாமனைவரும் பருகிப் பயன் கொள்ளச் செய்தமை, திருவெண்ணெய் நல்லூரிற் குருவருள் கூட்டவந்த சிவன் திருவருளேயன்றோ! மேலும், சேந்தனார், கண்டராதித்தர் முதலியோர் அருளிய ஒன்பதாந் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டும்; திருமூலர் திருவாய் மலர்ந்த பத்தாந் திருமுறையான திருமந்திரமும்; நம்பியாண்டார் நம்பி,

காரைக்காலம்மையார் முதலியோர் அருளிச் செய்த பதினோராம் திருமுறையென்னும் பிரபந்தங்களும்; சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்த திருத்தொண்டர் புராணம் என்னும் பன்னிரண்டாம் திருமுறையும் எம்பிரான் திருவருளாற் கிடைக்கப் பெற்றவை; படிக்கப் படிக்கப் பயன்தந்து பிறவிப்பிணிக்கு மருந்தாவன. இவையனைத்தும் சிவவழிபாட்டினை நன்கு வலியுறுத்தி, வளர்த்து நிற்கப் பயன்படுவன. நாமும் இவ்வருளாளர்களின் அடிச்சுவட்டில் வாழ்ந்து, அருட்கடலாகிய அம்மையப்பன் திருவாருளால் ஆன்மபோதம் பெற முயற்சித்தல் வேண்டும். ஆதலால்,

''கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால் விரவாடும் வித்தகன்'' 4ஆம் திருமுறை

''நீதியால் நினைப்புளான் நினைப்பவர் மனத்துளான்'' 4ஆம் திருமுறை

''நீதியாற் தொழுவார்கள் தலைவன்'' 5ஆம் திருமுறை

''நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது ஆதியும் ஏதும் அறிகிலான்'' 10 ஆம்திருமுறை

ஆகிய சிவப்பரம் பொருளை, 'வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து நீ யொன்றுசெய்யல்'' எனத் திருமூலர் கூறுவதை அநுசரித்து, திரிகரண சுத்தியோடும் பக்தி செய்து வாழுதலே, இம்மை மறுமைப் பயன்களைத் தந்து மனிதப்பிறவியினை மாண்புறச் செய்யும்.

நிதிபதியும் நீதிபதியுமான இறைவனை ''காலமானகழிவதன் முன்னமே ஏலுமாறு வணங்கிநின்றேத்துமின்'' என்று நம்மை அன்போடும் பணிக்கின்ற அப்பர் பெருமானுர், ''நெஞ்சில் நினைந்தேன், நினைவெய்தலும் வஞ்ச ஆறுகள் வற்றின'' எனக் கூறுகின்றுர். எம்பெருமானை வணங்கி ஏத்துவதால் வஞ்சம் ஒழிந்து, நீதிக்கும் நேர்மைக்கும் உறைவிடமாகிறது நெஞ்சு. வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை எம்பிரான், விறகிற் தீயும், பாலில் நெய்யும் போல் மறைய நிற்பவன். இவன் உறவைப் பெற உள்ளம் உள்கலந்தேத்துதல் வேண்டும். ''நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்ஞர்சடைப் புண்ணியன்'' ஆகுந் தன்மையனே சிவபெருமான் என்பது அப்பர் திருவாக்கு. ''நெஞ்சார நீடு நினைவாரை மூடு வினைதேய நின்ற நிமலன்''—நெஞ்சுளே புக்கு நிற்கும் பெருமான் நினைவாரது வினையை அறுப்பான் என்று அருளிய திருஞானசம்பந்தர், மனிதப் பிறவி எடுத்த நாம் தேடவேண்டிய நிலையான செல்வம், சிவன் திருவடியிற் பற்று வைத்துப் பணிதலே என்று கூறுகின்றுர்.

'' ... ... தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்
[வமே''

என்று ஆணையிடுகிறது அவர் வாக்கு.

''கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன்
ஆயிடினும் மற்றறியேன் பிறதெய்வம்''

என்னும் மாணிக்கவாசகரது மனவுறுதியை யாம் பெற்றுக் கொண்டு, அவர் கூறுவது போல,

'சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி
வாக்கு உன் மணி வார்த்தைக்காக்கி'

ஐம்புலன்களையும் சிவப்பணிக்கே அர்ப்பணமாக்குதல் வேண்டும். அப்பொழுதுதான்

நமக்கு வேண்டிய பொன்னும், மெய்ப் பொருளும் போகமும், திருவும் கிடைக்கும். இதனல் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று, நாமெடுத்துக்கொண்ட மனிதப் பிறவியின் மேலான பயனை அநுபவிக்கும் உரிமை உடையவர்களாவோம்.

இப்போது நாமனைவரும் விஞ்ஞான யுகத்தில் வாழுகின்றோம். தெய்வ நம்பிக் கையும் பக்தியும் குறைந்து விஞ்ஞான முடிபுகளுக்கே மதிப்புக் கூடுகிறது. இத ஞற் போட்டியும் பூசலும் அதிகரிக்கின்றது. மன அமைதி குறைகின்றது. போதாக் குறைக்குப் பசியும் பட்டினியும் தாமே வந்தடைகின்றன. மக்களும் திசைதடு மாறி நடுக்கடலிற் தத்தளிக்கும் கலங்கரை விளக்கம் காணுக் கப்பலைப்போல் பரதவிக் கின்றனர். இவ்வித நிலை மாறவேண்டுமா ஞல் சிவபக்தி வளரவேண்டும். மனம் கலக்கி மையல் வலைப்படுத்திய மருள் நெறி யினின்றும் விலகிச் செம்மை நெறியினைக் கடைப்பிடித்தல் வேண்டும். பன்னிரு திரு முறைகளிலும் சரண்புகுதல் பயன்தரும் மருந்தாகின்றது. மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளும் சிவன் திருவடியைச் சிந்தைசெய்து, உடல் நோய் ஆன்ம நோய்களைத் தீர்ப்போமாக. மூலநோய் தீர்க்கும் முதல்வன் திருவருளைப் பெறக் காதலாகிக் கசிந்துருகி, பொய்தான் தவிர்ந்து போற்றி செய்வோமாக. சிவ நெறி அன்பே சிவம் எனும் முடிபினை நல்கு வது; ஆகவே அனைத்துயிர் மேலும் அன்பு செலுத்தி, சிவசிவ என்று சித்தம் உருகிச் சிந்தை நிறைத்துத் தீவினை மாய்த்துச் சிவவழிபாடு செய்து, திருவருள் பெற்று வாழ்வோமாக:

'சிவாய நமவென்று சித்தம் ஒருக்கி
அவாய மறவே அடிமைய தாக்கி
சிவாய சிவசிவ வென்றென் றேசிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே'



1972 ஏப்பிரலில் சிங்கப்பூர் இலங்கைத் தமிழர் சங்கம் சிவத் தமிழ்ச் செல்விக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றது.

# அன்னை தயை

நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்

'அன்னை' என்று சொல்லும்போதே தன்னை மறந்த ஒரு தனிப் பெரும் நிலை தோன்றுகிறது. "ஈன்று புறந்தந்தவள்" அன்னை. "வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும், தோள்மேலும் கட்டிவளர்த் தெடுப்பவள் அன்னை. கருணையும், பொறுமையும், காப்பும் பொறுப்பும், அருமையுமுடையவள் அன்னை. அன்றியும் அன்னையின் பொலிவை, பூரிப்பை, பெண்மையிலே காண்கின்ற ஒரு தன்மையிருக்கின்றதே, அங்கேதான் உண்மை துலங்குகின்றது. பெண்மை மென்மையுடையது. சாந்தமுடையது; என்றாலும் திண்மையான ஆண்களையெல்லாம் தன் உதரத்தில் கருவாக உருப்பெற வைத்து உணர்வூட்டும் மனத் திண்மை வாய்ந்தது. இந்த உலகிலே எங்கும் எதிலும் அன்னையின் வடிவமும், அன்பும் தோன்றுவதையே நாம் காணலாம். முன்னைப்பழம் பொருட்டு முன்னைப்பழம் பொருளாய் இருப்பவளும் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றி உடையவளாய் இருப்பவளும் அன்னையே. இயற்கையே அன்னைவடிவாகத்தான் காட்சி அளிக்கின்றது. புல புலெனக் கலகலனெப் பூமியிற் புறந்தரப்பட்டிருக்கின்ற அனைத்துமே இயற்கை அன்னையின் தயையிலும் கருணையிலுமே வாழ்கின்றன.. பாரகம் முழுவதும் பரந்தெழுந்து பல்கிப் பெருகி, அன்னையின் பேரருட் கருணையின் பிரவாகத்தில் திளைக்கின்ற அனைத்துமே, உலக மாதாவாகிய பராசக்தியின் ஒப்பரிய இளந்தைகளும், குழந்தைகளும், எண்ணற்கரிய உயிர்ப் பொருட்களுமாகும். இக்கருத்தை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மையின்மேல் வைத்துப்பாடும்போது, நயினை மான்மியம் என்னும் கவிதைத் தொடரிலே மிக அழகாகப் பாடுகிறார் வரகவி நயினை நாகமணிப்புலவர் அவர்கள்.

அப்பாடல் பின்வருமாறு:

**பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்**
**பேணலாலன்னை பெற்றிடுவோர்**
**உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்**
**உதவலாலன்னை எக்கலையுஞ்**
**சொற்றதாலன்னை உலகொடுவானுந்**
**தொழுதலாலன்னை என்றென்றும்**
**பற்றதாங் கருணை பொழிதலாலன்னை**
**பராபரை நாகபூட்ணியால்**

அன்னையை "உலகொடு வானும் தொழுகின்ற" சிறப்பைப் புலவர் எடுத்துக் காட்டுகின்றார்.

அச்சம், அபாயம், அழிவு இவையின்றி வாழ்வில் முன்னேற, எப்போதும் இணை பிரியாத இரண்டுதுணைகள் வேண்டும். ஒன்று தெய்வத்தாயின் திருவருள்; மற்றொன்று நம்பிக்கை, சிரத்தை, சமர்ப்பணம் ஆகியவற்றோடு கூடிய அந்தக்கரணம். நமது நம்பிக்கையும், சிரத்தையும், சமர்ப்பணமும் மாசற்றதாகவும், பூரணமானதாகவுமிருந்தால், நம்மதெல்லாம் தெய்வத் தாயைச் சேரும். அகங்காரத்திற்கும் அந்நிய சக்திக்கும், ஒன்றுமே மிஞ்சாது. அவளுடைய கருணை ஒரு சிறிதிருப்பினும், இடர்கள், தடைகள், அபாயங்கள் அனைத்தினின்றும் எம்மை அவள் காப்பாற்றுவாள். அவளுடைய பூரண பிரசன்னம் எம்மைச் சூழ்ந்து விட்டால், நாம் கவலையற்று, அச்சமற்று, எந்த மிரட்டலுக்கும் அஞ்சாமல், இவ்வுலகம், அல்லது காணு உலகங்களினின்று வரும், எப்படிப்பட்ட வலிய பகைக்கும் கலங்காமல் எம்வழியே முன்செல்லலாம். ஏனெனில், அஃது அவள்வழி. அவளுடைய கருணையின் ஸ்பரிசம் இடர்களை நல்ல சந்தர்ப்பங்களாகவும், தோல்வியை வெற்றியாகவும், மெலிவைத் தளரா வலிமையாகவும் மாற்றும். அவளுடைய கருணை

பகவானின் அனுமதியைப் பெற்றே வருகின்றது. இன்றேனும் நாளையேனும் அதன் பயன் நிச்சயம். அஃது இன்றியமையாதது எதிர்க்க முடியாதது.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும்" என்னும் பொதுமறைக் கருத்தின்படி தொன்று தொட்டுத் தமிழ்ச் சான்றோர் அம்மை அப்பர் வழிபாட்டிற் றிளைத்தனர். அன்றியும் தம் அரும்பெறல் மக்களையும் அவ்வழி ஆற்றுப்படுத்தினர். அம் முறையில் நோற்பதே பாவை நோன்பு எனப்படும் பக்திப் பெருக்குடைய நோன்பு. கன்னிப் பெண்கள் நல்ல மழை பெய்து நாடு செழிக்கவும், வீடும் குடியுமாய் விளங்கப் பீடுடைத் துணைவராம் காதற் கணவரைப் பெறவுமாக, அன்னையாம் மலைமகளை நோக்கி நோன்பிருப்பர். இந்நோன்பு மார்கழித் திங்கள் மதிநிறை நன்னாளில் நிறைவுறுவது. ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரையுள்ள பெண்கள் விடியற்காலையில் எழுந்து, தூய்மை செய்து பாடிக் கொண்டு தம் தாயுடன் போந்து மற்றக் கன்னியரையும் எழுப்பி நீராடுந் துறைக்குச் செல்வர். அங்கு ஈரமண்ணில் மலைமகள் வடிவைப் பாவை செய்வர். அப்பாவையினை வழிபட்டு நீராடுவர்.

"தழைத்ததோர் ஆத்தியின் கீழ்த் தாபரம் மணலாற் கூப்பி" என்ற அப்பர் திருமுறையால் அறிக. இச்செயல் மார்கழி மாதத்தில் நடைபெறுவதால் மார்கழி நீராடல் என்பர். இந்நீராடல் உலகம்மையின் நினைவோடு ஈன்ற அம்மையின் துணையோடு கூடியாடலால் "அம்மா ஆடல்" எனவும் வழங்கும். இதைப் பரிபாடல் "வெம்பாதாக வியனில வரைப்பென, அம்பா ஆடலின் ஆய்தொடிக் கன்னியர்" எனக் குறிப்பிடுகிறது. மணிவாசகப் பெருமான் தம் திருவெம்பாவையிலே, இந்தக் கன்னிப் பெண்களெல்லோரும் "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைத்த பொங்கு மடுவில்" பாய்ந்து நீராடுகின்ற சிறப்பை வருணித்து, அன்னையின் அருளை வியந்து, அவள் அருளை ஒப்பாம் மழை பொழிய வேண்டுமென்று அன்போடு வேண்டுகின்றார்கள். 'மாமழையே! நீ' கடலைச் சார்ந்து அது குறையும்படியாக நீரை முகந்து விண்ணிலெழுந்து, எம்மை உடைய அருள் அன்னையைப்போல நீல நிறம் பெற்று விளங்கி, எமை ஆட்கொள்ளும் உடையாளின் சிற்றிடைபோல மின்னி விளக்கமுற்று, எங்கள் தலைவியின் திருவடியிலுள்ள பொன்னம் சிலம்புபோல் ஒலித்து, அவ்வுடையாளின் திருப்புருவம் போல வானவில் விளங்கச் செய்து, நம்மை அடிமையாகவுடைய பெருமாட்டியினின்றும் பிரிவிலாத எம்பெருமானுடைய அன்பர்க்கும், அவ்வம்மை திருவுளம் கொண்டு நமக்குச் சுரந்தளிக்கும் இனிமை மிக்க அருட் பொழிவே போன்று பொழிவாயாக" என்று தித்திக்கத் தித்திக்கத் தேவியின் திருவருளை வேண்டுகிறார். அப்பாடல் பின்வருமாறு:

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்து உடையாள்
　　என்னத் திகழ்ந் தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
　　பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
　　தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள் நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
　　என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

"உடையாள், எம்மையாளுடையாள், எம்பிராட்டி" என்னும் மும்மொழிகளாலும் முறையே உயிர்களின் கேவலநிலை, சகல நிலை, சுத்த நிலை என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஆன்மாக்கள் ஆணவத்துடன் ஏதும் அறிய இயலாது புலம்பு நிலையிற் கிடக்கும்போதும் ஆண்டானுக்கு உடைமையே ஆதலால் "உடையாள்" என்றும்,

அவ்வான்மாக்களும் பேரருளால் உடல், கலன், உலகம், ஊண் முதலிய கொடுத்து நடத்தலால் ''எம்மை யாளுடையாள்'' என்றும், அவ்வான்மாக்களுக்கு மெய் யுணர்வு நல்கிச் சிவத்தோடு கூட்டலால், ''எம்பிராட்டி'' எனவும் முறையே மொழிந்தருளினர். திருவருட் சக்தியின் பேரருட் தன்மையைக் கீழிருந்து கூவி அழைத்தால் மேலிருந்து மழைபோல அன்னையின் பேரருள் சுரக்கும் என்பதை மணி வாக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

அன்னை பராசக்தி சிவபெருமானுடைய திருவருட் சக்தியாவார். சக்தியாவது நெருப்பும் சூடும்போல் சிவத்துடன் வேறுபாடின்றி உள்ள வல்லமையாகும். திருவருட் சக்தி எனப்படும் பராசக்தியில் இருந்து ஆதி சக்தி தோன்றும். ஆதிசக்தியைத் திரோதான சக்தி என்றுங் கூறுவர். ஆதி சக்தியிலிருந்து இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்திகள் தோன்றும். சிவ சக்தி ஒன்றே தொழில் வேறுபாட்டால் இங்ஙனம் பெயர்களைப் பெற்று நிற்கின்றது. நம் அன்னைமார் நம்மை அன்புடன் காப்பதுபோல், சிவசக்தியாகிய உமாதேவியார் நம்மையெல்லாம் அன்பினால் காத்தருளுகின்றார். உயிர்களை உய்விப்பதற்காக, அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்து, ஏகமாய், அனேகமாய், ஆயிரம் திருநாமம் பெற்று, அன்னை வடிவில் முன்னை வினைகளை அறுத்து முட்டாத இன்ப சத்தியாய் இருந்து வாழ்விக்கின்றாள்.

அமுத ஞானசம்பந்தக் குழந்தைக்கு அமுதப் பாலூட்டிய அம்மை, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையவள். முன்னை எத்தனை எத்தனை பிறவி வாய்ப்பட்டு வந்தாலும், பின்னை எத்தனை எத்தனை பிறவி எடுத்தாலும் அன்பின் ஊற்றுப் பெருக்கால் உலகூட்டுகின்றவள் அன்னை. குமர குருபர சுவாமிகள் ''துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே'' என மீனாட்சி அம்மையை விளித்துப் பாடிய போது, உடுக்கும் புவனங் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் 'உயிரோவியமாகிய அன்னை, அருச்சகரின் பெண் குழந்தை போன்று தோற்றம்கொண்டுவந்து திருமலை நாயக்க மன்னன் கழுத்திலணிந்திருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினள். அன்னையின் திருவருட் கடாட்சம் இருந்தவாறு என்னே!

''மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி குனிதரும் சேவடிக் கோமளம்'' என்று அபிராமிப்பட்டர் குறிப்பிடுகின்ற திருகடவூர் அபிராமி அம்மை செய்த பேரருள், அபிராமிப்பட்டரை அக்கினிக் குழியில் வீழ்ந்து பிராணத் தியாகம் செய்யாது காப்பாற்றி, தஞ்சைச் சரபோஜி மகாராஜாவிற்குக் கூறிய சொற் சோர்வினின்றும் விடுபட, பூர்வபக்கப் பிரதமையிற் பூரண சந்திரோதயம் உண்டாகும்படி அபிராமி அம்மை பிரசன்னமாகி அருள் புரிந்து, தமது ஒரு திருத்தோட்டைக் கழற்றி ஆகாயத்தில் வீசியருளினர். ''விழிக்கே அருளுண்டு'' என்ற பாடலைப் பாடும்போதுதான் இந்த அற்புத நிகழ்ச்சி உண்டாயிற்று. 'விழிக்கே' என்று சொல்லும் பொழுது இறுதியிலுள்ள ஏகாரத்தின் தொனி விழிக்குமட்டும்தான் அருளும் தன்மை உண்டு என்பதைச் சுட்டி நிற்கின்றது. அன்னையின் நயன தீட்சை அவ்வளவு மகோன்னதமானது. அவள் பார்த்தால் நம் ஆன்மப் பசியெல்லாம் தீரும். அவளுடைய கடைக்கண் திருநோக்கு இடர்ப்பட்டவர்க்கெல்லாம் பெருமருந்து. அன்னையின் அருளை மாந்தித் திளைத்த அபிராமிப்பட்டர் உள்ளமெல்

லாம் புளகாங்கிதம் அடைகிருர். எவரும் அறியா அருமருந்தை அறிந்து கொண்ட அவர், "நின்று மிருந்துங் கிடந்தும் நடந் தும்'' அன்னையை நினைவு கூருகின்ருர். "உன்னை அன்றி மற்ருேர் தெய்வம் வந்திப் பதே'' என்று இறுமாந்து பேசுகிருர். "உன்னை யான் மறவாமனின்று ஏத்து வனே'' என்று சங்கற்பம் பூணுகிருர்.

'சித்தியுஞ் சித்திதருந் தெய்வ மாகித் திகழும்பரா
'சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தையன்றே

என்று அன்னை புகழ் பேசுகிருர். "பார்க் குந் திசைதொறும் தன் அல்லலெல்லாந் தீர்க்கும்'' திரிபுரையின் வடிவத்தைக் காண்கின்ருர். அதுமட்டுமல்ல "அபிராமி சமய நன்றே'' என்று, "தென்னுடுடைய சிவனை எந்நாட்டவர்க்கும் இறைவனுக்கு வது'' போல மேன்மைகொள் சைவ சம யத்தை உலகமுவப்பக் காண்கிருர். இறுதி யாக "முக்கண்ணியைத் தொழுவார்க் கொருதீங்கில்லையே'' என்று முடிக்கின்ருர். அன்னையின் அளவிறந்த அற்புதத் திருவிளை யாட்டில் தன்னை மறந்து, தன் நாமங் கெட்டுத் தலைப்பட்ட அடியாரின் மெய் யுணர்வை என் சொல்லி ஏத்துவது.

புதுயுகம் படைக்கப் புறப்பட்ட ,'பாட் டுக்கொருபுலவன் பாரதியின்'' அன்னை வழி பாடு அருமையானது, "காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண் டும்'' என்று பராசக்தியை வேண்டுகின்ற பாரதி, இந்த மாநிலம் பயனுற வாழ்வ தற்கு வல்லமைதர வேண்டுமென்றும் உரி மையோடு கேட்கின்ருர். அன்னையை உழைப்பவர் தெய்வமாகவும், கவிஞர் தெய்வமாகவும், கடவுளர் தெய்வமாக வும் காண்கிருர். சொல்லுக் கடங்காத பராசக்தியின் சூரத்தனங்களை ஏண்ணி யெண்ணிப் பார்க்கின்ருர். அவளைத் திடங்கொண்டு சிந்தனை செய்கின்ருர், சக் தியின் புகழாமமுதை அள்ளி உண்டு, மதுவை விட இனிப்பாகிய அந்தக் கள்ளிலே மாந் தித் துள்ளுகிருர் பாரதி. அந்த ஆனந்தக் கூத்திலே பிறந்த ஒரு பாடல் பின்வரு மாறு:

ஓம் சக்திதனையே சரணங் கொள்ளு—என்று
சாவினுக் கோர் அச்சமில்லைந் தள்ளு
சக்தி புகழா மமுதை அள்ளு—மது
தன்னி லினிப்பாகு மந்தக் கள்ளு

பாரதி தன்னைப் பரிபூரண சமர்ப் பணமாக அன்னையிடம் ஒப்படைத்து அவ ளுடைய இயல்புகளைத்தான் அனுபவித்த பாங்கிலே பாடல்களாக அள்ளித் தரு கிருன். தசையினைத் தீ சுடினும்—சிவசக் தியைப் பாடும் நல் அகங்கேட்ட கவிஞு ஞின் கவிதை ஊற்று உள்ளத்தை அன்னை யின்பால் உவப்பத் தலைக்கூடும்படி செய்து விடுகின்றது,

இறுதியாக ஒன்று, அன்னையின் தயையைப்போல, இளகியதும், கவனத்தைக் கொண்டதும், பொறுமையைப் பெற்றதும், சகிப்புத் தன்மையை உடையதுமான அன்பு வேறெதுவுமில்லை. ஆதலால் கடவுள் நமது தாயாக ஆகிவிட்டால், வாழ்க்கையின் எல்லா நிலைமைகளிலும் நமக்கு நிச்சயமாக ஒரு ஆதரவு ஏற்பட்டுவிடும். இதை அறிந்த இந்துக்கள் பரமாத்மாவை அன்னையாகவே வணங்க விரும்புகின்றனர். ஒரு தாயின் அன்பும் தயையும் அவளிருக்கும் வீடு முழுவதும் பரிணமிப்பதுபோல ஜகன்மாதாவினுடைய சக்தி அண்டமனைத்தும் வியாபித்து நிற்கிறது. ஆகவே நன்மை தீமை ஆகிய எந்த உருவத்தில் அவள் தோன்றினாலும், அன்பு கொண்ட அன்னையாகவே அவளை வணங்குதல் வேண்டும். இப்படி வணங்கும்போது "தாயே! அம்மா! உனது கரங்களால் என்னை எடுத்துக் கொள். இங்கிருக்க நான் விரும்பவில்லை. இதுவல்ல எனது இருப்பிடம். உன்னிடம் என்னை அழைத்துக் கொள். உனது காரியமாகத்தான் நான் இங்கிருக்கிறேன். உனது வேலையைச் செய்தே தீர வேண்டும். அதைச் சுயநலமற்றுத் தூய்மையுடன் உண்மையாகச் செய்யும்படி எனக்குப் பலத்தைக் கொடு. உனது திருவுள்ளத்தின்படியே யாவும் நடக்கட்டும்." என்று வணங்குவோமாக.

# கோயிலும் சமூக வாழ்க்கையும்

**— க. கைலாசபதி —**

'கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்', என்பது எம்மிடையே தொன்று தொட்டே வழங்கிவரும் ஆன்றோர் வாக்கு. இக்கூற்றிலே கோயிலின் புனிதத்தன்மை மட்டு மன்றி அதன் சமூக முக்கியத்துவமும் உள்ளடங்கி இருக்கிறதென்றே நாம் கருத வேண்டும். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று கூறும் பொழுது, ஆற்றின் பயன்பாடும், அதாவது நீர்வளத்தின் பயன்பாடும், அதன் சமூக முக்கியத்துவமும் இன்றியமையாமையும் எவ்வாறு முனைப்பாகப் புலப்படுகின்றனவோ, அதைப்போலவே முற்காலத்தில் கோயிலானது வழிபாட்டை மட்டுமன்றி வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் தழுவியதாயிருந்தமை வரலாற்றைப் படிக்கும் பொழுது தெளிவாகும்.

இங்கே புனிதத் தன்மையும் சமூகப் பயன்பாடும் ஒருங்கிணைந்து செயற்படுவதை நாம் நோக்குதல் வேண்டும். இதனைக் கோயில் தத்துவம் என நாம் குறிப்பிடலாம். தத்துவம் வாழ்க்கையோடு இணையும் போதுதான் அதற்கு வலுவும் வேகமும் ஏற்படுகின்றன. கோயிற்றத்துவமும் எமது வாழ்க்கையிலும் வரலாற்றிலும் ஆழமாய்ப் பதிந்த ஒன்ருய் இருந்து வந்துள்ளதென்ருல் அது எம்மவரின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த ஓர் இயக்க சக்தியாக இருந்தது என்பதேபொருளாகும். அவ்வாறு தனிமனித வாழ்வுடனும் சமுதாய வாழ்க்கையுடனும் அது நெருங்கிய தொடர்பும் பிணைப்பும் கொண்டிருந்தமையாலேயே நவயுகத்தைக் கூவி அழைத்த கவிஞன் பாரதியும்,

'பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்'

என்று பாடினன். கல்விக்கூடங்களைக் கோயில்களாக்குவோம் என்று கவிஞர் கூறும் பொழுது, கோயிலை வழிபாட்டுக் கூடமாக மட்டுமல்லாது, பயன்பாட்டுத் தலமாகவும் குறிக்கும் நோக்கு நன்கு தெரிகிறதல்லவா? இத்தகைய ஒரு பின்னணியிலே கோயிலுக்கும் சமூக வாழ்க்கைக்கும் இருக்கக்கூடிய தொடர்பையும் அதன் தன்மையையும் நாம் சிந்தித்தல் தகும்.

இடைக்காலத்திலே இந்துக்கோயில்கள் சமுதாயத்திலே முக்கியமான - இன்னும் சொல்லப் போனல், நடுநாயகமான-பாத்திரத்தை வகித்தன என்று வரலாற்ருசிரியர்கள் கூறியிருக்கிருர்கள். கல்வி, கலைகள், பொருளாதாரம், மருத்துவம், விவசாயம் முதலியனவெல்லாம் கோயிலை மையமாகக் கொண்டு இயங்கின என்பதையும் நாம் அறிவோம்.

மத்திய காலத்திலே நிலமானிய அமைப்பு முறை நிலவியது. அத்தகைய அமைப்பிலே கோயிலானது, "நில உரிமைக்காரனுகவும், முதலாளியாகவும், பொருள் நுகர்வோனுகவும், சேவைகளைப் பெறுவோனுகவும் விளங்கியது மட்டுமன்றி, வங்கியாகவும், பள்ளிக்கூடங்களாகவும், அரும்பொருட்சாலைகளாயும், வைத்திய சாலைகளாயும், நாடக மன்றங்களாயும், விளங்கியது. சுருக்கமாகக் கூறுவதாயின், அக்காலத்துக் கோயிலானது நாகரிக வாழ்க்கையிலும் கலைகளிலும் சிறந்தனவெல்லாம் தன்னையே சுற்றி இயங்கப் பெற்றது மட்டுமன்றி, அவற்றையெல்லாம் தார்மீக உணர்விலிருந்து உதித்த மனிதாபிமானத்தால் செம்மைப்படுத்தியது."

இந்நிலையும் அமைப்பும் கோயிலின் பௌதீக நிலையையும், அதற்கும் ஆத்மார்த்த நிலைக்குள்ள தொடர்பினையும் எமக்கு ஓரளவு விளக்குகின்றன. நில உடைமை, பணமுதலீடு, பொருள்களை

வாங்கிக்கொள்ளும் சக்தி இவற்ருல் கோயில் மக்கட் சமுதாயத்தில் வலிமையுடையதாய் விளங்கிய அதே வேளையில், மக்களும் மானசீகமாகக் கோயிலேத் தமது புனிதமான - இலட்சியமான - உணர்வுகளுக்கும் சிந்தனைகளுக்கும் உகந்த ஓர் இடமாகக் கருதினர். இதுவே கோயிலுக்கு அசாதாரணமான ஒரு தானத்தை அளித்தது.அதாவது இயற்கையில் நிறைந்துகிடப்பனவற்றுள்ளும் செயற்கையாக மனிதன் படைக்கக் கூடியவற்றுள்ளும் மிகச் சிறந்தன கோயிலுக்கு அர்ப்பணிக்கத்தக்கவை- அர்ப்பணிக்கவேண்டியவை என்ற எண்ணம் மக்கள் மனத்திலே குடிகொண்டிருந்தது. இதன் விளைவாகவே "நாகரிக வாழ்க்கையிலும் கலைகளிலும் ஏனைய மனித ஆக்க முயற்சிகளிலும், உயர்ந்தன வெல்லாம் தன்னைச்சுற்றி இயங்கப்பெறும்' தகைமையைக் கோயில் பெற்றிருந்தது.

அதாவது கோயிலைப் பற்றி நாம் சிந்திக்கும் பொழுதும் அதன் பாத்திரத்தை விவரிக்கும் பொழுதும் இரண்டு அம்சங்களைக் கூர்ந்து கவனித்தல் சாலும். ஒன்று: அன்றைய பொருளாதார - சமூக அமைப்பிலே கோயில் பெற்றிருந்த உயர்நிலை. இரண்டு: கோயிலின்பால் மக்கள் கொண்டிருந்த மானசீகமான உணர்வு. இவ்விரு அம்சங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன; இரண்டும் சேர்ந்தே கோயிலுக்கு அதன் முழுமையைக் கொடுத்தன. கோயில்களைப் பொறுத்தவரையில், பொருளாதார அமைப்பு மாறிய சூழ்நிலையில், முதலாவது அம்சம் வலுவிழந்து போக நேரிட்டபோதும், இரண்டாவது அம்சமே அதனைத் தாங்கிப் போஷித்து வருகிறது. கோயிலை உன்னதமானவற்றின் உறைவிடமாகக் கருதுவதனுலேயே பேச்சுவழக்கில் கோயிலைச் சிறந்த மனிதப் பிரயத்தனங்களுடன் சேர்த்துக் கூறும் மரபும் இருந்து வருகிறது. உதாரணமாக மறைந்த இந்தியப் பிரதமர் பண்டித நேரு, ஆராய்ச்சிக் கூடங்களையும் உயர்கல்வி நிறுவனங்களையும் Temples of Learning "கல்விக் கோயில்கள்" என்று அடிக்கடி சொல்லுவார். அதைப்போலவே மேலைநாட்டினர் கூட அரும்பொருட்சாலைகள், நூல் நிலையங்கள், முதலியவற்றை - Temples of Culture - "பண்பாட்டுக் கோயில்கள்" என வழங்குவர். இங்கே பண்பாட்டுக் கோயில் என்ற தொடர், சிறந்த பண்பாட்டு உறைவிடங்களைக் குறிப்பதாயுள்ளது. இவ்வளவு தூரம் எதற்காகப் போக வேண்டும்? நாம் சிறுவயதில் படிக்கும் மூதுரை நூல்களில் "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்றும், வயது வந்தவர்கள் தாயைக் 'குடியிருந்த கோயில்' என்றும் கூறுவதெல்லாம் 'கோயில்' என்னும் சொல் எத்துணை விரிந்த பொருளில் வழங்கப்பட்டது என்பதைத் தெளிவாக்குகிறது. அங்கெல்லாம் கோயில் மானசீகமான உணர்வுகளுக்குச் சிகரமாக உள்ளது.

### இந்த மானசீக உணர்வுகள் யாவை?

மதிப்பு, மரியாதை, தியாகம், அர்ப்பணம், நிவேதனம், தன்னலமறுப்பு முதலியன இவ்வுணர்வுகளிற் சிலவாகும். நிலமானிய அமைப்பில் கோயில் சிறந்த நிலையில் இயங்கிய பொழுது, பூமாலை தொடுப்போன், சிறந்த பூமாலையைக் கோயிலுக்கு அர்ப்பணிக்கிருன்; கலைஞன் தனது சிறந்த படைப்பைக் கோயிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்து விடுகிருன். வேறெரு வகையாகப் பார்த்தால் யான், எனது என்னும் சுயநல உணர்வையும் தன்னல வேட்கையையும் சுத்திகரிக்கும் தலமாகவும் கோயில் விளங்கியது. இதன் விளைவாகத் தியாக உணர்வு, பொதுநல நாட்டம் என்பன பொலிய வாய்ப்பு உண்டாயிற்று.

இன்று நிலமானிய அமைப்புப் போய் விட்டது. அதன் மிச்ச சொச்சங்களைச் சில துறைகளில் மறைமுகமாகக் காணக் கூடியதாயிருப்பினும், அதற்குரிய பொருளாதார அடிப்படை இல்லை. இந்தச் சூழ்நிலையில், நாம் முன்னர் குறிப்பிட்ட இரு அம்சங்களில் இரண்டாவதான - மானசீக

மான - உணர்வுகளே வலுவுள்ளனவாயும், சமுதாயத் தொடர்புடையனவாயும் விளங்குகின்றன எனலாம். நவீன காலத்திலே குறிப்பாகப் பாரதி போன்ற கவிஞர்களின் பாடல்களிலே தெய்வபக்திக்குச் சமமாகத் தேசபக்தியும் போற்றப்பட்டு வருகிறது. "பிறந்த பொன்னாடு நற்றவ வானிலும் நனி சிறந்தது" என்று கவிஞர் கூற முற்படுகையில் அழுத்தம் எங்கே விழுகிறது என்பதைக் கண்டுக்கொள்ள அதிகநேரம் பிடிக்காது. அல்லது 'செய்யும் தொழிலே தெய்வம்'' என்று இன்னொரு கவிஞன் பாடுகையில் கோயில், தெய்வம், வழிபாடு முதலியன எத்தகைய பொருள் விரிவைப்பெறுகின்றன என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வடிப்படையிலே பார்க்குமிடத்து கோயில் என்பது நவீன சமூக அமைப்பிலே மானசீக உணர்வுகளைத் தக்கபடி நெறிப்படுத்தும் குறியீடாகவும் அமையும் எனலாம். கோயில் ஒருகாலத்தில் எவ்வாறு ஒரு குறிப்பிட்ட சமூக மக்களை ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தி, அவர்களின் ஆற்றலையும் ஆக்கசக்தியையும் பூரணமாக வெளிக்கொணர உதவியதோ, அதற்கு ஏதுவாக — வாயிலாக — இருந்ததோ, அது போலவே, இக்காலத்தில் சமுதாயம் கோயிலின் இடத்தை வகிக்கிறது எனலாம். ஒற்றுமை, ஒன்றிணைப்பு, உழைப்பு, என்பன மக்கள் உறையும் பெருங்கோயிலான சமுதாயத்திற்கு இன்றியமையாதனவாய் உள்ளன. இது, இன்றுதான் திடீரென ஏற்பட்டது ஒன்று எனவும் கூறிவிட இயலாது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பாரதியார், ஈழத்தில் பாவலர் துரையப்பாபிள்ளை சோமசுந்தரப்புலவர், சரவணபவன் போன்றோர் தேசபக்தியைத் தெய்வபக்தியாக மாற்றும் ரசவாதத்தைக் கவிதையிற் செய்தனர். இவர்களுக்கும் முன்னதாகச் சென்ற நூற்றாண்டின் இறுதியிலே நாடகக் காப்பியமாம் மனோன்மணியம் என்னும் நூலை இயற்றிய சுந்தரம்பிள்ளையவர்கள் இக்கருத்து மாற்றத்தை நன்கு காட்டியுள்ளார். ஒரு காலத்தில் யாகங்கள் மிகச் சிறந்தனவாய்க் கொள்ளப்பட்டன. யாகங்களில் வளர்க்கப்படும் நெருப்பிலும் பார்க்கத் தேசபக்தி நெஞ்சிலே மூட்டும் கனல் மிக உன்னதமானது என்கிறார் சுந்தரம் பிள்ளை:

அந்தணர் வளர்க்கும்
செந்தழல் தன்னிலும்
நாட்டபிமானம் உள்
மூட்டும் சினத்தீ—
அன்றோ வானோர்க்கு
என்றுமே உவப்பு

என்று அவர் படைத்த பாத்திரம் ஒன்று கூறுகிறது. 'நாட்டபிமானம்' என்னும் சொற்றொடர் இங்கு ஊன்றிக் கவனிக்க வேண்டியது. கோயிற்றத்துவம் அதனை இன்று உள்ளடக்குகிறது என்பது வற்புறுத்தத்தக்கதாகும். அதாவது மானசீகமான உணர்வுகளே நவீன காலத்தில் கோயிலுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பின் தன்மையைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன; இதனாலேயே முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளும் ஈசன் உவக்கும் இன்மலரைப் பற்றிப் பாடுகையில் "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்றார்.

கோயில் என்று நமது மரபிலே வழங்குவது மக்கள் சென்று இறைவனை வணங்கும் கட்டடத்தை - ஆலயத்தை - மட்டுமன்று. கோயில் என்பது பல உணர்வுகளும், எண்ணங்களும், சம்பிரதாயங்களும் பின்னிப்பிணைந்து ஒன்றுசேர்ந்த தத்துவமாகும். தத்துவங்கள் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலே பிறந்து காலப்போக்கிலே ஆழமும் அகலமும் பெறுகின்றன. அதே வேளையில் அவை மக்கள் மனங்களைப் பற்றிக் கொள்கின்றன. அவ்வாறு மக்கள் மனத்தைப் பற்றிக்கொள்ளும் பொழுது அவற்றுக்குச் சக்தியும் வலிமையும் ஏற்பட்டுவிடுகின்றன.

எமது காலத்திலே, தேசிய விடுதலை, அரசியல் மாற்றம், சமுதாயப் புனரமைப்பு முதலியன வாழ்க்கையின் தேவைகளாகத்

தொடங்கித் தத்துவார்த்தப் பலம் பெறும் பொழுது எத்துணை வலிமையுடையனவாய் விளங்குகின்றன என்பதைக் கண்ணாரக் கண்டிருக்கிறோம்; காண்கிறோம்.

கோயில் தத்துவமும் உண்மையில் அத்தகையதொன்றேயாம். மேலே கூறியது போன்று, வெறுமனே கட்டடமாக மாத்திரமல்லாது, வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள தத்துவமாக இருப்பதனாலேயே அதற்குத் தார்மீக பலம் இருக்கிறது.

தார்மீக பலம் என்றால் என்ன?

அடிப்படையில் அது மானசீகமானதாகும். ஆங்கிலத்திலே நல்லதொரு தொடர் உண்டு. Sense of belonging என்று சொல்வார்கள். உரிமையுணர்வுடன் இருத்தல், தொடர்புடையவராயிருத்தல் என்று நாம் அதனை மொழிபெயர்த்தல் தகும். சிறு வயதில் பள்ளிக்கூடத்திற் படிக்கும்பொழுது, அந்நிறுவனத்துடன் உணர்ச்சி பூர்வமான தொடர்பு எமக்கு உண்டாகிறது; அதற்கு நாம்ஆட்பட்டு விடுகிறோம். அதுபோலவே வயது கூடக்கூடக் கல்லூரி, தொழில் பார்க்குமிடம், ஈடுபாடுள்ள பொழுது போக்கு முயற்சி, அரசியல்கட்சி, குடும்பம் நாடு முதலிய சிலபலவற்றுடன் உணர்வு பூர்வமாகத் தொடர்பு கொள்கிறோம். அவற்றுடன் ஒன்றிக் கலந்து விடுகிறோம். இவ்வாறு தனிநபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு நிறுவனத்துடன், ஏதோவொரு வகையில் உரிமையுடையவர்களாக—தொடர்புடையவர்களாக — வாழ்கின்றோம். அத்தகைய உரிமையுணர்வும், தொடர்பு நிலையும் தனிமனிதர்கள் தடம் தப்பாமல் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குத் துணைபுரிகின்றன. மனிதன் ஒன்றைப் பற்றுக்கோடாய்க் கொண்டு, சிந்திக்கவும், உணரவும், செயற்படவும் ஏதுவாகிறது. இவ்வுண்மையைப் பௌதிக நிலைமையும் உளவியற்கோட்பாடுகளும் நிரூபிக்கின்றன. தனிமனிதர்களுக்குப் பொருந்தும் இக்கோட்பாடு, சமூகரீதியிலே பரந்த அளவிற் செயற்படும் பொழுது கோயில் தத்துவம் தோன்றிவிடுகிறது எனக் கூறலாம்.

ஒரு கூட்ட மக்கள், அல்லது சமூக மக்கள், அல்லது நாட்டுமக்கள் தமக்குப் பற்றுக்கோடாகக் கொள்ளக் கூடிய பண்பாட்டுக் கூறுகளையும் ஆன்மீக உணர்வுகளையும் மதிப்பீடுகளையும் தொகுதியாகக் கொண்டு இயங்குவது கோயில் தத்துவம் என்று வரைவிலக்கணம் கூறினால் அது தவறாகாது. அலையெறியும் நீரில் கப்பலுக்கு நங்கூரம் பாய்ச்சி அதற்கு விழா நிலை உண்டாக்குவது போல, கோயில் தத்துவம் ஒரு கூட்ட மக்களுக்குப் புணையாக அமைகிறது. தம்மைத்தாம் இனங்கண்டு கொள்ளவும், தமது ஒருமைப்பாட்டை உணரவும், தமது தனித்துவத்தைக் கிரகித்துக் கொள்ளவும், அதனடிப்படையில் தமது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ளவும் கோயில் தத்துவம் வழிவகுக்கிறது.

முற்காலத்திலே 'கோயில்' என்ற சமூக, பொருளாதார நிறுவனத்தை மையமாகக் கொண்டு வாழ்க்கை இயங்கியது. தொட்டிலிலிருந்து சுடுகாடுவரை வாழ்க்கையை அந்த நிறுவனம் நேரடியாகவும் மறைமுகமாகவும் நிர்ணயித்தது; நெறிப்படுத்தியது. ஆனால் இன்று கோயில் பௌதிக நிலையில் அப்படி இயங்கவில்லை. இயங்குவது சாத்தியமும் இல்லை. நாம் இன்று நிலமானிய முறைச்சமுதாய அமைப்பிலும் இல்லை. ஆயினும் கோயில் தத்துவம் திருந்திய நிலையில், புதிய–மாறிய–வடிவத்தில் வாழ்க்கைக்கு வளமும் உரமும் அளிப்பதாகவே இருக்கிறது. இது வரலாற்று வளர்ச்சியின் போக்காகும்.

இக்காலத்தில் 'கோயில்' என்பது ஆலயம் என்ற பொருளில் மட்டுமன்றி, மக்கள் கூடியிருந்து வாழ்ந்து, தமது இயல்புக்கும் சக்திக்கும் ஏற்ற தொழில் புரிந்து அந்த வாழ்க்கை முறையினூடாகச் சில ஆன்மீக இலட்சியங்களையும் மதிப்பீடுகளையும் போற்றி வளர்த்தலைக் குறிக்கிறது என

லாம். இவ்விடத்திலே கோயில் தத்துவக் கருத்து வடிவமாக அன்றி, அன்றாட வாழ்க்கையுடனும் பிணைந்த செயல் வடிவமாக மாறுவதைக் காணலாம். அதுவே அதன் சிறப்பியல்புமாகும். ஒரு மட்டத்தில் நோக்கும் பொழுது கோயில் தத்துவம் என்பது மானசீகமான உணர்வுகளைக் கொண்டதாய்க் காணப்படுகிறது. இன்னொரு மட்டத்திலிருந்து நோக்கும் பொழுது அத்தகைய உணர்வுகளின் உடனிகழ்ச்சியான செயல்களுக்கு ஆதாரமாயும் அது காணப்படுகிறது. அப்படிப்பார்க்குமிடத்துச் சிந்தனையும் செயலும் அத்தத்துவத்திலே சங்கமிப்பதைக் கண்டு கொள்ளலாம். இது மிகவும் முக்கியமாகும். ஏனெனில் வாழ்க்கைக்கு வளமூட்டக்கூடிய ஒரு தத்துவம் சிந்தனையையும் செயலையும் இணைப்பதாகவே இருக்கவேண்டும். உலகில் இதுகாலவரை எத்தனையோ சிந்தனை முறைகளும் தத்துவ அமைப்புக்களும் தோன்றியுள்ளன. அவற்றிற் பெரும்பாலானவை, வலுவிழந்து மறைந்தும் விட்டன; அல்லது பெயரளவிலேயே எஞ்சி நிற்கின்றன. தனிமனிதனது முயற்சிக்கும், அத்தகைய முயற்சிகளின் கூட்டு விளைவாகச் சமுதாய மாற்றத்துக்கும் இடையறாத இயக்கத்துக்கும் வழிகாட்டக்கூடிய தத்துவங்களே ஆற்றலுடன் நிலைத்து நிற்க வல்லனவாகும்.

எமது கோயில் தத்துவத்துக்கு இந்த ஆற்றல் நிரம்ப உண்டு. அதாவது கோயில் சமுதாய வாழ்க்கையைத் தழுவும் பொழுது புதிய புதிய துறைகளில் மக்களது நிர்மாண சக்தியையும் ஆக்க உணர்ச்சியையும் செலுத்தக்கூடிய ஆற்றலைப் பெறுகிறது. இதனை வரலாற்று ரீதியாகவும் இரண்டொரு உதாரணங்கள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

பக்தி இயக்கம் தமிழ்ச் சமுதாயத்திலே பரவலாக இடம்பெற்றிருந்த காலப்பகுதியை எடுத்துக்கொள்வோம். கலை, இலக்கியம் முதலியவற்றுக்குக் கோயில் நிலைக்களனாக – ஆதாரமாக – இருந்தமை பலருமறிந்துள்ள பொதுச் செய்தியாகும். அதனை இவ்விடத்திலே நாம் விவரிக்கவேண்டியதில்லை. எண்ணற்ற திருமுறைப்பாடல்களும், பிரபந்தங்களும் ஏனைய இலக்கியங்களும் மக்களுக்கு விளங்கக்கூடிய இனிய, எளிய மொழியிலும் நடையிலும் எழுந்தன. பண்டிதத்துவம் தவிர்க்க இயலாதவாறு ஒதுங்கிக்கொண்டது. அப்பர் வாக்கிலே 'நாமார்க்கும் குடியல்லேம்; நமனை அஞ்சேம்' என்ற ஆன்ம வீரச் சொற்கள் பிறந்தன. இதன் முக்கியத்துவத்தை நாம் இலகுவில் மதிப்பிட்டுவிட இயலாது. விட்டு விடுதலையாகி நிற்க விரும்பும் உள்ளக் கிளர்ச்சியை அக்காலத்து இலக்கியங்களில் நாம் காண்கிறோம். இலக்கியத்திற் காணப்படும் இவ்வேகத்திற்குச் சமமாகவும் சமாந்தரமாகவும் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியம் முதலியவற்றில் பெரு வளர்ச்சியை நாம் காண்கிறோம். உலக சிற்பக் கலையில் தனியிடம் வகிக்கும் நடராஜ தாண்டவ வடிவம், இக்காலத்தில்தானே முழுநிறைவெய்தியது. வெறுமனே புராணக் கதைகளுக்குக் காட்சி விளக்கம் கொடுத்ததாக மட்டும் நடனத் தோற்றம் அமையவில்லை. பிரபஞ்ச ரீதியில் இயக்கத்திற்குத் தூலவடிவம் கொடுப்பதாகவே அது விளங்குகிறது. இயக்கத்தை ஒரு கணத்தோற்றத்தில் தேக்கும் கலை நுட்பத்தையும் திட்பத்தையும் அவ்வமைப்பில் அற்புதமாகக் காணலாம். அது சக்தியின் சந்நிதியில் மனிதன் பெற்ற அநுபவத்தின் எதிரொலி என்றும் கூறலாம். எனவேதான் அத்தகைய அற்புதமான உருவத்தைக் கண்டால் "மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று வாழ்க்கையை அங்கீகரித்து, அக்காலத்தில் நிலவிய மாயாவாதத்தை மறுதலித்துக் குதூகலத்துடன் பாடினார் நாவுக்கரசர். "நாமார்க்கும் குடிஅல்லேம்; மனிதப்பிறவி வேண்டும்" என்றெல்லாம் ஒருவர் கூறுவது இலேசான காரியம் அல்ல. தன்னம்பிக்கை, வாழ்க்கை உறுதி, செயலூக்கம் முதலியன எந்த அளவுக்கு அவரை உந்தியிருக்கும் என்பதை நாம் வற்றுபுத்த வேண்டிய அவசி

யமேயில்லை. இவ்வாறு கலையிலும் இலக்கியத்திலும் துல்லியமாய்க் காணப்படும் வாழ்க்கைத் தத்துவம் அன்றைய தமிழர் சமுதாயத்திலே விவசாயம், கைத்தொழில், கடல் கடந்த வாணிபம், சமுதாய மாற்றம் முதலியவற்றுக்கும் ஏதுவாய் அமைந்தது என்னும் அடிப்படை உண்மையைப் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. ஒரு சில பக்திமான்களின் பக்திப்பரவசமாக மட்டும் அத்தத்துவம் இருக்கவில்லை; இருந்திருக்கவும் முடியாது. சாதாரண விவசாயிகளும் கைப்பணியாளரும் புதியதொரு தெம்புடன், வாழ்க்கைப்பற்றுடன், உழைத்த சூழலிலேயே – கலையும் இலக்கியமும் முன்னிருந்திராத முறையில் செழித்து வளர்ந்தன. அங்கே கோயில் தத்துவம் முழுமை கண்டது. புதிய பரிமாணத்தைப்பெற்றது.

இதே அடிப்படையிலேயே சென்ற நூற்றாண்டில், கோயில் தத்துவம், நாவலர் பெருமான் வாக்கிலும் நோக்கிலும் புதிய சூழ்நிலையில் புதிய தேவைகளுக்கு முகங்கொடுத்துச் செயற்பட்டது. கல்வி, பொருளாதார விழிப்பு, கலாசார எழுச்சி முதலியவற்றைச் சமுதாயத்திற் பரவலாக உண்டாக்குவதற்குக் கோயில் தத்துவத்தைக் கையாண்டவர் நாவலர் பெருமான். அன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் சீர்திருத்தம் பற்றி அவர் பகிரங்க வாதங்கள் நடத்தியபொழுது, ஒரு தனிப்பட்ட கோயிலின் சுத்திகரிப்பாக மட்டும் விளைவு இருக்கவில்லை. எமது சமுதாயத்தின் சுத்திகரிப்பாகவே அது முடிந்தது. இதனால் எமது சமுதாயம் புது வீறுடன் பல கருமங்களைச் சாதிக்க வழி பிறந்தது. நமது வரலாறு சில திருப்பங்களைப் பெற்றது. நாயன்மார் காலத்து வேகத்தை நாவலர் காலத்தில் நாம் காண்கிறோம். அடிப்படை ஒன்று தான். கோயில் தத்துவத்தை இரு காலத்தவரும் பரந்தமுறையிலும் பயனுள்ள வகையிலும் கைக்கொண்டு செயல்பட்டனர். இவ்வரலாற்றுடனும், தெளிவுடனும் நாமும் செயல்பட்டால் ஆகாதது ஒன்றில்லை. கோயில் தத்துவம் எமது மரபில் நெடுநாள் வளர்ந்து வந்ததொன்று. அது காலத்துக்குக் காலம் ஏற்படும் சமுதாய பொருளாதார – கலாசார மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, அம்மாற்றங்களுக்குக் காரணமாயும், காரியமாயும் விளங்கி வந்துள்ளது. இவ்வடிப்படை உண்மையை நாம் தெரிந்து கொண்டால், இன்றும் நாளையும் நலமுடன் அமையும்.

# ஆடும் குகன்

நயினை நாக. சண்முகநாதபிள்ளை, B.Sc.

இளமை, அழகு, கடவுட்டன்மை யாவும் நிறைந்து, தமிழ் நாட்டின் தனிப் பெருந் தெய்வமாக விளங்குபவன் 'முருகன். உலகமுய்ய உதித்த ஒரு திருமுருகன். "முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும்" வள்ளலாக விளங்குகிறான். உள்ளக் கனிவோடு இனிதான தமிழ் தந்து, அவனுடைய அமிழ்தான அருட்கடலிற் குளிக்கும்படி அடியார்க்கு "மணங்கமழ் தெய்வ இளநலம்" காட்டி நிற்கின்றான். ஆரா அமுதமான ஆறுமுகன், சேந்தனாய், கந்தனாய், செங்கோட்டு வெற்பனாய், செந்தூர் வேலனாய், வள்ளி காந்தனாய், கடம்பனாய் கார்மயில் வாகனனாய், பிரிவிலா அடியார்க்கு என்றும் வாராத செல்வம் வருவிக்கின்றான். அவனுடைய திவ்விய அருளென்னும் பெருவெள்ளத்தில் நீந்தி, அளப்பரும் பொருள் கண்டவர் அருணகிரிநாதர். இதனாலேயே 'அருணகிரி செந்தமிழ்ப் பாட்டிலே நினைவுற்றவா' என்று ஐயனைக் கூவி அழைக்கின்றோம். எந்தை கந்தவேளின் இன்னருள் பெற்றோர் பலர். நக்கீரர், சிகண்டி முனிவர், பொய்யாமொழி, ஔவையார், வசிட்டர், காசிபர், இடைக்காடர், சிதம்பர முனிவர், சிற்றம்பல நாடிகள் முதலிய பலப்பலர். இவர்களுக்குள் முருகவேள் மலர்வாக்கால் பிரணவ மந்திர உபதேசம் பெற்றவர்கள் இருவர். ஒருவர் அகத்தியர்; மற்றொருவர் அருணகிரிநாதர். முருகப் பெருமானுடைய முழுமுதற்றன்மையை முழு தொருங்குணர்ந்த முனீந்திரர் அருணகிரிப் பெருமான். இவர் பாடிய கந்தரநுபூதிப் பாமாலையை ஆராயப் புகுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். "ஆடும்" என்று முதற் பாட்டிற் தொடங்கி "குகனே" என்று ஐம்பத்து ஓராவது பாட்டில் முடிக்கின்றார். அதனாலேயே இக்கட்டுரைக்கு "ஆடும் குகன்" என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் 15ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் பிரபுடதேவன் காலத்தில் சிவஞானபாநுவாய் அவதரித்தார். இளமையில் சிற்றின்ப நுகர்வுடையவராய், வறுமையும், குட்டம் முதலிய நோய்களும் வாட்ட வாடி வதங்கினார். தன் நெஞ்சு தன்னை உறுத்தியது. ஒரு பயனும் அடையாத தம் வாழ்வில், கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்றோ என்று ஏங்கினார். வாழ்க்கையில் வெறுப்படைந்து அருணை வட கோபுரத்திலேறிக் குதித்தார். "மெய்மை குன்றா மொழிக்குத் துணை நிற்கும் முருகன்" அவர் முன் தோன்றி அவர் செய்த பழிக்குத் துணையானான். அவர் செல்லும் வழிக்குத் துணை நின்று தனது திருவடிகளை அவர் சிரசின்மேற் சூட்டி "சும்மா இரு சொல்லற" என்னும் மௌன உபதேசத்தையும் செய்து அருளினார். "முத்தைத்தரு" என்ற முதலடி எடுத்துக் கொடுத்தான் முருகன். அன்று முதல் எத்திக்கும் தித்திக்கும் செந்தமிழ்ப் பாடல்களாய திருப்புகழ் பாடத் தொடங்கினார்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த நூல்கள் ஆறு. திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல் மயில் விருத்தம், கந்தரநுபூதி என்பன அவையாகும். இவற்றுள் கந்தரநுபூதி வடிவத்தில் சிறியதானாலும் மகிமையிற் பெரியது. இது ஒரு மந்திர சாத்திரமாகும். கந்தனுடைய அநுபூதியைப் பெற்றுப் பாடிய நூலாகும். இதன் பெருமையை உணர்ந்த தாயுமானார்

"கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி யிருக்கு நாள் எந்நாளோ"

என்று பாடினார். தாம் பாடிய திருப்புகழிலே அருணகிரியார் வேலவனிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார், "அப்பனே! அடியேன் உமது பவளமனைய பாதமலரில்

ஒரு மந்திர மலர்மாலை சாத்துமாறு அருள் புரிவீராகுக. அம்மலர் மாலைக்கு என் மனமாகிய தாமரை குஞ்சமாக அமையட்டும். அன்பான நூல் கொண்டு, வாயினால் வாழ்த்தி வாழ்த்தி, என் நாவினால் அதை நான் பின்னலிட வேண்டும். அதிலே ஞானமாகிய நறுமணங்கமழ்ந்து, அம்மாலை ஒளி செய்ய வேண்டும். குற்றமில்லாத அறிவு என்னும் வண்டு அதிலே ரீங்காரம் செய்ய வேண்டும். ஆறு ஆதாரங்களிலுள்ள அகாரம் முதல் க்ஷகாரம் ஈறாகவுள்ள மாத்ருகா மந்திரங்களாகிய ஐம்பத்தொன்றும், மலர்களாகத் திகழ வேண்டும். இத்தகைய மந்திர மலர்மாலையை, உமது செய்ய பாதமலரில் புனைய எனக்கு அருள்வீராகுக.'' என்று வேண்டிக் கொண்டார்.

அப்பாடல் பின் வருமாறு:

''ஆசைகூர் பத்த னேன் மனோபத்ம
மான பூவை கது நடுவேயன்
பானநூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ஒருஞான
வாசம் வீசிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்ப மாலை கோலப்ர
வாள பாதத்தில் அணிவேனோ''

இந்த வேண்டுகோளின்படிதான் கந்தரநுபூதி பாடப் பெற்றது.

''அகர முதலென வுரைசெய் ஐம்பத்தொரட்சரமும்'' என்ற திருப்புகழாலும் இதை அறியலாம். ஒரு சமயம் அருணையில் ''திதத் தித்த'' என்ற கந்தரந்தாதிப் பாட்டுக்குப் பொருள் கூறத் தெரியாது வில்லிபுத்தூரார் திகைத்துத் தோல்வியடைந்தார். அவருக்குத் தண்டனை விதியாது அருணகிரியார் அவரைத் திருத்தினார். சம்பந்தாண்டார் என்பவரோடும் வாதம் செய்து ''அதல சேடனாராட'' என்ற பாடலைப்பாடி, முருகவேளை மயிலின் மேல் வரவழைத்து, வெற்றியடைந்தார். சுவாமிகள் கிளியுருவில் பொன்னுலகஞ் சென்று கற்பகமலர் கொண்டு வந்தார். அக்கிளியுருவிலேயே ஆறுமுகன் திருத்தோளில் அமர்ந்து கந்தரநுபூதி அருளி, பின் அவனடியில் கலந்து முத்தி பெற்றார்.

'கந்தன்' என்ற சொல்லுக்கு, பகைவர்களுடைய ஆற்றலை வற்றச் செய்பவன், ஆறு திருமேனிகளும் ஒன்றாகப் பொருந்தினவன், ஆன்மாக்களுக்குப் பற்றுக்கோடாகத் திகழ்பவன் என்றெல்லாம் பொருள் உண்டு. 'அநுபூதி' என்பதற்கு ஆன்மா இறைவனுடன் ஒன்றுவது என்று பொருள். எனவே ஆன்மா கந்தக் கடவுளுடன் ஒன்றுபட்டு அத்துவிதமாகி, அதனால் விளையும் மெய்யுணர்வே கந்தரநுபூதியாகும். இதை

''ஆசா நிகளந் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே''

என்று கந்தரநுபூதியின் 42 ஆவது பாடல் தெரிவிக்கின்றது. 'பாச ஞானத்தையும், பசு ஞானத்தையும் அகற்றி, பதியை அவனருளால் உணர்ந்து இதனை அப் பரமன் அடிக்கீழ் நின்று உணர்தலே பதிஞானமாகும்.

''சிவஞெடுக்கம் பூத வொடுக்கந்
தேற உதிக்கும் பர ஞானம்;'

என்னுந் திருப்புகழ் மூலம் தெரிவிக்கின்றார் அருணகிரியார். ஆகவே இச் சிவஞானத்தைத் தெளிவுறத் தெரிவிப்பதே கந்தரநுபூதியாகும். கந்தரைச் சேர்ந்து அடையும் அநுபூதி, கந்தரால் அடையும் அநுபூதி, கந்தரின் கண் அடையும் அநுபூதியென மூன்றாக இந்த அநுபவத்தைக் கூறலாம். பக்குவம் அடைந்த அடியார் ஒவ்வொருவரும், கந்தக் கடவுளுடன் கலப்பினால் ஒன்றுபட்டு நிற்கும் நிலையையும், பொருளால் கந்தன் வேறுபட்டு நின்று உதவி செய்யும் நிலையையும், கந்தவேள் அவரோடு உடனாய் நின்று காணும் நிலையையும் குறித்து, அம்மூவகை நிலைகளாலும் அவர் அடையும் அநுபூதியாகிய பதிஞானத்தைக் குறிக்கும் என அறிக. அருணகிரியாருக்குக் கந்தன் ''அவையேயாய்,'' ''தானேயாய்,'' ''அவையேதானாய்'' நின்று, அவற்றால் தெவிட்டாத பேரின்பமாகிய மெய்யுணர்வை அளித்

தான். முருகன்பால் அவர் பெற்ற அந்த இன்ப அனுபவத்தை எல்லோரும் பகிர்ந்து கொள்ளும்படி சொல்லோவியமாக, ஆனை முகன் அடி வணங்கி, ஓதுவோர் கேட்போர்களுடைய கடினமான கல்போன்ற இளகாத நெஞ்சமும் கரைந்து உருகும்படி, செழுங்கருணை ஓடிப் பெருக "செஞ் சொற் புனைமாலை" செய்கின்றார்.

"பாடும் பணியே பணியாய்" அருள வேண்டுமென்று "நாமேல் நடக்கும்" அருணகிரியார் மயிலையும், வேலையும், சேவலையுமே பாட வேண்டி நிற்கின்றார். முருகனை நெஞ்சில் ஒருகால் நினைத்துப் பார்க்கின்றார். மயிலும் வேலும் சேவலும் தோன்றுகின்றன. மயில் இருக்கிறதே, இது சூர பதுமன் முருகப்பெருமானிடம் தோற்று மயில்வாகனமாக மாறி அமைவதற்கு முன்பே வாகனமாயிற்று. ஏனெனில் சூரன் முன்பு காட்சி அளித்த முருகனைக் குறிப்பிடும்போது "கோலமா மஞ்ஞை தன்னிற்குலவிய குமரன்" என்று கச்சியப்பர் குறிப்பிடுகிறார். மயில் பிரணவ வடிவமாக இருப்பது. இதனை அருணகிரியார் " அவனை அணைதர இனிதின் ஓங்கார பரியின் மிசைவருவாயே!' என்று வேண்டும் வேண்டுகோளால் விளங்கிக் கொள்ளலாம். முருகனுடைய ஊர்தியாம் மாமயில் ஓங்காரமாம் பிரணவ நிலையில் மட்டும் இயங்காது, மகாமந்திர வடிவமாகவும் இயங்கவல்லது என்பது ஆன்றோர்களது முற்ற முடிந்த முடிபாகும். இதனையும், வாக்கிற்கு அருணகிரியார் என்று வழுத்தற்குரிய அப்பெரியார்,

'ஆனதனி மந்த்ர ரூப நிலை கொண்ட
தாடுமயில் என்ப தறியேனே'

என்று பாடியுள்ளார் இங்ஙனம் அருமைக்கும் பெருமைக்கும் உரிய மயில் "வெஞ்சமரில் அஞ்சல் என்வேல் தோன்றுவது" போல ஆபத்தான வேளைகளில் முருகப் பெருமானைத் தன்மீது சுமந்து வந்து அருள் செய்ய வல்லது. அருணகிரியார் வரலாற்றிலேயே இதைக் காண்கின்றோம். இக்கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிட்ட சம்பந்தாண்டானுடன் பிரபுட தேவன் சபையிலே வாதிட்டபோது, பின்வரும் பாடலைப் பாடி முருகனை மயில்மீது இவர்ந்து வரச் செய்தார் அருணகிரியார்.

அதல சேடனார் ஆட அகில மேரு மீதாட
அபின காளி தானாட-அவளோடன்று
அதிர வீசி வாதாடும் விடையில் ஏறு வாராட
அருகு பூதவேதாளம்-அவையாட
மதுரவாணி தானாட மலரின் வேதனாராட
மருவு வானுளோர் ஆட-மதியாட
வனச மாமியார் ஆட நெடியமாமனார் ஆட
மயிலும் ஆடி நீயாடி—வரவேணும்.

..........................................................

உதயதாம மார்பார் பிரபுடதேவ மாராஜன்
உளமும் ஆடவாழ் தேவர்-பெருமாளே.

இதனால் பகையைத் தடுக்கும் மயில் பெருந் துணையாவதை அறியலாம். "வேலும் மயிலுந்துணை" என்று வேலோடு மயிலையும் ஒருங்கிணைத்துக் கூறும் வழக்கம் நம்மவரிடையே உண்டு. அன்றியும்

"கார்மா மிசை காலன் வரிற் கலபத்
தேர்மா மிசை வந்தெதிரப் படுவாய்"

என்று அருணகிரியாரே கந்தரநுபூதியிலும் எடுத்தாளுகின்றார்.

"ஆடும் பரி" என்பதில் "ஆடும்;' என்பது நடனக் கலையைக் குறிப்பிடுகின்றது, நடனக்கலைக்கு அரசர் நடராஜர். 'காலைத் தூக்கி நின்று ஆடும்' அந்த ஆனந்த நடனமே இந்த அண்ட சராசரங்களெல்லாவற்றையும் ஆட்டுவிக்கின்றது. அதனாலேயே தூக்கிய திருவடி துணையென நம்பி நிற்கின்றோம். அந்த ஆட்டம் நின்றால் அனைத்தும் நிற்கும். உலக இயக்கமே நிற்கும். "அதல சேடனாராட" என்று மேலே உள்ள பாட்டில் வரும் ஆட்டம் ஒரு பெரும் திருக் கூத்தாக நிகழ்வதைக் காண்கிறோம். இயக்கம் வேண்டுமானால் ஒரு சுழற்சி வேண்டும். அப்படியான சுழற்சியினால் உண்டாகும் வலுத்தான் சக்தியை உண்டு பண்ணி இயக்கத்தை ஊக்குகிறது. இதுதான் இன்றைய விஞ்ஞானக் கோட்பாடு. அணுவிற்குள் அணுவாய் அப்பாலுக் கப்பாலாய் இந்தச் சுழற்சி இருந்து கொண்டே இயங்குகின்றது. அண்டத்திலும், அணுவினுக்குள்ளும் இருக்கும் இந்தச் சுழற்சி ஆடிய பாதத்தால் உண்டானது, அந்தத் திருநடனத்தை

"தாளொன்றல் பாதாளம் ஊடுருவித்தண் விசும்பில்
தாளொன்றல் அண்டம் கடந்துருவி — தோளொன்றல்
திக்கனைத்தும் பேர்க்கும் திறல்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம்"

என்று நக்கீரர் பாடுகிறார். இந்தத் திரு நடனத்தை ஆடும் மயிலில் கண்டு ஆனந்திக்கின்றார் அருணகிரியார். அந்த மயில் ஆட்டத்தை அவரே கண்டு மகிழும் திறன் திருப்புகழிலே,

"செககண சேகு, தகு திமி தோதி
திமியென ஆடும்-மயிலோனே"

என்று காட்டப்பட்டிருக்கிறது. காலைத் தூக்கி நின்று ஆடும் மயில் ஓங்கார ரூபத்தை மட்டுமன்றி, உலக இயக்கத்தின் ஒப்பற்ற தோற்றுவாயையும் காட்டி நிற்பதால், அதன் எடுத்த ஒரு காலும், விரித்த தோகையும், குமிழ் சிரிப்போடு குமரன் குகனை ஆடும் ஆட்டமும், பரமன் குகனை வந்து கூத்தாடுவதை அவருக்கு நினைவூட்டியிருக்கும். 'குகன்' என்ற சொல்லிற்கு ஆன்மாக்களின் இதய குகையில் இருப்பவன் என்று பொருள். ஏகனாய் அனேகனாய் இருக்கும் பரம ஆன்மா, உயிர்களின் இதயகுகை நடுவில் லயப்பட்டு இருக்கிறது. கலியுகத்தில் குமாரக் கடவுள் ஒருவரே உயிருக்குயிராய் ஊடுருவித் திகழ்கின்றார். ஒரு கோபுரம் அமைத்து அதன்முகட்டில் வைரக் கலசம் பதிப்பது போல, கந்தரநுபூதி என்னும் எந்தை புகழ்பாடும் "செஞ்சொற்புனைமாலை"; சிறப் பெய்த, முடிவில் குக என்ற மந்திரம் ஒலி செய்து கொண்டிருக்கின்றது. குகா, குகா, என்று கூறுவார் "முடியாப் பிறவிப் பெருங் கடலிற் புகார், முழுதும் கெடுக்கும் மிடியால் படியில் விதனப் படார்" அப்படி அழைக்கும் அடியார்க்கு நல்லவனாய், வினைகள் யாவும் பொடியாக்குவான் முருகன்.

அருணகிரியார் கந்தரநுபூதியிலே ஆட்டத்தை ஒரு எல்லையாகவும், குகனை மறு எல்லையாகவும் வைத்துக் கொண்டு, ஆடி அடங்கும் வாழ்க்கையின் ஓட்டத்தை எண்ணுகிறார். வாழ்க்கை ஓட்டம் அவருக்கு ஒரு ஆட்டமாகத் தெரிகிறது. வாழ்க்கையிலே ஆட்டம் கண்ட அவர் தன்னை அதிலிருந்து மீட்டுப் பிறவிப் பெருங் கடல் நீந்தச் செய்த குகனின் திருவருளை எண்ணித் "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்கோடு முருகன்பாற் தாம் "பெற்ற பெருவளம் பெறாற்கு அறிவுரியி" தமக்குக் குருவாய் வந்ததுபோல இவ்வுலகிலுள்ள சகல உயிர்களுக்கும் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று கந்தனை வேண்டுதல் செய்கின்றார். குகனை நினைக்கும் போது மயிலும், வேலும், சேவலும் தோன்றுகின்றன. அதனால் அவற்றையே பாடவும் விழைகின்றார். ஆடும் மயிலின் அரிய பெரிய இயல்புகளைக் கண்டோம். சேவலை நினைத்தால், அதை அணி சேவல் எனக் குறிப்பிடுகின்றார். சேவல் அழகான பறவை; இது காரிருள் கிழித்து வரும் கதிரவன் வரவைக் குறித்துக் கூவும்பறவை. இதேபோல் முருகனுடைய சேவல் ஞான சூரியனாகிய முருகனுடைய வரவை உணர்த்தும். பிறவாத இறவாத பேரருள் வள்ளலின் வரவை நாளும் பொழுதும் "கொக்கறுகோ" என்று குறித்துக் குக நாமம் பாடும்பேறு பெற்றது. இத்தகைய பறவையைக் குகன் தன் கொடியிலேற்றி அதனை வணங்கச் செய்வதால் அடியார்கள் மிடியெல்லாம் தீர்க்கின்றான். ஆடும் மயிலுக்கும் அணி சேவலுக்குமிடையே அருணகிரியார் குகனைக் கண்டாரல்லர்; குகன் கை வேலைக் கண்டார். மயில் ஆட, சேவற் கொடியாட, ஊடே வேலாட, அந்தவேல் தம் வாழ்விலே எதிர்ப்பட்ட மாயப் பிசாசுகளைக் கொண்டு, அதன் ஞானத் தீயிலே அவை பொசுங்கி எரிவதைக் கண்டு கை கொட்டி ஆர்ப்பரித்தார்.

"குறியைக் குறியாது குறித் தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலும்
செறிவற் றுலகோடுரை சிந்தையு மற்
றறிவற்றறி யாமையு மற்றது வே"

என்றார்.

வேலை வணங்குவதே வேலையாக இருந்த அவருக்கு, அவருள் அத்துவிதமாகக் கலந்து நின்ற குகனைக் காணமுடியவில்லை. ஆனால் "ஆழ்ந்தகன்ற நுண்ணியனாய்" அவருள் நின்ற அருட் பெருஞ் சோதியின், தனிப்பெரும் கருணையே வடிவமாகிய வேலை மட்டும் கண்டார்; நெறிப்பட்டார்; நீடுவாழ்ந்தார். அநுபூதி அடைவதற்கு ஆசையாகிய தொடர்-பிணைப்புத் தடையாயிருந்தது. ஆனால் இது அவனருளால் அறுபட்டது. பஞ்ச வாக்குகளும் அடங்கி மனமும் அடங்கிய பரமமோன நிலை அதாவது "பேசா அநுபூதி நிலை" கிடைத்தது. பேறுற்றார். வாழ்வுற்றார், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார். தாழ்வுற்று, வாழ்வென்னும் கடலிலே, நோய் முதிர் குரங்குபோல நுகர்ச்சி வாய்ப்பட்டு, சோடிழந்த அன்றிற் பறவையைப் போல் துயரமாகியவர்களாக, தோகை மயில் வாயில் அகப்பட்ட சர்ப்பமானவர்களாக, காடுகளில் இனம் பிரிந்த கலைகளானவர்களாக, கருங்கடலிற் காற்றடிக்கும் கப்பலானவர்களாக, ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானவர்களாக, உற்றார் ஒருவரில்லாது உழலுகின்றவர்களாகத் திரிவோர், அவனை ஒருகால் நினைத்தால், அவன் பச்சை மயில் ஏறிவந்து கட்டாயம் இரட்சிப்பான் என்பதை அருணகிரியார் கந்தரநுபூதி மூலம் எமக்குக் காட்டுகின்றார்.

செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் என்று பித்தமனிதர் கூறுவதுபோல அருணகிரியார் கூறவில்லை. இந்த இப்பிறப்பில் எல்லாவற்றையும் பெறலாம். அவனை ஏத்தினால் இடர் கெடும், சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றார். எல்லா மறத் தன்னை இழந்து உண்மைப் பொருளாம் சண்முகனைக் காண்கின்றார். ஆறுமுகம், ஆறுமுகம் என்று கூறிக் கூறி, வினை யாறி ஆறும் விதம் காண்கின்றார். வடிவேல் இறைதாள் நினைந்து, நினைந்து, நெடு வேதனைகளை ஞானக்கினியிற் சுட்டுப் பொசுக்குகின்றார். முருகவேள் அருட்குருவாகத் தோன்றிச் "சும்மா இரு" என்று உபதேசித்த மாத்திரத்தில் சுட்டியறிகின்ற உலகம் யாவும் மறைந்து அதுவாக எங்கும் நிறைந்து அவருக்குக் காட்சியளித்ததை எமக்குச் சொல்லுகின்றார். "ஐவாய் வழி செல்லும் அவாவினை" ஒழித்து உலக மக்கள் முருகன் கழல் பெற்று உய்ய வேண்டி உபதேசம் செய்கின்றார். "பாழ் வாழ் வெனு மிப்படு மாயையிலே', 'சிந்தாகுல இல்லொடு செல்வமும், சிங்கார மடந்தையர் தீ நெறியும், விட்டு மக்கள் வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றார், அவர் எம்மைப் பார்த்து முருகன் திருவடியில் குறிவைத்துத் தியானியுங்கள். தியானத்தில் அது அதுவாய் ஒன்றி விடுங்கள். அப்போது முருகன் அருட்குருவாய் வந்து உபதேசித்து உள்நின்று உணர்த்துவான். உணர்த்தியவுடன் உலகத்தவரோடு நெருங்கிய தொடர்புகளும் பேச்சும் மனமும் சுட்டியறிகின்ற அறிவும் அறியாமையும் அடியுடன் அற்றுப்போய் விடும். அந்த நிலையில் ஆசையாகிய சங்கிலி பொடிப்பொடியாக அறும். அப்போது மௌனநிலையாகிய அநுபூதி நிலை தோன்றும்' என்று வழிப்படுத்துகிறார்.

தாம் வாழ்வில் அடைந்த துன்பத்தை அவர் சொல்லும்போது, அவர் நமக்கு அண்மையில் இருப்பவராகத் தோன்றுகின்றார். ஆனால் தெவிட்டாத தெய்வத் திருவருளை அவர் நமக்குச் சொல்லும்போது அது நமக்கு விளங்குவதில்லை. முயன்றால் நாமும் அந்த இன்பத்தை அடையலாம் என்ற நம்பிக்கை பிறக்கின்றது. திருவருளின் நினைப்பும் வருகிறது. அருளாளராகிய அருணகிரியார் உலகமெல்லாம் உள்ளமொன்றி வாழ நினைக்கிறார். உலகம் முழுவதிலும் இருக்கின்ற மக்கள் புரிகின்ற பாவங்களை, படுகின்ற துன்பங்களை, தாமே செய்தவை போலவும், தாமே அநுபவிப்பவை போலவும் இறைவனிடத்தில் விண்ணப்பித்து எல்லோரும் வாழவும் இன்பமே சூழவும் வேண்டி நிற்கிறார். மக்களை அவா நிலையிலிருந்து பற்று நிலைக்கு உயர்த்தி, அன்பு நிலையில் வளரவிட்டு அருள் நிலைக்கு அழைத்துச் செல்கிறார் அருணகிரியார். அந்த நிலையிற் "சேரவாரீர் செகத்திரே" என்று எல்லோர்க்கும் சொல்லி இறை அருளிற் கூடுவோம்.

"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

# லைபத்தியங்கள்

**— நா. முத்தையா —**

எனக்கு வயது ஏழு அல்லது எட்டு இருக்கும். ஒருநாள் எனது தாயாருக்கும் தந்தையாருக்கும் காரசாரமான வாக்கு வாதம் நடைபெற்றது. விஷயம் என்ன என்று புரிந்துகொள்ள முடியவில்லை. தாயார் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் இன்றும் பசுமையாக நினைவில் இருக்கின்றன. ''எல்லாருஞ் சேர்ந்து என்னை ஒரு பைத்தியகாரி என்றுதான் நினைக்கிறியள்'' இதுதான் அவர் சொன்ன வார்த்தைகள். இவ்வசனத்தின் பின் தந்தையார் வாய் திறந்து பேசவில்லை. வெளியே சென்று விட்டார். அன்றைய பிரச்சினைக்கு அவ்வசனம் முற்றுப்புள்ளி யாகி விட்டது.

ஒருநாள் நண்பர் ஒருவருடைய வீட்டிற்குச் சென்றேன். கணவனும் மனைவியும் ஒற்றுமையான நல்லவாழ்வு வாழுகிறவர்கள். அவர்கள் உறவின் முறையினரைப் பற்றிய ஒரு தகராறு. இது விடயமாக இருவருக்கும் இடையில் இரண்டு மூன்று நாட்களாகவே சிறிது மனஸ்தாபம். இந்த நிலையில் எதிர்பாராதவிதமாக நான் சென்றது இருவருக்கும் நல்ல மகிழ்ச்சி. மனைவியார் தன் கட்சிச்சார்பாகச் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லித் தீர்த்து விட்டார். அவர் சொன்னது சரியோ பிழையோ கணவனுர் வாய்திறந்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. நானும் எதுவும் பேசவில்லை. அவர் கூறும் விஷயத்தில் அநுதாபம் உடையவர் போல் நடித்துக் கொண்டேன். அம்மையாரின் உள்ளத்தில் உள்ள பாரம் இறங்கியிருக்க வேண்டும். 'மாஸ்ரரும்' வந்து வெகுநேரம் ஆகிறது என்று கூறிக்கொண்டே அம்மையார் எங்கள் மறுமொழி எதையும் எதிர்பாராது அடுப்படிக்குத் தேநீர் தயாரிக்கச் சென்று விட்டார். நண்பர் ஒரு பெருமூச்சுவிட்டார். ''உலகத்தில்தான் எத்தனை பைத்தியங்கள்'' என்று சொன்னுர். அத்துடன் விஷயம் முடிந்துவிட்டது. அம்மையார் தேநீர் கொண்டுவந்தார். சந்தோஷமாக அருந்தினேம். அரசியல் முதல் அரிசிவரை எல்லாம் வந்து எமது பேச்சில் கலந்து கொண்டன. முன் குறிப்பிட்ட தகராறு மாத்திரம் எக்காரணம் கொண்டும் எட்டியும் பார்க்கவில்லை. இதில் யார் பைத்தியம் என்பது எனக்கு இன்னும் புரியாத புதிராகத்தான் இருக்கிறது.

நல்லூரிலே ஒரு சாமியார். தெரு ஓரத்திலே பூத்துக்குலுங்கும் பூக்கள் எல்லாம் அவர் சடையை அலங்கரிக்கும். உடைந்த பேணி, உடைந்த போத்தல், கிழிந்த சாக்கு, இவை எல்லாம் அவரது கழுத்திலும் கையிலும் மார்பிலும் மாலையாகத் தொங்குவன. எந்த நேரத்திலும் மலர்ந்த முகத்தையே காணலாம். தன்பாட்டில் தெருவிலே நடப்பார். தனியாக நிற்கும் தந்தித் தூண்கள், மின்சாரத் தூண்களோடு ஏதாவது பேசிக் கொண்டு நிற்பார். யாரையாவது கண்டால் ஏதும் அறியாதவர்போல் நழுவி விடுவார். அவருடைய உடைந்த பேணியில் ஒன்றையோ அன்றி உடைந்த ஓட்டையோ யாராவது திருடி விட்டால், தொட்டு விட்டால் போதும், ''என்னுடைய சொத்தெல்லாம் போச்சே'' என்று பெருங்குரல் எடுத்து மக்களை அழைப்பார். இதற்குப் பயந்து அவருக்குக் கிட்ட யாரும் போவதில்லை.

வால் முளைத்த பையன்கள் சிலர் தமது கைத்திறமையைச் சாமியாரது உடம்பில் காட்டத் தவறுவதில்லை. அந்த நேரங்களில் எல்லாம் அமைதியாக இருப்பார். ''முன்பு யார் யாருக்கோ என்னென்ன தீமைகள் புரிந்தாயோ யாரறிவார். அதையெல்லாம் இப்போ வேண்டிக்கட்டு'' என்று மாத்தி

ரம் சொல்லுவார். கல் எறிந்த பையனே நாணித் தன்குற்றத்தை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு அவரது பொறுமை உரம் பெற்றிருக்கும்.

இத்தகையவருக்கு உலகம் வைத்த பெயர் 'பைத்தியம்' என்பது. சடாமுடியையும், விபூதித்திருக்கோலத்தையும், சிரிப்பையும், பொறுமையையும் உணர்ந்த ஒரு சிலர், சாமி என்றதையும் சேர்த்து, பைத்தியகாரச்சாமி என்று அழைத்தனர். அப்பெயர் நிலைபெற்று விட்டது. "அடே பைத்தியகார சாமி போகுதடா" என்று ஒருகுரல் கேட்கும். அக்குரலுக்கு அருகில் நின்றவர்கள் ஆமா போட்டுத் தலை அசைப்பார்கள்.

உண்மையிலே இவர்களில் யார் பைத்தியம் என்று ஒரு கேள்வி. தனது செயலினாலே தன்னைப் பைத்தியம் என்று நடித்துத் தனது உண்மை நிலையில் உயர்ந்து நின்ற சாமியார் பைத்தியமா? அல்லது நாங்கள் எல்லோரும் பைத்தியகாரரா? என்பதே அக்கேள்வி.

இந்தக்காலம் தலை எண்ணிப்பார்த்து நீதி தீர்க்கும் காலம். நூறு முட்டாள்கள் கழுதையைக் குதிரையென்றால், நூற்றோராவது அறிவாளி குதிரையென்று ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவரைச் சமூக விரோதி என்றும், சோஷலிசம் தெரியாதவன் என்றும் சொல்லுவதோடு அமையாது, பத்திரிகையிலும் எழுதி நூறுபேரும் ஏகமனதாக, தூக்குக்கும் நியமித்து விடுவார்கள். அந்த அறிவாளி [illegible]கிழ்வோடு உயிரை விட்டால் வாழத்தெரியாதவன் என்று எழுதியும் வைத்துவிடுவார்கள். அதுமாத்திரமல்ல, நூறுபேருஞ் சேர்ந்து ஒரே குரலில் 'பைத்தியகாரன்' என்று சொல்லத் தவறவும் மாட்டார்கள்.

ஒரு நூறு வருஷத்தின் பின் ஒரு அறிஞன் தோன்றி, நூறு முட்டாள்களால் சாகடிக்கப்பட்ட அறிவாளியை மகான் என்று எழுதிவைப்பான். அதனைப்பார்த்துப் பத்துப்பேர் தலையசைப்பார்கள். மற்றைய தொண்ணூறு பேரும் சேர்ந்து புதிய சித்தாந்தம் ஒன்றைக் கண்டுபிடித்து வெளியிடுவார்கள். அவர் அறிவாளியாக இருக்கலாம்; அவரைப்போல நம்மால் எல்லாம் நடக்கமுடியுமா? அவரை அக்காலத்துள்ளவர்களே ஒப்புக்கொள்ள வில்லை. நாம் ஒப்புக்கொண்டு என்ன பயன்? நடைமுறைக்கு ஒவ்வாதவர் என்று சொல்லுவதோடு, அவரை ஒப்புக்கொண்ட ஒரு சிலரையும் பைத்தியகாரர் ஆக்கி விடுவார்கள்.

யேசுக்கிறிஸ்துநாதரும், சோக்கிறற்ரீசும், மகாத்மா காந்தியும், இந்த நிலையிலேதான் இன்றும் உலகிலே வாழுகிறார்கள். முன்குறித்த சாமியாருக்கு உலகம் வைத்த பெயர் பைத்தியம். அப்பெயரைக் கேட்ட அச்சாது தமக்குள்ளே சிரித்துக் கொண்டார். ஏன் சிரித்தார்? "நாங்கள் எல்லோரும் பைத்தியகாரர்தான்" என்று அறியாமல் இருக்கின்றோமே என்பதை நினைந்து சிரித்தார்.

உலகத்தைப் பார்க்கப் போனால் எல்லோரும் பைத்தியகாரரேதான். தெய்வப் பைத்தியம் ஒருவருக்கு, மண் பைத்தியம் இன்னொருவருக்கு, பெண் பைத்தியம், வேறொருவருக்கு, பொன் பைத்தியம், நகைப் பைத்தியம், இப்படி எத்தனையோ பைத்தியங்கள். இவற்றுக்கு மேலாகப் புகழ்ப் பைத்தியம், அதிகாரப், பைத்தியம் பதவிப் பைத்தியம், சாதிப் பைத்தியம், மதப் பைத்தியம் என்றெல்லாம் வரும். இவற்றை இப்படியாக அடுக்கிக்கொண்டேபோனால் கணக்கிலடங்காது. எல்லாப் பைத்தியங்களுக்கும் மருந்து உண்டு; ஆனால் புகழ்ப்பைத்தியம் இருக்கிறதே, அதற்கு மருந்து இல்லை. புகழ்வேண்டாம் என்று சொல்வதனாலேயே பெரும் புகழ் வந்துவிடுகின்றது. அது அப்படிப்பட்டது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்பது வள்ளுவர் வாக்கு. புகழ் தானாக வரவேண்டும். அதில் அவன் தோய்ந்து

போகக்கூடாது. தானாக வருவதைத் தவிர்க்க முடியாது, ஆயின் அதனைக்கண்டு துள்ளித்தூண் முட்டக்கூடாது.

ஒரு காரியத்துக்கு 'நான்' என்று தலையிடுகிறவன்,அந்தக் காரியத்திற்கு வேண்டிய சாமர்த்தியமிருந்தால் முன்வந்து தோன்ற வேண்டும். இல்லாவிட்டால் மறைவாகவே இருந்துவிடவேண்டும். ஏனெனில் அந்தக் காரியத்திற்கு வேண்டிய அளவுக்காவது வித்தகம் உள்ளவனுக்குத்தான் பிறர்மதிக்கத் தகுந்த புகழ் உண்டு.

பைத்தியங்களுக்கெல்லாம் தலைமைப் பைத்தியகாரர் சிவபெருமான். அவர் ஒரு பைத்தியகாரன் என்று மனந்துணிந்து அவர் முன்னிலையிலேயே முதன்முதல் சொன்ன பெருமை சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத்தான் உண்டு. சிவபெருமானே பைத்தியப் பட்டம் கேட்டவர் என்றால், நாங்கள் எல்லாம் பைத்தியகாரர் ஆவது வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

சிவபெருமானுக்கு என்ன பைத்தியம்? தன்னைவிட்டு வெகுதூரம் விலகிச் செல்லும் ஆன்ம கோடிகள் அத்தனையையும் ஈடேற்றவேண்டும் என்றொரு பைத்தியம். ஒரு ஆன்மாவை ஈடேற்றுவதற்கு எத்தனை பிறப்புப் பிறக்கவும் ஆயத்தமாயுள்ளார். உமாதேவியார் பெற்றதாயினும் கருணையுள்ளவர். இந்த ஆன்மாக்களை ஈடேற்றுதற்கு அவரிலும் மேம்பட்ட கருணையுள்ளவர் வேறுயார் இருக்கமுடியும்?

சம்பந்தர் அழுதபொழுது ஓடிவந்து திருமுலைப்பால் ஊட்டினர்.அம்மை அப்பர் இப்படி எல்லாக் குழந்தைகளும் வாழவேண்டும் என்பதே அம்மை அப்பரின் திருவுள்ளம். ஒரு முறை ஒருசாது கஷ்டப்படுவதை அம்மை பார்த்தாள். அப்பனிடன் முறையிட்டாள்.அம்மையும் அப்பனும் சாதுவுக்குதவி செய்யத் திருவுளங்கொண்டனர். வரும்வழியிலே ஒரு மரத்தின்மீது மறைந்து இருந்தனர். சாதுவின் முன்னிலையில் பெருமான் பொருள்முடிப்பு ஒன்றை இட்டார். சாது சிறிதுதூரத்தில் வரும்போதே குருடன் ஒருவனைப் பார்த்துவிட்டார். பாவம் குருடன் எப்படி நடப்பான் என்று தானே கண்மூடி நடந்துபார்த்தார் சாது. வழியில் கிடந்த பொன்முடிப்பைக் கடந்து கொண்டே வெகுதூரம் சென்றுவிட்டார்.

சிவபெருமான் என்ன என்ன நினைத்தாரோ யாரறிவார்? நிச்சயமாக நாம் பைத்தியக்காரன் என்று சொல்லியிருப்போம். அம்மை, பாவம்! என்று நினைத்திருப்பாள். இப்படிப் பைத்தியக் கதையை நீங்கள் வாசிக்கும் போது, இதுவும் ஒரு பைத்தியம் என்று சொல்வது காதில்விழுகிறது. அதற்காக மகிழுகின்றேன். நீங்களும் பைத்தியகாரர் ஆகுங்கள் என்று வேண்டி வாழ்த்துகின்றேன்.



# பத்தியுணர்வு

புலவர் ந. ரா. முருகவேள்

மனித வாழ்க்கை, உணர்வுகளாலும் எண்ணங்களாலும் உருவாகின்றது. மனிதன், பலவகை உணர்வுகளின் நிலைக்களனாக விளங்குகின்றான். மனிதனுக்குரிய உணர்வுகள் நனிமிகப் பல. அவைகள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த ஒன்றாய்த் திகழ்வது பத்தியுணர்வு.

வாழ்க்கையின் பலவேறு வகையான துன்பங்கள், தொல்லைகள், குற்றங்குறைகள், நிலையில்லாத தன்மைகள், வியத்தகு நிகழ்ச்சிகள், எதிர்பாரா விளைவுகள், பற்பல மாறுதல்கள் ஆகியவற்றை எல்லாம் கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணருந்தோறும், நமக்குத் தெய்வம் ஒன்று உண்டு என்னும் உணர்வும், தெளிவும் ஏற்படாமல் இருத்தல் இயலாது.

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணற்ற விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற முதற்பொருள்கள், மற்றும் எத்தனையோ சரம், அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள் என்பனவற்றின் இயல்பை எல்லாம் எண்ணிப்பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு நமக்குத் திண்ணிதில் உதிக்கும்.

உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியக்கத்தக்கனவாக இருக்கின்றன. சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும், தத்தம் ஒழுங்குமுறைகள் தவறாமல் ஒளிவீசிச் சுழன்று கொண்டு வருகின்றன. பரந்த பெருங்கடலில் நீரை முகந்து கொண்டு, பல இடங்கட்கும் பரவிச்சென்று, மேகங்கள் மழைபொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல், ஒரு வரம்பிற்குள், அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது, பகலும் இரவுமாக மாறிமாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின்பனிக்காலம் எனப் பலவேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற செடிகொடி வகைகளை வளர்த்தும், நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர்வகைகளை அளித்தும், உதவிபுரிந்து வருகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழிவழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. இங்ஙனமே மரஞ்செடி கொடி இனவகைகளில் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் - பண்பும் - பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளராயும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ்செல்வராக விளங்குகின்றனர். ஒருசிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாகத் திகழ்கின்றனர். மற்றும் சிலரோ, அறியாமையிற் கிடந்துழன்று அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலைநிற்கின்றனர். பிறசிலரோ தீயொழுக்கம்

கன்றிப் பெரிதும் திரிதந்து உழன்று அலே கின்றனர்.

**பத்தியுணர்வு :**

இப்பரந்த உலகத்தை இனிது நோக்கி ஊன்றியுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது நம்மனோர் அறிவிற்குப் பொருந்துவதே யாகும். அக்கடவுட் பொருளே, நமக்கு உடல், கருவி, உலகம், நுகர்ச்சிகள் ஆகிய வற்றைக் கொடுத்து, நம்முடைய நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப, இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகின்றது. இவ்வுண்மையினை உணர்ந்து நம்பி, நல்லொழுக்கம் கடைப்பிடித்து, நல்லவர்களாக வாழ்வதற்குரிய உணர்வே, பத்தியுணர்வு எனச் சுருக்கமாகக் கூறலாம்.

'அப்போலோ பதினொன்று' என்னும் விண்வெளிக் கப்பலிற் சந்திர மண்டலத் திற்குச் சென்ற விண்வெளி ஆராய்ச்சி வீரர்கள், சந்திர மண்டலத்தின் தரைப் பரப்பிற் சென்று சேர்ந்தவுடன், விவிலிய மறைநூலே ஓதி இறைவனுக்கு நன்றி வழிபாடு செய்ததும்; அஃது உலகம் முழு வதற்கும் ஒலிபரப்பப் பெற்றதும், நாம் அனைவரும் நன்கறிந்ததொன்று. அங்ஙனமே 'அப்போலோ பதின்மூன்று' என்னும் விண்வெளிக் கப்பல், அதன்கண் சென்ற விண்வெளி வீரர்களுடன் தீங்கேதும் நிகழாமல் நலமுறத் திரும்புதல் வேண்டும் என்று, ஐக்கிய அமெரிக்க நாடுகள் அனைத்திலும் உள்ள மக்கள் அனைவரும் இறைவனை நோக்கி முறையிட்டுப் பிரார்த்தனை புரிந்ததும், அதிபர் நிக்சன் அவர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைவர் என்ற நிலையில் அப் பிரார்த்தனையை நடத்தி வைத்ததும், போன்ற பல செய்திகள் இங்கு நாம் சிந்தித்துத் தெளிதற்குரியன. 1

இத்தகைய பத்தியுணர்வினால், நமக்கு நம் உலகியல் வாழ்வில் மிகச் சிறந்த நன்மைகள் ஏற்படும் என்பது திண்ணம். உலகெங்குமுள்ள பலவேறு சமய மக்களும் போற்றுகின்ற நிலையில் விளங்கிவரும் பக்தி நெறிச் சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள் பலவும், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

தேசியக் கவிஞர் திரு சுப்பிரமணிய பாரதியார் அவர்களும், தமது கவிதை ஒன்றில், பத்தியுணர்வு அல்லது பண்பினால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் பலவற்றையும், ஒருங்கினிது தொகுத்து உணர்த்தியிருத்தல் காணலாம்.

"பத்தியினாலே - இந்தப் பாரினில்
　　மேன்மைகள் கேளடா!
சித்தம் தெளியும்! – இங்குச் செய்கை
　　அனைத்திலும் செம்மை பிறந்திடும்!
வித்தைகள் சேரும்! - நல்ல வீரர்
　　உறவு கிடைக்கும்! மனத்திடை
தத்துவம் உண்டாம்! – நெஞ்சிற் சஞ்சலம்
　　நீங்கி உறுதி விளங்கிடும்

---

1. 'The Apollo' 11 crew read the Bible on reaching the moon, which was broadcast over the whole globe. National prayers were organised in the U. S. A. for the safe return of the apollo 13 crew and it was led by Mr. Nixon in his official capacity as the President.'

சோர்வுகள் போகும் - பொய்ச்
சுகத்தினைத் தள்ளிச் சுகம்பெறல் ஆகும்! நற்
பார்வைகள் தோன்றும்! - மிடிப்
பாம்பு கடித்த விடம் அகன்றே நல்ல
சேர்வைகள் சேரும்! – பல
செல்வங்கள் வந்து மகிழ்ச்சி விளைந்திடும்,
தீர்வைகள் தீரும்! – பிணி
தீரும்! பலப்பல இன்பங்கள் சேர்ந்திடும்!

கல்வி வளரும் – பல
காரியம் கையுறும்; வீரியம் ஓங்கிடும்;
அல்லல் ஒளியும்: நல்ல
ஆண்மை யுண்டாகும்; அறிவு தெளிந்திடும்;
சொல்லுவ தெல்லாம் மறைச்
சொல்லினைப் போலப் பயனுளதாகும்; மெய்
வல்லமை தோன்றும்; தெய்வ
வாழ்க்கை யுற்றே இங்கு வாழ்ந்திடலாம்''

தெய்வம் உண்டு எனத் தெளிந்து பணிந்து ஒழுகுதல் ஆகிய பத்தியுணர்வு, நம் மனித வாழ்க்கை சிறப்புறுதற்குப் பல்லாற்றானும் துணை புரியும். தெய்வ நம்பிக்கையும் பத்தியுணர்வும், சிறந் துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப் பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரண மாக அமைகின்றன. 1

சமய உணர்வும் பத்தியும் இல்லாத ஒருவன்வேறு பிற துறைகளில் எவ்வளவு தான் சீரும் சிறப்புமுற்று விளங்கினாலும், தெய்வ நம்பிக்கையும் பத்தியுணர்வும் உடைய ஒருவனின் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாததாகிய, ஏதோ ஒரு சிறந்த தனிப்பெரும் சிறப்பு, பின்னையவனிடம் அமைந்து விளங்குதலை எவரும் காணலாம். 2

எனவே நாம் அனைவரும் இத்தகைய சிறந்த பத்தியுணர்வு வாய்ந்தவர்களாய், தெய்வ நம்பிக்கையிலும் வழிபாட்டிலும் சிறந்து, நற்பண்பும் நல்லொழுக்கமும் உடையவர்களாகத் திகழ்ந்து, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

---

1. The highest filights of charity, devotion, trust, patience, bravery etc; to which the wings of human nature have spread have been for religious ideals.

- Prof. William James.

2. 'When one compares the deeply religious and spiritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be confessed, that the former possesses something which others lack.

- Prof. J.B.Pratt.

# புறம் கூறும் அறம்

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

சங்கச் சிப்பியிற் பிறந்த தங்கத்தமிழ் முத்துக்கள் பல காலதேவனின் கொடும் பிடியிற் சிக்கிச்சிதைந்துபட்டன. எஞ்சிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதி னெண்கீழ்க் கணக்கு, முத்தொள்ளாயிரம் போன்ற நித்திலக்குவைகளே பழந்தமிழ்ப் பண்பாட்டின் பெருமையைப் பாருக்குப் பறைசாற்றி நிற்கின்றன.

> "நற்றிணை நல்லகுறுந் தொகை ஐங்குறுநூறு
> ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
> இத்திறத்த எட்டுத் தொகை."

என்ற பாடல் தொகை நூல்களின் தொகுதியைக் கூறுகின்றது. பழந்தமிழ ரின் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்த காதலையும், வீரத்தையும் அகம் புறம் எனப் பகுத்திருந்தனர் நம் முன்னோர். இவ் வெட்டுத் தொகை நூல்களுள் புறநானூ றும், பதிற்றுப்பத்தும் ஒழிய, ஏனைய நூல் கள் அகத்துறை ஒழுக்கத்தைக் கூறுகின் றன. பரிபாடலோ ஈடிணையற்ற ஓர் இசைநூல். இஃது அகமும் புறமும் தழுவி இயல்வது.

மக்களின் புறவாழ்வில் நிகழும் ஒழுக் கத்தை விரிக்கப்பேசும் நூல் புறநானூறு. இஃது நல்லிசைப் புலவோர் பாடிய நானூறு பாடல்களால் கோக்கப்பெற் றது. இதன்கண் அறம், பொருள் முத லாக வாழ்க்கைக்குத் தேவையான மறம், மானம், உற்றுழி உதவும் வண்மை, செயிர் தீர் நட்பு, வளையாச் செங்கோன்மை, பகைபொருது இனம் காக்கும் பண்பு, புலமையைத் தலையளி செய்யும் திறமை, கடவுட்பற்று முதலியன செறிந்து காணப் படுகின்றன.

வேந்தனின் அளியே மக்களின் உயிர்த் துளி. மன்னவனே மக்களின் உயிர். "மன்னன் உயிர்த்தே மலர்த்தலை உலகம்" என்றும், "கண்ணும் ஆவியும் ஆம்பெரும் காவலன்' என்றும், புறமும் பெரிய புரா ணமும் கூறுகின்றன. இத்தகைய மதிப்பிற் குரிய மண்ணுளும் மன்னவனும் அறத்தி னின்று பிறழ்ந்தால், அவனை இடித் துரைத்து அறத்தின்பாற் படுத்துவது சான்றோர்களின் கடனாகின்றது. இதைத் தான் பொய்யாமொழியாரும்,

> "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்"
>
> "இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
> கெடுக்குந் தகைமை யவர்"

என்று கூறுகின்றார். நல்லதன் நலனும், தீயதன் தீமையும் இவையிவையென விளக் கிப் புவிவேந்தனை அறவேந்தனாக ஆக்கும் புலவர்களின் வித்தகத் தன்மையைத் தன் னுள் பொதிந்து வைத்திருக்கும் வைரச் சுடராக ஒளிர்கின்றது புறநானூறு.

அறத்தினின்றும் வழுவாத போர்முறை யையே அக்கால மன்னர்கள் போற்றினர் கள். புகழ் எனின் உயிரும் கொடுப்பவர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள் ளார்கள். பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி அத்தகைய மாண்தக் கோன். மாற்றானது மண்ணைக் கொள்ளு முன் அங்கிருக்கும் பெண்களையும், ஆக் குழாத்தையும், பிணியாளரையும், தென் புலத்தார் கடன் ஆற்றும் மக்கட்பேறு

இல்லாதவர்களையும் பாதுகாப்பான இடத்தில் சேர்க்கின்றான்.

'ஆவும் ஆனியற் பார்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்'

எனப் பறையறைவித்த பின்னரே வேந்தன் போர்மேற்கொள்ளும் செய்தியை நெட்டிமையார் தெரிவிக்கின்றார். எத்தகைய அறநெஞ்சம்! இதுவல்லவா அறப்போர்!!

சீறடிச்சிலம்பின் காரணமாகக் கணவனை இழந்து முறை பிறழ்ந்த இறைக்குச் சிலம்பினால் நீதியை நினைவூட்ட வளைந்த செங்கோலைத் தன்உயிர்கொடுத்து நிமிர்த்தி வானகம் புகுந்த வழுதியையும், மாதேவியையும் கண்டும், மீண்டும் சினம் அடங்கப் பெறாதவளாய்,

"பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையை"

என்று கற்புக் கனலினால் கண்ணகி கூடலுக்குத் தீயூட்டுகின்றாள். அதுபோழ்து தீக்கடவுள் வெளிப்பட்டு, "ஈண்டு பிழைத் தற்குரியார் யார்? என்று கற்புக் கடம் பூண்ட கண்ணகியிடம் வினவ அதற்கு அவள்,

பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க

என்று கூறினாள். இளங்கோவடிகளின் அற உணர்வும், நெட்டிமையாரின் அற நினைவும் ஒரே படித்தனவாய் விளங்கக் காண்கின்றோம்.

அடுத்து உழவின் பயனையே உயிர்ப் பயனாக மன்னன் கொள்ள வேண்டும், என்பதைப் புலவர்கள் வலியுறுத்துகின்றனர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சேரனை வென்றும், வேள்அவ்வியின் மிழலைக் கூற்றத்தையும், முதுவேளிர்களின் முத்தூர்க் கூற்றத்தையும் வென்றும், போரின்மேல் பெருவிருப்பு உடையவனாகித் திகழ்ந்தான். அடிக்கடி அவன் போரில் ஈடுபட்டதனால் அவனது நாட்டு நீர்நிலைகள் வறண்டன- நிலம் புலர்ந்து ஊடியது. வரப்புயரத் தானே வேந்தனின் செங்கோல் உயரும். உணவுதானே உயிரின் காப்பு. மன்னன் மறந்ததை மதிநலம் சான்ற குடபுலவியனார் மறக்கவில்லை. அற்றம் பார்த்து அரசனுக்கு நினைவூட்டுகின்றார்.

வயவேந்தே! "செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும், இவ்வுலகத்தை ஒருகுடை நிழலில் நீ ஆளவிரும்பினும், நீ செய்ய வேண்டுவ தொன்றுண்டு. நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம் உண்டி கொடுத்தவரே உயிர் கொடுத்தவராவர். உணவின் நிலைக்களனே உடல். உணவெனப்படுவது நிலத்தொடு நீரும் சேர்ந்தது. நிலத்தையும் நீரையும் காத்தவரே உடலையும் உயிரையும் காத்தவராவர். வித்தி வானோக்கும் புன்புலம் மன்னனின் முயற்சிக்கு ஒவ்வாது. ஆதலால் இன்றே நீர் நிலைகளைப் பெருகச் செய்து உனது புகழையும் பெருக்கிக்கொள்" என்று அறவுரை கூறுகின்றார். அலகுடை நீழலவரே, பல குடை நீழலையும் தன்னடிப் படுப்பர், என்று பொதுமறையும் மேற்கண்ட கருத்திற்கு அரண் செய்கின்றது.

இடித்துரைக்கும் புலவர்களே சிறந்து நிற்கும் செங்கோலைக் கண்டு செம்மாப்புறுகின்றனர். சேரமான் யானைகட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் ஆட்சியின் மாட்சியைக் கண்ட குறுங்கோழியூர்க் கிழார்,

"வானவ! முந்நீர்க் குட்டத்தையும், வியன் ஞாலத்தையும், வளிவழங்கும் திசையையும், வானத்தையும் அளந்தாலும் அளக்கலாம்; ஆனால் நினது புகழோ அளக்கவொண்ணாதது; நின் நிழல் வாழ்வார் சோறு படுக்கும் தீயையும், செஞ்ஞாயிற்றின் வெம்மையையும் அல்லாது

பிறிது வெம்மையை அறியார்; திருவில்லை அல்லது, தெவ்வரின் கொலை வில்லை அறியாதவர்கள். மண்ணை உழும் படைக்கலம் அல்லது மார்பை உழும் படைக்கலம் காணுதவர்கள். கருவுற்ற மகளிர் உனது மண்ணினை விருப்புற்று உண்பார்களே அன்றி, மாற்றலர் உனது மண்ணினை உண்ணுர். உனது காவல் மிக்க கோட்டையிலே அம்பு துஞ்சுகின்றது. உனது செங்கோலில் அறம் துஞ்சுகின்றது'' என்று அறிவும், ஈரமும், கண்ணோட்டமுமுடைய காவலை, அறம் திகழ் திகிரியை ஏத்தி உரைக்கின்ருர்.

''எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு''

செய்ந் நன்றி கோறலின் கொடுமையை ஆலத்தூர்க் கிழார் நெஞ்சில் உதிரம் துளிக்கக் கூறுகின்ருர்.

'ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்
மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உள.

என்பதே பாடல்
ஆனல் நிலம்புடை பெயரினும் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்களுக்கு உய்யும் வழியே இல்லை. ஊழி பெயரினும் தான் பெயராச் சான்ருண்மையின் உயர்வுக்கு இப்பாடல் நல்லதோர் எடுத்துக் காட்டு.

மன்னன் காட்சிக்கு எளியனுகவும் கடுஞ்சொல்லன் அல்லன் ஆகவும் இருத்தல் வேண்டும்.

'' காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்''

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கிறைவனென்று வைக்கப்பெறுவான். இஃது தமிழ்மறை தரணிக்கு நினைவுறுத்தும் நீதி.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்கு வெள்ளைக்குடி நாகனுர் செவியறி உருவாக ''வேந்தே! மக்கள் முறை வேண்டும்பொழுதில் நீ காட்சிக்கு எளியனுகவேண்டும். உனது வானோங்கும் வெண்கொற்றக்குடை வெயிலை மறைத்தற்கு அன்று, வருந்தும் குடிகளுக்கு நிழல் கொடுக்க. மாரிபொய்ப்பினும், வாரிகுன்றினும், இயற்கையல்லன செயற்கையிற் தோன்றினும், இக்கண்ணகல் ஞாலம் காவலனையே பழிக்கும். நீ நொதுமலாளரின் பொதுமொழி கொள்ளாது, பகடு புறந்தரும் உழவரைப் பேணுவையாயின், நினது பகைவர்கள் உனது அடிபுறம் பேணுவர்'' என்று கூறுகின்ருர்.

இயற்கைமாறி, மழைவளம் குன்றிப் பஞ்சம் தலைப்படின், அதற்குக் காரணம் மன்னவனே என்பது மக்கள் கொள்கை. இதையே இளங்கோவடிகளும் செங்குட்டுவனின் வாயிலாகக் கூறுகின்ருர்.

'' மழை வளங்கரப்பின் வான்பேரச்சம்
பிழை உயிர் எய்திற் பெரும் பேரச்சம்
குடிபுரவுண்டுங் கொடுங் கோலஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதக வில்லென''

எத்தகைய நுட்பமான கருத்துப்பாடலில் பொதிந்துள்ளது என்பதைப் பாருங்கள் சேக்கிழார் பெருமானும் மனுநீதிச் சோழனின் செயலைக் கூறுமிடத்து

"ஒரு மைந்தன் தன்குலத்துக்குள்ளான் என்பதும் உணரான்
தருமந் தன்வழிச் செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந் தன்தேராழியுற வூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்"

என வினவுகின்றார். ஆட்சிப் பொறுப்பில் அமருவோர் கடைப்பிடிக்க வேண்டிய நெறி பற்றிக் கூற இதனிலும் கூடுதலான சான்றும் வேறும் வேண்டுமோ?

இனி ஈகையாம் அறத்தினைச் சிறிது நோக்குவோம். ஈத்துவக்கும் இன்பமே இன்பம். புலவர்கள் பழுமரம் தேடும் பறவைகளைப் போல வள்ளல்களை நாடிச் சென்று அழியும் பரிசிலைப்பெற்று, அழியாப் பரிசிலான அழகு தமிழ்க் கவிதைகளை அவர்கள் மேல் பொழிவர். அக்ஷர லக்ஷம் பெறும் அக்கவிதைகளுக்காக வேந்தர்கள் தம் ஆவியையும் கொடுக்க முன் வருவர். எவ்வித பிரதி பயனையும் கருதி அவர்கள் பரிசில் அளிக்கவில்லை. படைமடம் படுதலினும், கொடைமடம் படுவதையே அவர்கள் விழைந்தனர்.

ஏணிச்சேரி முடமோசியார் ஆய் அண்டிரனைக் கூறுமிடத்து,

"இம்மை செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே"

என்கின்றார்.

உவந்து கொடுக்கும் பொருள் குன்றிமணி அளவாயினும் உவப்புடன் ஏற்கும் புலவோர் அகனகவாரா முகனமி பரிசிலை ஏற்கமாட்டார்கள். முற்றிய திருவின் மூவ ராயினும் பெட்பின்றீதலை விரும்பமாட்டார்கள். அனிச்சமலரினும் மெல்லிய மனம் படைத்தவர்கள் புலவர்கள். வில் லேருழவர் பகை கொண்டாலும், சொல் லேருழவர் பகை கொள்ளக்கூடாதல்லவா?

ஒருமுறை அதியமான் நெடுமானஞ்சி பெருஞ்சித்திரனாரைக் காணாதே காவலர் மூலம் பொருளீந்தான். அதற்கு அவர் "தினையளவுப் பொருளாயினும் என் திறமை அறிந்து நல்கும் பரிசிலை யான் பெறுவேனேயல்லாது, காணாதீந்த இப் பொருட்குயானோர் வாணிகப் பரிசிலன் அல்லேன்" என்று கூறி, தன்வழி நடந்தார். இது எத்தகைய தன்மானம் நிரம்பிய தமிழ் நெஞ்சம் பாருங்கள். இதே போன்று ஔவையாரிடமும் ஒருமுறை அதியமான் அகப்பட்டுக் கொள்கின்றான். அவன் பரிசில் கொடாமல் நீட்டித்த வழி அது கண்டு வெகுண்ட ஔவையார்,

"கடுமான் தோன்றல் நெடுமானஞ்சி
தன்னறியலன் கொல்! என்னறியலன் கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெங் கலனே; சுருக்கினெங் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"

என்று அரசனை மதியாது அகல்கின்றார். இதே அதியமான் நெடுமானஞ்சி இறந்த பொழுது, அவனது மெல்லிய இயல்புகளை நினைந்து நினைந்து நெஞ்சு அழிகின்றார் ஔவையார்.

"நரந்தம் நாறும் தன்கையால் புலவு நாறும் என் தலையை வருடியவனே! நினது மார்பில் தைத்த வேல் பாணர்களின் கையிலுள்ள மண்டை ஓட்டைத் துளைத்து, இரப்பவர்களின் கைகளுள் ஏகி, அவனால் காக்கப்படுபவர்களின் கண்பாவை ஒளி மழுங்க, அழகிய சொல்லையும், நுண்ணிய தேர்ச்சியினையுமுடைய 'புலவர்களின் நாவில் சென்று தைத்து நின்றது. இனிப் பாடுபவர்களுமில்லை, பாடுபவர்களுக்கு ஒன்று ஈகுநருமில்லை;

"பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயும் உயிர்த்தவப் பலவே"

என்று விம்மி விம்மி உரைப்பது படிப்பவர்கள் மனத்தினை நெகிழச் செய்கின்றது. கண்கள் குளமாகின்றன.

இறுதியாக கழைதின் யானையாரின் அறவுரை மக்கட் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் மனங்கொள வேண்டிய தொன்றாகும்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன்எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

"ஆவிற்கு நீரென் றிரம்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த திலா என்பவர்"
-குறள் ஆசிரியர்

புறம் கூறும் அறங்களைத் தழுவி நமது வாழ்க்கையைச் செப்பமுற அமைத்துக் கொண்டால், அதுவே அறவாழ்வாக, அன்பு வாழ்வாக மலரும்.

# துன்பத்துக்குக் காரணமும் அதனை நீக்குவதற்கு வழியும்

**கி. லக்ஷ்மணன்**

**பௌத்தம் :**

மனிதனுடைய துன்பம் அனைத்துக்கும் மூலகாரணம் என்ன? துன்பத்தைப் போக்க வழி என்ன? என்பனவற்றை ஆழ்ந்து சிந்தித்தவர்களே தத்துவ ஞானிகள். துன்ப நீக்கம் அல்லது துக்க நிவாரணத்திலே தொடங்கிய ஆராய்ச்சி படிப்படியாக அவர்களைப் பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கம் பற்றிய ஆராய்ச்சிக்கு இட்டுச் சென்றது. துன்பம் அனைத்துக்கும் பற்றே காரணம் எனக் கண்ட ஞானிகள், பற்றுக்குப் பாத்திரமான பொருள்களின் உண்மையியல்புகளை ஆராய்ந்தனர். அப்பற்றைச் செய்யும் மனிதனுடைய உண்மையியல்பையும் ஆராய்ந்தனர். இத்தகைய ஆராய்ச்சிகளின் பயனாகவும், உள்ளுணர்வின் விளைவாகவும், வியப்புக்குரிய பல முடிவுகள் ஏற்பட்டன. அவற்றுள் ஒன்று புத்தர் கண்ட முடிவு.

பொருள்களில் ஏற்படும் மாற்றத்தை ஊன்றி ஆராய்ந்த புத்தர், பொருளே இல்லை; மாற்றம் மட்டுமே உள்ளது என்ற முடிவுக்கு வந்தார். உண்மையில் ஒன்றுமேயில்லை என்ற இந்த வாதம் சூன்யவாதம் என்ற பெயரால் வழங்கப் படலாயிற்று. ஆத்மாவைப் பற்றியும் புத்தர் இதே முடிவுக்கு வந்தார். மாற்றம் மட்டுமே உண்டு. மாற்றத்தை அடைகின்ற நிலையான ஆத்மா என்ற பொருள் எதுவுமில்லை என்ற அவருடைய முடிவு அநாத்மவாதம் என வழங்குவதாயிற்று. எனவே ஒரு விதத்தில் இல்லாதவைகளை உள்ளனவாகக் கொள்வதே, புத்தரின் கருத்துப்படி நம் துன்பம் அனைத்துக்கும் காரணம் எனக் கொள்ளலாம்.

**வேதாந்தம் :**

வேதாந்தம் கண்ட முடிவு இதற்கு மாறானது. ஆத்மா என ஒன்று உண்டு என்பதே வேதாந்தத்தின் முடிவு. அதனால் அது ஆத்மவாதம் எனப்படும். ஆத்மா உண்டென வாதிப்பதே ஆத்மவாதம். ஆயினும் உண்மையில் உள்ளது ஒரேயொரு ஆத்மா மட்டுமே என்கின்றது வேதாந்தம். அதனால் ஏகான்மவாதம் என்றொரு பெயரும் வேதாந்தத்துக்கு ஏற்பட்டுள்ளது. எனவே வேதாந்தக் கருத்துப்படி உண்மையில் உள்ள பொருள் ஒன்றேயாகவும், அதனைப் பலவாகக் காண்பதே துன்பம் அனைத்துக்கும் காரணம் எனக் கொள்ளலாம். பௌத்தம், வேதாந்தம் இரண்டிலும் ஞானத்துக்கே முக்கிய இடம் அளிக்கப்படுவது இயல்பு. மயக்கம் தெளிவதற்கும், உண்மையை உணர்வதற்கும் ஞானமே முக்கியம். அந்தத் தத்துவங்கள் இரண்டிலும் பக்திக்கு அதிக இடமில்லை. ஆன்மாவேயில்லாத போது பக்தி செய்யவும், பக்தி செய்யப்படவும் எதுவுமில்லை. உண்மையில் உள்ளது ஒரேயொரு ஆன்மா மட்டுமே எனினும், பக்திக்கு இடமில்லை என்ற முடிவே ஏற்படும்.

துன்ப நீக்கத்தையொட்டி இதுவரை பௌத்தம் வேதாந்தம் ஆகிய இரண்டின் அடிப்படைத் தத்துவங்களை மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, அவ்விரண்டிலும் துன்ப நீக்கத்துக்கு ஞானமே முக்கிய வழியாகும் என்பதையும் ஓரளவு சுட்டிக் காட்டினோம்.

**சைவசித்தாந்தம்:**

இனி, இத் தொடர்பிலே சைவம் வைஷ்ணவம் ஆகிய இரண்டின் கொள்கைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

சைவத்தின் தத்துவக் கொள்கைகளைச் சைவ சித்தாந்தம் எனவும், வைஷ்ணவத்தின் தத்துவக் கருத்துக்களை விசிட்டாத்து விதம் எனவும், குறிப்பிடலாம். இவையிரண்டும் அடிப்படைத் தத்துவங்கள் சிலவற்றில் நெருங்கிய ஒற்றுமை உடையன. இவற்றுள் இங்கு சைவசித்தாந்தத்தை மட்டுமே எடுப்போம். ஆன்மா இல்லையென்பதையோ, உண்மையில் உள்ளது ஒரேயொரு ஆன்மா மட்டுமே என்பதையோ சைவசித்தாந்தம் ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆன்மாக்கள் அநந்தம்; அவையாவும் நித்தியமானவை என்பதே சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவங்களுள் ஒன்று. பௌத்தத்தைச் சூன்யவாதம் எனவும், வேதாந்தத்தை ஒருமைவாதம் எனவும் கொண்டால் சைவசித்தாந்தம் பன்மைவாதமாகும். ஆன்மா இல்லையெனக் கொள்ளும் பௌத்தம், மறுபிறப்பு கன்மம் ஆகிய இரண்டையும் ஒப்புக் கொள்ளுகின்றது. ஆன்மா இல்லையானால் மறுபிறபபை எடுப்பது எது? கன்மபலன்களை அனுபவிப்பது எது? என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதிலே பௌத்தத்துக்குச் சில சங்கடங்களுண்டு. பௌத்தம் இவ்வினாக்களுக்கு அளிக்கும் விடைகள் பூரண திருப்தியளிப்பன எனக்கொள்ள வியலாது. அதைப்போலவே வேதாந்தம் கூறும் ஒரேயொரு பொருளாகிய பரமாத்மா யாருக்குப் பல பொருளாகக் காணப்படுகின்றது? பரமாத்மா தானே தனக்கே பலவாகக் காணப்படுகின்றதா? என்பன போன்ற வினாக்களுக்கு வேதாந்திகள் கொடுக்கும் விடைகள் பலருக்கு இன்னும் விளங்காத புதிராகவேயிருக்கின்றன. பௌத்தம் வேதாந்தம் இரண்டிலிருந்தும் வேறுபட்ட சைவசித்தாந்தம், ஆன்மாக்கள் பல; அவை என்றும் உள்ளவை என்ற கொள்கையோடு மட்டும் நின்று விடவில்லை. இந்த ஆன்மாக்கள் அனைத்துக்கும் நாயகன் ஒருவனுமுளன் என்ற கொள்கையையுமுடையது.

ஆன்மாக்கள் என்றுமுள்ளவை. இறைவன் என்றுமுள்ளவன் மட்டுமல்லன். வேறும் இரண்டு தன்மைகளையுடையவன். அவன் எங்கும் நிறைந்தவன். எல்லாம் வல்லவன். இன்னும் சொல்வதாயின் திருவள்ளுவர் கூறும் எண்குணத்தான் அவன். அந்த எண் குணங்களையும் திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர் அழகாக விளக்கியுள்ளார். தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை வரம்பிலின்பமுடைமை என்பவையே அந்த எட்டுக் குணங்களும்.

அழிந்தழிந்து தோன்றுவதாயினும் இந்த உலகமும் உண்மை என்பதே சைவ சித்தாந்தத்தின் கொள்கை. சைவசித்தாந்தக் கோட்பாட்டின்படி ஆன்மாவின் இயல்புகளுள் முக்கியமானவை இரண்டு. அவற்றுள் ஒன்று அது ஒருபோதும் தானாகவே தனித்து நிற்பதில்லை. எப்போதும் ஏதாவது ஒன்றைச்சார்ந்தே நிற்கும். ஆன்மாவின் மற்ற இயல்பு அது எதைச் சார்கின்றதோ அதன் தன்மையை அடைவதாகும். ஆன்மா சாரவேண்டியது இறைவனை. இறைவனைச் சார்ந்தால் இறைவனுக்குரிய வரம்பில்லாத இன்பம் ஆன்மாவைச்சாரும் எனவே ஆன்மாவின் துன்பம் அனைத்திற்கும் காரணம், அது சேரிடமறிந்து சேராமல், சேராத இடந்தனிலே சேர்ந்தமையேயாகும். சைவசித்தாந்தப் பெருநூலாகிய சிவஞானபோதம் ஓர் உவமை மூலம் ஆன்மாவின் துன்பமனைத்துக்கும் காரணத்தை மிக நுட்பமாகக் கூறுகின்றது "ஆன்மா மன்னவ குமரன். அது தன் குடும்பத்தை மறந்து ஐம் பொறிகளாகிய வேடரோடு கூடிவைகி வளர்ந்து, தன் பெருந்தகைமையை அறியாது மயங்கி இடர்ப்படுகின்றது" என்பதே சிவஞானபோதத்திலே காணப்படும் உவமை. எனவே, சைவ சித்தாந்தக் கோட்பாட்டின்படி ஆன்மாவின் துன்பத்துக்குக் காரணம் பற்றல்ல. பற்று வைத்தது பிழையல்ல. ஆனால் பிழையான பொருளிலே பற்றுவைத்ததே பிழை.

பற்றுவைக்க வேண்டிய பரம்பொருளை மறந்து,பற்றுவைத்தற்குத் தகாத பொருள்களிலே பற்றுவைத்தமையே துன்பத்துக்குக் காரணம். எனவே துன்பம் நீங்க வேண்டுமாயின் பற்றை நீக்கத் தேவையில்லை. பற்றுவைக்கவேண்டிய இடத்தைப் படிப்படியாக மாற்றவேண்டும். வள்ளுவர் கூறியது இந்த இடத்திலே நினைவுக்கு வரும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை; யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்பதே வள்ளுவர் கூற்று. ஆன்மாவின் துன்பத்துக்குக் காரணத்தையும், அத்துன்பத்தை நீக்குவதற்கு வழியையும் சிவாய நம என்ற ஐந்து எழுத்துக்களைக் கொண்டே மிகச் சுலபமாக விளக்கிவிடலாம். "சிவாய நம" என்ற ஐந்து எழுத்துக்களின் நடுவிலுள்ள 'ய' என்ற எழுத்து ஆன்மாவைக் குறிக்கும். இதனை தெருள் எனக் குறிப்பிடுவதுண்டு. நடுவிலுள்ள 'ய' ஆகிய ஆன்மாவுக்கு வலப் பக்கத்திலுள்ள 'சி' உம் 'வா' உம் முறையே சிவனையும், அவனது அருளையும் குறிக்கும். இடப்பக்கத்திலுள்ள 'ந' கன்மத்தையும்மாயையையும் குறிக்கும் 'ம' ஆணவத்தைக் குறிக்கும். இவற்றை முறையே "மருள்" எனவும் "இருள்" எனவும் குறிப்பதுண்டு. ஆன்மா பற்ற வேண்டிய பொருளையும் அருளையும் புறக்கணித்து, மருளையும் இருளையும் பற்றிக் கொண்டமையே, துன்ப மனைத்துக்கும் காரணம்; இந்த உண்மையை அறிந்து, பிரியவேண்டிய 'இருளிலிருந்து பிரிந்து, செறியவேண்டிய பொருளிலே செறிவதே துன்ப நீக்கத்துக்கு வழி. இந்த அறிதல், பிரிதல், செறிதல் என்ற மூன்றும் முக்கியமானவை.

மேலே, துன்ப நீக்கத்துக்குப் பற்றற்றான் தாளைப் பற்றவேண்டுமென வள்ளுவர் கூறியதைச் சுட்டிக்காட்டினோம். அப்பற்றே நாயன்மார்களுடைய பக்திச்சுவை நிரம்பிய பாடல்களிலும், ஆழ்வார்களுடைய பக்திப் பாசுரங்களிலும் மேலோங்கி நிற்பவை. முள்ளை முள்ளாலே எடுப்பது போலக் கண்ணீரைத் துடைப்பதற்கும் கண்ணீர் விட்டேயாக வேண்டும். மனமாசனைத்தையும் கண்ணீரால் கழுவவேண்டும். இதனையே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் நாயன்மார்களிடமும், ஆழ்வார்களிடமும் காண்கின்றோம். "உள்ளம் தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகவேண்டும்; உடம்பு எல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயவேண்டும்" என மணிவாசகப் பெருமான் தன் அருள்வாக்கால் காட்டும் அருநெறியே துன்பத்தைத் துடைக்க வல்ல பக்திநெறி.

சைவமும் வைஷ்ணவமும் காட்டும் பெருநெறி இதுவேயாகும்.

# எது இகழ்ச்சி

— ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் —

உலகத்திலே எது இகழ்ச்சியென்று அறிவாளிகள் உள்ளத்தில் ஒரு வினு எழுவது இயல்புதானே. அதற்கு விடைதெரிந்து விட்டால் அந்த இகழ்ச்சியான செயலை நாம் செய்யாமல் இருக்கலாமல்லவா?

வீடு கட்டுவது, பாத்திரம் விளக்குவது, ஆடை தோய்ப்பது போன்ற தொழில்களை, நமது வீட்டில் ஒருவன், அன்றேல் ஒருத்தி செய்கின்றனர். இவை இழிவானவையா? எனச் சிந்தித்தேன். அத்தனையும் உயர்ந்த தொழில்கள். வீடுகூட்ட வில்லையானல் எத்துணை அசுத்தமாகவும், அருவருப்பாகவும் இருக்கும்? விளக்காத பாத்திரத்தில் எப்படித் தண்ணீர் பருகமுடியும்? தோய்க்காத துணியை உடுப்பது எவ்வளவு சுகக்கேடு? எனவே, இவை எல்லாம் இழிந்த தொழில்கள் ஆகமாட்டா? தூய்மை செய்யும் இனிய செயல்கள் இவை.

நமது வீட்டில் சமையல் செய்பவன் உணவு சமைத்துப் படைக்கின்ருன். உணவு மனிதனுக்கு இன்றியமையாதது. உயிர்நாடி போன்றது. உணவின்றி உயிர் வாழ இயலாது, அதனுலேயே திருவள்ளுவரும், தமது வாழ்க்கைத் துணைவியாரை 'அடிசிற்கினியாளே' என்று முதலில் உணவைக் குறித்துச் சொன்னுர். நளச்சக்கரவர்த்தியும் பீமன் முதலிய மன்னர்களும் உணவு சமைக்கும் இனிய தொழிலைப் புரிந்தார்கள். இதனுல் அவர்கள் குறைந்தவர்களாகக் கருதப் படவில்லை.

இனி இழிந்த தொழில் எது? ஒருவரிடம் சென்று ஒருபொருளை யாசிப்பது தான் இழிந்த தொழிலாகும்.

''ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவின் இழிவந்த தில்''

எளிமையிற் கிடைக்கக்கூடிய தண்ணீரை யாரும் போற்றக் கூடிய பசுவிற்கு வேண்டும் என்று கேட்பதும் மிகவும் இழிவு என்கின்ருர் திருவள்ளுவர்.

'தெண்ணீர், அடு புற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினியதில்''

தெளிந்த தண்ணீர் போன்ற புற்கஞ்சியானுலும் உழைப்பால் வந்த அந்த உணவே, மேலான அமுதம் போன்றதாம்.

''போனகம் என்பது தானுழந்துண்டல்''

என்கின்ருர் ஔவையார். கையில்லாத ஆடுமாடுகள் உழைத்துத் தேடித் தம் பெருவயிற்றை நிரம்பிக் கொள்வதைக் கண்கூடாகப் பார்க்கின்ருேம். கையும், கருத்தும் படைத்த நாம் உழையாது நம் சிறு வயிற்றைத் திருப்தி செய்ய முடியாதா?

ஒருவன் இரப்பதால் வரும் இழிவை நன்குணர்ந்தவன். உழைத்து உண்ணும் உரமுடையவன். நாட்கணக்கில் எங்கும் தொழில் கிடைக்காது அலைந்தான்; உலைந்தான். பட்டினியால் வாடினுன், உயிர் துடிக்கும் நிலை வந்தது. தள்ளாடிக் கொண்டு சென்ருன். ஒருவர் திண்ணையில் அமர்ந்து பாசிப்பயறுச் சுண்டல் உண்டு கொண்டிருந்தார். கேட்டுவாங்கி உண்ணுது, உழைத்து உண்ணும் கொள்கையுடைய அவன், ஆபத்துக்காலத் தருமமாக 'ஐயா! சிறிது உணவுகொடும்' என்ருன்.

உடனே இரண்டு பிடி சுண்டல் கொடுத்தார். அதனை அவன் உண்டான். விக்கல் வந்தது, வீட்டுக்காரன் ஓடிவந்து தண்ணீ

ரைக் கொடுத்தான். விக்கல் கொண்டவன் ,ஐயா, நான்யாசித்து நீர் பருகமாட்டேன்,'' என்ருன்.

வீட்டுக்குரியவன் 'என்னையா! சுண்டல் யாசித்து உண்டீரே' என்ருன்.

'உயிர் துடித்தது; ஒழிபியல் போல், உயிருக்கு இறுதி வருந்தறுவாயில் வேறு செயலின்றி யாசித்தேன்' இரண்டு பிடி சுண்டல் உண்டதனுல் சிறிது நடக்கக் கூடிய வலிமை வந்துள்ளது. அதோ தெரிகின்ற குளத்தில் நடந்து சென்று நீர்பருகுவேன். உடம்பில் வலிமை உள்ளபோது யாசித்து நீர் குடிக்க வேண்டுமோ? என்று கேட்டுக் கொண்டு குளத்தைநோக்கி நடந்தான்; இதனுல் யாசிப்பதன் இழிவை நன்கு புலனுக்குகின்றதல்லவா இக்கதை. இதே போன்ற இன்னேரு கதை:

ஒரு புலவரை ஒருவன் நோக்கி, புலவரே! உலகில் அற்பமான பொருள் யாது? என்று கேட்டான்.

புலவர் — துரும்பு என்ருர்.

துரும்பினும் அற்பமான பொருள் உளதோ? உளது. துரும்பினும் அற்பமானது பஞ்சு. ஓ! பஞ்சினும் அற்பம் இருக்கின்றதா? ஐயா! இருக்கின்றது. பஞ்சினும் மிக அற்பமான பொருள் யாசித்தல்.

என்னே புலவரே நீர் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லையே எனக் கூறி, யாசித்தல் அற்பமானதென்ருல், பஞ்சு காற்ருல் அடித்துச் செல்லப் படுகிறது. ஆயின் யாசிப்வனைக் காற்று அடித்துச் செல்வதில்லையே என்ருர்.

புலவர்: நாவை அசைத்தார்

''நொய்தாந் திரணத்தில் நொய்தாகும் வெண் பஞ்சு
நொய்தாம் இரப்போன் நுவலுங்கால் நொய்தான்
பஞ்சுதனில் நொய்தானைப் பற்ருதோ—காற்றனுக
அஞ்சுமவன் கேடப தறிந்து''

என்று பாடினுர். அதற்குக் காரணங் கூறும் புலவர் 'பஞ்சுதனில் அற்பமானவனைக் காற்று நெருங்கினுல், தன்னை ஏதாவது யாசிப்பான் என்று அஞ்சிக்காற்று அவன் பால் செல்வதில்லை' என்ருர்.

உத்தமமானவர்கள். இறைவனிடம் கூட யாசிக்க மாட்டார்கள். இறைவனைக் கூடும் அன்பினில் கும்பிடுவாரேயன்றி வீடும் வேண்டாவிறலில் விளங்குவார்கள்.

ஒரு பொருளை யாசிப்பவன் எத்துணைப் பெரியோனுயினும் குன்றிவிடுவான் என்பதை விளக்கவே நெடியோனுகிய திருமால் மாவலியிடம் மூவடி மண்தானம் கேட்டபோது குள்ளனுகச் சென்ருர். (வாமனன்) பெரியோர் பெருமை ஒரு பொருளைப் பிறரிடம் சென்றுகேட்டவுடன் கெட்டுவிடும். இதனை,

''கற்றைக்குழலார் கவினெல்லாம் ஓர் மகவைப்
பெற்றக் கணமே பிரிந் திடுமே—கற்றருளை
வேட்ட பெரியோர் பெருமை யெலாம் வேறென்றைக்
கேட்ட பொழுதே கெடும்''

என்ற பாடல் எடுத்துக் காட்டுகின்றது. ஆகவே உலகில் மிகவும் இழிவானது. இரத்தலேயாம். இத்தனைகருத்துக்களையும் இரத்தினைச் சுருக்கமாகக் கூறுவதில் வல்லுனரான ஔவைப் பிராட்டியார் 'ஏற்பது இகழ்ச்சி' என்று இரண்டு சொல்லில் கூறிமுடித்து விட்டார்.

இல்லாமை சொல்லி ஒருவர் தம்பால் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேன் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்றவர் தம்பால் ஒருகாலத்தினும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே!

சிவம்

# துர்க்கை வழிபாட்டு மரபும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயமும்

தெ. து. ஜயரத்தினம் —

"பரங்கிரியின் மேவியருந் தவமிழைத்து விறல்சேர்ந்து பாருளோங்கித்
திரங்குலவு மவுணனையே வட்டியவன் சிரமிதித்த சிலம்பினாளை
வரங்குலவு வேலவனார் மணக்கோலங் கண்டிருந்த மகிழ்ச்சியாளைக்
கரங்குலவு சங்காழி தரித்துவளர் துர்க்கைதனைக் கருத்துள் வைப்பாம்."

பாரத நாட்டின் சமய வரலாறு, பல்வேறு சமய மரபுகளையும் வழிபாட்டு முறைகளையும் உள்ளடக்கியதாகும். சமுதாய வரலாற்றிலே ஒவ்வொரு சமூகமும், அவ்வவற்றின் மனித நலவியற் பண்புகளுக்கு ஒப்பச் சமயங்களையும் வழிபாட்டு முறைகளையும் உருவாக்கி, ஒழுக்கவியலையும் ஆத்மீகத்தையும் நெறிப்படுத்த முயன்றது. இந்த வகையிலேயே பாரத நாட்டின் வைதீக, அவைதீக சமயங்களின் பரிணாம வளர்ச்சியும் நடைபெற்று வந்துள்ளது.

சைவம் வைணவம் சாக்தம் ஆகிய மூன்றும் வைதீக சமயங்களெனவும், சமணம் பௌத்தம் உலோகாயதம் ஆகிய மூன்றும் அவைதீக சமயங்களெனவும் பெரும்படியாகக் கொள்ளப்படுகின்றன. காணபத்தியம், கௌமாரம், சௌரம் போன்றவையும் வைதீக சமயப் பிரிவுள் அடங்குவனவாம். வைதீக சமயங்களுள் சாக்தம் மிகப் பதமையானதென அறிஞர்கள் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளனர்.

வேதகாலக் கடவுள் வணக்கத்தின் முன்னரே சிந்துவெளி நாகரிகத்தில் சக்தி வணக்கம் செல்வாக்குற்றிருந்தது. பின்னர் ஆரியரின் செல்வாக்கினால் சிவவணக்கம் உயர் நிலையடைந்தது. சிந்து வெளி நாகரிக முத்திரைகள் சக்தி வணக்கத்தை வலியுறுத்துகின்றன. பின்னர் சக்தி சிவத்துடன் இணைந்த தெய்வமாக வளர்ச்சியடைந்தது. இம்மரபு பாரத நாடு முழுவதும் செறிந்து, சக்தியின்பல்வேறு வடிவங்களையும் கலையுருவிற் கண்டு வணங்கி வழிபாடு செய்யும் வகையில் இன்றும் நிலவுகிறது.

அருளது சத்தியாகும் அரன்தனக் கருணை இன்றித்
தெருள் சிவமில்லை அந்தச் சிவம் இன்றிச் சத்தி இல்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப்போல் ஈசன்

என்ற சிவஞான சித்தியார் பாடலும்,

உணர்ந்துட னேநிற்கும் உள் ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.

என்ற திருமந்திரப் பாடலும், அப்பனும் அம்மையும் இயைந்து நின்று சுரக்கும் பேரருளைக் காட்டுகின்றன. சக்தியின் ஐக்கியம் இல்லாவிட்டால், சிவம் தொழிற்படாதென்பது சைவசித்தாந்தத் தெளிவு. சக்தி வெளிப்பட்டு நின்று அருள்பாலிக்கும்போதுதான், பராசத்தி என்று அழைக்கப்படுகிறதென்ற உண்மையையும் இவ்வழிபாட்டு மரபு வளர்ச்சி எமக்குக் காட்டுகிறது.

இப்பராசக்தி உலகம் உய்யவும், உயிர்கள் சுபீட்சம் அடையவும் பலவிதமான தொழில்களை நிகழ்த்துகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு மூர்த்தமாக விளங்குகிறது. இம்மூர்த்தங்கள் பலவாயினும் மரபுவழி முக்கியமான மூன்றையே வழிபாடு செய்வது வழக்காருக வந்துளது. வீரத்தின் வடிவாயிருந்து, உயிர்களுக்கு வீரத்தை வழங்கும்போது துர்க்கா முகூர்த்தமாகவும், ஐஸ்வரியத்தின் வடிவாயிருந்து பொன்னையும் பொருளையும் பல்வேறு வளங்களையும் தருங்கால் இலக்குமி மூர்த்தமாகவும், சாந்தமே வடிவாயிருந்து உயிர்களுக்கு ஞானத்தை நல்கும்போது சரஸ்வதி மூர்த்தமாகவும் கொண்டு நாம் சக்தியை வழிபடுகிருேம்.

இம்மூன்று மூர்த்தங்களிலும் துர்க்கா மூர்த்தமே மிக உன்னதமானதும், சகலஆற்றல்களையும் தன்பாலடக்கியிருப்பதுமாகும். துர்க்கா மந்திரமே ஓசையாலும், பொருளாலும் உபாசிப்பவர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் தன்மையது. 'அணுகுதற் கரியவள்'' என்பது அம்மந்திரப் பொருளாகும். மெய்யன்புள்ளவர்களே அவளிடத்தணுகி, அவளின் கருணைப் பிரவாகத்தில் திளைக்கலாமென்பது கருத்து. துஷ்ட நிக்கிரக சிட்ட பரிபாலனஞ் செய்யுந் தன்மையில் ''அக்கிரமம் செய்பவரை அழிப்பவள்'' என்பதும் பெறப்படுகின்றது.

துர்க்கன் என்னும் பெயரையுடைய அசுரன் ஒருவன் தேவியால் அழிக்கப்பட்டானென்றும், அந்தக் காரணத்தினுலேயே தேவிக்குத் துர்க்கை என்னும் நாமம் வந்ததென்றும் புராணங்கள் கூறுகின்றன. அன்றியும் மகிஷாசுரன் என்னும் எருமைத் தலைதாங்கிய அசுரன் ஒருவனை அழித்த காரணத்தால் ''மகிஷாசுரமர்த்தனி'' என்னும் திருநாமத்தைத் துர்க்காதேவி தாங்கினள் எனவும் கூறுவர். இறைவனின் ஐந்தொழில்களுள் அழித்தல் என்பது சங்காரம் எனப்படும். அதற்குக் காரணமாயிருப்பவர் சிவபெருமானே என்பதும், சர்வ சங்காரகாரணியாயிருப்பவள் துர்க்கா மூர்த்தமுடைய பராசக்தியே என்பதும் அறியற்பாலனவாம்.

தெல்லிப்பளை உழுகுடைத் துர்க்கா தேவி ஆலயம் பழைமையும் அற்புதமும் வாய்ந்த தலமாகும். இவ்வாலயத்தின் பழம் பெருமைகளை அறிய முயன்றபோது, பல தகவல்களையும் அறியும் வாய்ப்பு அடியேனுக்குக்கிட்டியது.அவற்றை மிகச்சுருக்கமாக விளக்க விழைகின்றேன். இந்தியத் துணைக் கண்டத்துடன் ஈழம் கொண்டுள்ள பழைமையான கலாசாரத் தொடர்புகளும் பண்பாட்டு இணைவுகளும் பிற தொடர்புகளும் பலவுள. இவற்றைப் பிரித்து நோக்கும் வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஈழத்து மரபுகளை நுணுகி நோக்கும் போதும், இவற்றின் மூலத்தை ஆய்வு செய்யும்போதும் இவை தென்னக வரலாற்றுடன் சென்று இணைவதைக் கவனிக்கலாம். வழிபடு தலங்களும் வழிபாட்டு முறைகளும் இதனை நன்கு வலியுறுத்துகின்றன.

பழைமைநிறைந்த சக்தி வழிபாட்டின் பல்வேறு வடிவங்கள் பாரத நாட்டில் காணப்படுகின்றன. சக்தியையே மூலாதார மூர்த்தமாகக் கொண்டு வழிபடும் சாக்த சமயத்தினரை இன்றும் வடநாட்டிற் காணலாம். இவ்வழிபாடு இருவகையிலமைகின்றது. சக்தியை உலகத் தாயாகவும், வளத்தின் தெய்வமாகவும் கொண்டு வழிபடும் வகை ஒன்று. வீரத்தாயாகவும், வெற்றி தரும் மூர்த்தமாகவும் கொண்டு வழிபடும் வகை மற்றொன்று. வீட்டு வழிபாட்டில் பெருமளவில் தாய்த்தன்மை கலந்த தெய்வ நிலை விளங்குகிறது. பொது வழிபாட்டில் உடல் வீரத்தையும், மன வைராக்கியத்தையும் தரும் தெய்வநிலை அமைகிறது. புராண இதிகாசங்களில்

நாம் காணும் ஒரு தெய்வநீதி அசுரத்தன்மையை அழித்துத் தெய்விகத் தன்மையை வாழ வைப்பதேயாம். சக்தி அசுரர்களை அழிக்க வீரவடிவம் தாங்கி நிற்பதைத் "தேவிமகாத்மியம்" பேசுகிறது. துர்க்கை காளி, மூர்த்தங்கள் இதற்காகவே அமைந்துள்ளனகாளிமூர்த்தம்உக்கிரமானதன்மை வாய்ந்ததாகவும், பயங்கர உணர்ச்சி தருவதாகவும், அதர்மத்தை அழிக்கும் தன்மையதாகவும் விளங்கும். வட இந்தியாவிலே வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களில் இன்றும் காளி வழிபாடு அதிகமாகக் காணப்படுகிறது. மகான் இராமகிருஷ்ணபரம ஹம்சரே ஒரு காளி உபசேகராக விளங்கியருள் பெற்றாரென்பதும் நாம் அறிந்த உண்மையாகும்.

பாரத நாட்டிலே குலமரபுத் தெய்வமாகவும், குழுத் தெய்வமாகவும், யுத்த தெய்வமாகவும் துர்க்காதேவியை வழிபட்டு வருவதைப் பரக்கக் காணலாம். சீக்கிய மக்களின் மரபில் யுத்தத் தெய்வமாகத் துர்க்கையை வழிபடுவது செறிந்து காணப்படுகிறது. சீக்கிய வீரனான கோவிந்தசிங்கென்பவன் துர்க்கை வழிபாட்டினைச் சீக்கியரிடம் செல்வாக்குப் பெறச் செய்தானெனச் சரித்திரம் கூறும்.

வட இந்தியாவில் 'தசரா' மரபு வீர தெய்வமாகிய துர்க்கை வழிபாட்டை வலியுறுத்துவதாக அமைகிறது. துர்க்கா பூஜை துர்க்கோற்சவமாகப் பத்து இரவுகளுக்கு நடைபெறுகிறது. இவ்வழிபாடு சக்தி வழிபாடாகவும் குறிப்பாக ஐந்தாவது நாள் துர்க்கையை லளித பஞ்சமியாகக் கொண்டும் வழிபடுவர். 'போர் வீரரும், அரச பரம்பரையினருமே துர்க்கா பூஜைகளில் அதீதமாக ஈடுபட்டு வந்தனர். இந்து சமஸ்தானங்களில் அரச வைபவமாக 'தசரா' வழிபாடும், கொண்டாட்டமும் நடைபெற்று வருகிறது. பண்டைக் காலத்தில் எதிரிகள் மீது படையெடுத்துச் செல்வதற்கு 'தசரா' நாட்களைப் பயன்படுத்தினர். அரச ஊர்வலங்களும் படை அணி வகுப்புகளும் நிறைந்த வைபவங்களாகவும் கண்கவர் காட்சிகளமையக் கோலாகலமாகக் கொண்டாடப்படுவதையும் நாம் அறிகின்றோம்.

நட்சத்திரங்களிற் பரணிக்கும் கிரகங்களுள் ராகுவுக்கும், துர்க்கையே அதிதேவதை எனப் பிரம்மரகசியம் கூறும். பூர நட்சத்திரத்துக்கு துர்க்கை என்னும் மறுநாமமுமுண்டு. ஒருவன் ராகு தோஷத்துக்குட்படுவானாயின் துர்க்கா பிராட்டிக்குப் பரணி, பூர நட்சத்திரங்களிலும் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் விசேட பூசையியற்றித் தோத்திரம் செய்ய வேண்டுமென நவக்கிரக சாந்திப் பத்ததிகளிற் கூறப்பட்டுள்ளது. அச்சமயங்களிற் பாயாசன்னம், சர்க்கரைப் பொங்கல் போன்ற இனிமையான அமுதுவகை தேவிக்கு நிவேதிக்க வேண்டுமெனவும் நூல்கள் கூறுகின்றன.

வடநாட்டில் துர்க்கை வழிபாடு பரந்திருப்பது போலத் தென்னாட்டில் இல்லையெனினும் நவராத்திரி விழாக் கொண்டாடும் மரபு பெருமளவிற் கோவில்களிலும், கல்வி நிலையங்களிலும் கைக் கொள்ளப்படுகிற முறையில் துர்க்கை அம்பாளை வீரசக்தியாகக் கொள்ளும் வழக்கம் பரவி வந்திருக்கிறது. முல்லைநில மரபிலும் கால் நடைகளுக்கு வரும் நோய்களையும், சக்திவழிபாடுகள் கிராமிய மரபில் நடந்தமையையும் அறிகிறோம். தனியாலயங்களிலும் குல தெய்வமாக விளங்குங்கால் உரு ஆடல் நிமித்தம் குறி சொல்லல் ஆதியன நிகழ்ந்து, வருவதையும், கிராமிய மக்கள் ஏகோபித்துப் பங்கு கொள்வதையும் இவ்வைபவங்களிற் காணலாம்.

கிராமிய தேவதைகளின் வழிபாட்டு மரபுகளைப் பற்றி ஆய்வு செய்த தெலுங்கு நாட்டு அறிஞர் டாக்டர் தங்கிரலா என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "சக்திகளிற் பல மூர்த்தங்கள் உண்டு. லலிதா, சண்டி, துர்க்கை முதலியோர் வைதீக தேவதைகள், உத்தம சக்திகள். மந்திரம், தந்திரம், ஜெபம், ஹோமம் முதலிய பூஜை முறைகளால் இவர்களை ஆராதிப்பார்கள். எல்லம்மா

(ரேணுகை) போரேலம்மா, தாகதம்மா முதலியோர் சிறு தேவதைகள். உக்கிரசக்திகள். பலி முதலியவற்றால் இவற்றைத் திருப்திப்படுத்துவார்கள்.''

ஆந்திர நாட்டிற் பரந்திருக்கும் கிராம தேவதை வழிபாட்டின் மூலங்களை விரிவாக நோக்கும்போது, அவை யாவும் ஒவ்வொரு குலமரபுக்கும் குழு மரபுக்குமேற்ப வேறு வேறு வடிவங் கொண்டமைவதைக் காணலாம். அங்கம்மா, கங்கம்மா, கங்கணம்மா, மாரியம்மா, பல்லக்கம்மா முதலிய தெய்வங்கள் காணப்படுகின்றன. இது போலவே தமிழ் நாட்டிலும் முத்துமாரியம்மன், மாரியம்மன், காளியம்மன், கண்ணகியம்மன், இராஜேஸ்வரியம்மன் ஆகிய மூர்த்தங்கள் விழாவெடுத்து வழிபடப்படுவதையும் காணலாம். இவையாவும் சத்தி வழிபாட்டின் அம்சங்களேயெனச் சமூகவியலறிஞர்கள் விளக்கியுள்ளனர். ஒவ்வொரு வழிபாட்டு மரபுகளோடும் புராணக் கதைகள் பின்னிப் பிணைந்துள்ளன. விழாக் காலங்களில் சத்திமூர்த்தங்களின் பெருமைகளைப்பற்றி வீரக் கதைகளை இசையிலமைத்துப் பாடுவதும் வழக்கமாகி வித்துள்ளது.

தமிழ் நாட்டில் சக்திவழியாட்டு மரபுகள் இடத்துக்கிடம் வேறுபட்டுள்ளன. கிராமியத் தேவதைகளைக் காலப்போக்கில் வைதிக தெய்வங்களாக வணங்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. சங்க இலக்கிய மரபில் காணப்படும் கொற்றவை வணக்கத்தைத் துர்க்கை வழிபாட்டுடன் இணைத்துக் கூறலாம். கொற்றவை வீரவணக்கத்துக்குரிய தாய்த் தெய்வமாக விளங்குகிறாள்,

''வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ'' எனத் திருமுருகாற்றுப்படையில் முருகன் குறிப்பிடப்டுபவதும் நோக்கற்பாலது. சிலப்பதிகாரத்தில் கொற்றவையின் வீரம் புனைந்துரைக்கப்படும்போது,

.. ... ... பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய் கலைப்பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து,

(வேட்டு வரி 67–72 சிலம்பு)

என வரும் தேவராட்டி தேவியைப் போற்றும் பகுதி வீர வணக்கத்தையும், சத்தியின் இயல்பையும் எடுத்துக் காட்டுகிறது.

கொற்றவையின் தோற்றம்

''மதிவெண் டோடு சூடும் சென்னி
நுதல் இழித்து விழித்த இமையா நாட்டத்து
பவளவாய்ச்சி தவள நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவுநாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளை யெயிற் றுரக்க கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையில் சூலம் ஏந்தி
கரியின் உரிவை மேகலையாட்டி
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி
வலம்படு தோற்றத்து வாய்வாட் கொற்றவை
இரண்டு வேறுருவில் திரண்ட தோளவுணன்
தலைமிசை நின்ற தையல்!'

எனக் கூறப்படுவதையும் உணரலாம். இதில் வரும் இறுதி இரண்டடிகளையும் உரையாசிரியர்கள்;

''எருமைத் தலையும் மனித உடலுமாகத் திரண்ட தோளுடை மகிடாசுரனைக் கொன்று, அவன் தலைமீது நிற்பவள்'' என விளக்கியுள்ளனர். எனவே கொற்றவையென்பது மகிஷாசுரமர்த்தனியாகிய துர்க்கையையே குறிப்பதாகும் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. வடநாட்டுத் துர்க்கை வழிபாடே தென்னாட்டில் கொற்றவை வழிபாடாகக் கொள்ளப்பட்டதாகும்.

ஈழ நாட்டிலும் சக்தி வழிபாடு மிகப் பழைமை வாய்ந்ததாக மரபு வழி வளர்ச்சியைக் கொண்டு விளங்கி வருகிறது. இவ் வழிபாட்டின் மூலப் பண்புகளைத் தனி வழிபாட்டுடன் இணைத்து நோக்கும் மரபும் நிலவுகின்றது.

கயவாகு மன்னன் காலந் தொடக்கம் ஈழநாடு முழுவதும் பத்தினி வழிபாட்டை

மக்கள் மேற் கொண்டுள்ளனர். சிங்கள மக்களும் "பத்தினித் தெய்யோ" என்னும் கண்ணகியம்மனுக்குக் கோவில் எடுத்து வழிபாடாற்றி வந்துள்ளனர். இங்கு நிலவும் மாரியம்மன், முத்துமாரியம்மன், காளியம்மன், சப்த கன்னியர், இராஜ ராஜேஸ்வரி, நாச்சிமார் வணக்கம் யாவும் தென்னக வழிபாட்டு மரபுடன் தொடர்புள்ளவையாகவே விளங்குகின்றன. ஆனல், கிராமிய வழிபாட்டு முறை மாற்றமடைந்து தனியாலயங்கள் தோன்றி வைதீக நெறி வழிபாட்டுடன் இணைந்துவிட்டன. அவ்வாலயங்கள் சிவாகம விதிப்படி புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகங்கள் நடைபெற்று விதிமுறை வழிபாட்டுத் தலங்களாக விளங்குகின்றன.

"யாதொரு தெய்வங் கொண்டீரத்
தெய்வமாகியாங்கே
மா தொருபாகனுர் தாம் வருவர்"

எனும் உண்மைக் கமைய, இறைவனின் அருட்சக்திப் பிரவாகத்தை மக்கள் பெற்றுச் சிறப்புறுவதைக் காண்கிறோம்.

ஈழத்தில் வருடா வருடம் கொண்டாடப்படும் "நவராத்திரி விழா" சத்திபூஜை மரபை வளர்த்து வந்துள்ளது. கோவில்களிலும், கல்வி நிலையங்களிலும், தொழில் நிலையங்களிலும் வழிபாடாற்றும் இம்முறை தென்னகத்திலிருந்தே இங்கும் பரவியதென எண்ண இடமுண்டு. துர்க்கா தேவி வணக்க வளர்ச்சிக்கும், நவராத்திரி விழாவே ஆதாரமாக அமைந்துள்ளது. துர்க்கை பரிவார தெய்வமாக விளங்கும் ஆலயங்கள் பலவுள. ஆனல் மூலமூர்த்தியாகித் தனியாலயத்தில் எழுந்தருளித் துர்க்காதேவி காட்சி கொடுக்கும் தலம் தெல்லிப்பளை உமுகுடைத் துர்க்காதேவி ஆலயமேயாம். இவ்வாலயத்தின் கர்ண பரம்பரைச் செய்தியைப் பின்வருமாறு எழுதியுள்ளனர்:

"ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன், தெல்லிப்பளையில் கதிர்காமர் என்ற சைவ வேளாளர் ஒருவர் வசித்து வந்தார். அவர் தலயாத்திரை புரிவதிற் பத்தியும் சிரத்தையும் மிக்கவர். 1750 ஆம் ஆண்டளவில் அவர் தலயாத்திரைக்காகப் புறப்பட்டுக் காங்கேசன் துறையில் தோணியேறித் தென்னிந்தியாவின் கீழைக்கரையிலுள்ள வேதாரணியத்திற் கரையேறினர். அவர் அங்கிருந்து பாதயாத்திரையாகத் தலவழிபாடு செய்து கொண்டு காசிவரை சென்றார். இவ்வகையில் இந்தியாவில் ஏறக்குறையப் பத்து வருடங்கள் சென்றன. இக்காலவெல்லைக்குள் அவர் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுத்தே துர்க்காதேவி உபாசகராக மாறிவிட்டார். ஆனல் ஏறக்குறைய 1760 ஆம் ஆண்டளவில் தாம் யாழ்ப்பாணம் திரும்பும்போது துர்க்காதேவி யந்திரம் ஒன்றினையும் வெண்கலத்தினலமைந்த "திருமுகக் கெண்டி" உருவமொன்றினையும் கையோடு கொண்டு வந்தார். குறித்த அன்பர் கதிர்காமர் என்பவர் காசியில் பலநாள் தங்கியிருந்திருப்பார். இந்தியா முழுவதிலுமுள்ள சத்திபீடங்கள் அறுபத்து நான்கினுள்ளும் காசியிலுள்ள சொர்ப்பனேஸ்வரி பீடமே முக்கியமானது துர்க்காதேவி சகல கலைகளுடனும் பொலிந்திருக்குப் பீடம் அதுவாகும். அன்பர் கதிர்காமர் குறித்த யந்திரத்தை அங்கிருந்தே பெற்றிருப்பாரென எண்ணுவதற்கிடமுண்டு. இங்ஙன அவர்தாம் கொண்டு வந்த இயந்திரத்தையும் திருமுகக் கெண்டியையும் தெல்லிப்பளை உமுகுடைப் பகுதியில் ஒரு மரத்தடியிற் கொட்டிலமைத்து அதில் தாபனஞ் செய்து பூசித்து வந்தார்."

(தெல்லிப்பளை உமுகுடைப் பதித துர்க்காதேவி ஆலய வரலாறு 1963)

மேற்குறித்த வரலாறே இவ்வாலயத்தின் பழைமை பற்றி நாம் அறியக் கூடியவோர் பெருஞ் செய்தியாகும். இக்கர்ண பரம்பரைச் செய்தி ஒல்லாந்தர் காலத்துக்கு எம்மை இட்டுச் செல்கிறது. அக் காலந் தொட்டுக் குல தெய்வமாகவும், பலரின் இஷ்ட தெய்வமாகவும், கிராம மக்களின் தெய்வமாகவும்படிப்படியாவளர்ந்து இன்று அகில ஈழத்துக்கும் ஒளி கொடுத்து வருவதைக் காண்கிறோம். துர்க்காதேவி தனி நாயகியாய், அதியுன்னத அருட்பிரவாகம் சொரியும் மூர்த்தமாய் உமுகுடைப் பகுதியில் எழுந்தருளியிருந்து பக்த கோடிகளுக்கெல்லாம் ஓர் அரிய கலங்கரை விளக்குப் போலக் காட்சி தருவதை ஆங்குச் சென்று வழிபடுவோர் உணருவர்.

இவ்வாலயம் ஆரம்பகாலத்தில் கொட்டிலாயிருந்து, ஆண்டுகள் பல சென்றபின் கட்டடம் பெற்றுத் திருப்பணி பூர்த்தி

யாகி 1820 ஆம் ஆண்டில் முதல் கும்பாபி. ஷேகம் நிகழ்ந்ததென்றும், ஒரு தாம்பிர விக்கிரகம் பிரதிட்டை செய்யப் பெற்ற தென்றும் பெரியோர் வாயிலாக அறிகின் றோம். சில ஆண்டுகள் செல்ல இக்கட் டடமும் பழுதடைந்து, ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாகப் புனருத்தாரணம் செய்யப்படாமல் சிதைவடைந்து சுவர்கள் தானுமில்லாது மதிற் சுவர்களும் பழுதுபட் டிருந்த நிலையை நாமறிவோம்.

இத்தலத்தைத் தோற்றுவித்த பெரி யார் கதிர்காமரின் வழிவந்த கோப்பாய் கதிரேசம்பிள்ளை நாகநாதன் என்பவர் இவ் வாலயச் சொந்தக்காரராகித் தமது காணிகள் பொருள்கள் எல்லாவற்றையும் கோவிலுக்கு அர்ப்பணித்திருந்தார். அவர் ஆலயத்தைச் சொந்த முயற்சியினுல் நன் னிலைக்குக் கொண்டுவர முடியாமை காரணமாக, 1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் திகதி உறுதி மூலம் பதி னொரு சைவப் பெரியார்களைக் கொண்ட தர்ம கர்த்தாக்கள் சபையை உருவாக்கித் தனது உரிமையையும் அதிகாரத்தையும் அச்சபையாரிடம் கையளித்துவிட்டார். இந்நிகழ்ச்சி ஆலயத்தின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த திருப்பத்தை உண்டாக்கியது. இத் தர்மகர்த்தா சபையினரின் நன்முயற்சி யினுலும், அவர்களால் தெரியப்பட்ட ஆலய நிர்வாக சபையினரின் உழைப்பினு லும் இவ்வூரில் வதியும் சைவ இளைஞர் ஒன்று சேர்ந்து செய்ய முன்வந்த சிரம தானத் திருப்பணியினுலும், எல்லாவற்றுக் கும் மேலாகத் தேவியின் திவ்விய கடாட் சத்தினுலும் 1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகிய திருப் பணி வேலைகள், சைவ அன்பர்கள் பலரின் நிதியுதவி கொண்டு நடைபெறலாயின. பணமின்மை காரணமாகத் திருப்பணி வேலைகள் ஆரம்பத்தில்தாமதப்பட்டாலும், அன்னையினருட் பிரவாகத்தினுல் பெருநிதி படைத்தோரும், மற்றவர்களும் நிதியுதவ வெகு விரைவில் திருப்பணி பூர்த்தியாகி யது. சிவாகம முறைப்படி அமைந்த அழகு பொலியும் ஆலயம் உருவாகியது. 1965 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் எட்டாம் நாள் சிவ விக்கிரகப் பிரதிட்டை யும் மகாகும்பாபிஷேகமும் வெகு விமரிசை யாக நிகழ்ந்தன. இவ்வாறுன சிறப்புக்கள் யாவற்றுக்கும் இவ்வூர்ச் சைவ இளைஞரின் அரும்பெரும் தொண்டே முக்கிய காரண மாகும். இத்தகைய ஒத்துழைப்பை வேறெங்கும் காண்டலரிதெனலாம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக் கும் துர்க்கையம்பாள் ஆலயத்துக்கும் இடையேயுண்டான தொடர்பு மிக முக்கி யத்துவம் பெற்றதாகும். மாவை ஆலயத் தின் வெண்கல் திருப்பணி 1815 ஆம் ஆண்டு பூர்த்தியாகிக் கும்பாபிஷேகம் நடைபெற்ற தென நாம் அறிகிறோம். பின் ஐந்தாண்டு செல்லத் துர்க்காதேவி ஆலயம் முதற் கும் பாபிஷேகம் நடைபெற்றமை இவ்விரு ஆலயங்களுக்குமிடையே திருவருளா லமைந்த ஒற்றுமையையும், பத்தர்களின் சைவப்பற்றினையும் உணரச் செய்கிறது. இக்கும்பாபிஷேகம் நிறைவெய்தி நான்கு வருடங்களின் பின் 1829 ஆம் ஆண்டு மாவை முருகப்பெருமான் ஆரோகணித்து மயில் மீதிலமர்ந்து முதன் முதலாகத் துர்க்காதேவியின் ஆலயத்துக்கு வந்து மானம்புத் திருவிளையாடல் (மகான் அம்பு போடுதல்) நிகழ்த்தினுரென்பது பெரி யோர் வாயிலாக அறிந்த உண்மை. அக் காலம் தொட்டு இன்றுவரை நவராத்திரி யைத் தொடர்ந்து விஜயதசமியன்று இவ் விழா முட்டின்றி நடைபெற்று வருகின் றது. 144 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சி அம்பாளும் முருகனும் புரி யும் அரும்பெரும் திருவிளையாடலேயாம்.

இத்துர்க்காதேவி ஆலயத்தின் பழைமைக் குச் சான்றுக மிளிருவது சங்கானை தம்பர் பொன்னையா என்னும் அம்பாள் பக்தரா கிய பெரியார் பாடிய துர்க்காதேவி பதிக மாகும். அப்பாடல்கள் சைவசித்தாந்தப் பொக்கிஷமாகவும், பக்தியை வளர்க்கும் கருவூலங்கமாகவும், தேவியின் அருட்பிர வாகத்தில் நீந்தச் செய்யும் புணையாகவும் விளங்குகின்றன. அப்பாடல்களின் பொருளை

விரிக்கின் சிறுஞான நூலொன்று உருவாகத்தக்க அடக்கம் கொண்டுள்ளது. இச் செவ்விய பதிகத்தின் ஒன்பதாவது பாடலில் மாவைக் கந்தன் மானம்புத் திருவிளையாடலுக்கு அன்னையிடம் வரும்காட்சியும், அன்னையின் அருளின் மாட்சியும் அழகாக அமைந்துள்ளன.

"மாருதப் பிரவல்லி இசையுக்ரசோழ னுயர்
மகளுற்ற குன்ம வலியும்
மாமுகமு நீங்கியலர் மகளென வனப்பருளி
மாவிட்ட புரமென்றுநற்
பேருலவ விட்டிலகி னிற்கொடிய மிடிகவலை
பிணியொன்று மணுகாமலே
பேறு தரு கோயில் கொண் டாசகல்
விழாப்பவனி
பேசு மயில் மீது வந்து
ஆருமயல் தீர வருள் விளையாடல் செய்துவரு
மறுமுகக் குமரேசனை
ஆர்வமொ டெதிர்த்து சரித்திடவு மடியருறு
மாதுல மகற்றி மேலாஞ்
சீருமுயர் கல்வி ஞானம் பேறளிக்கவுந்
திருவுளங் கொண் டெழிலுறுந்
தெல்லிநக ருழுகுடைப்பதியிலுறைநிறைசெயச்
செல்வி துர்க்கா தேவியே"

என்பது அப்பாடலாகும்.

மகிடாசுரனின் வதத்தை நினைவூட்டும் வகையில் ஓராலய மூர்த்தி, வேறொரு ஆலயத்துக்குச் சென்று, வன்னி வாழை வெட்டும் மரபு இங்கே தான் முதன் முதலாக ஏற்பட்டிருக்கலாமென எண்ணுதற்கிடமுண்டு. இந்நிகழ்ச்சி தெல்லிப்பழை மக்களுக்கு மாத்திரமன்று, அயற் கிராம மக்களுக்கும் சிறப்பான நிகழ்ச்சியாக விளங்குகிறது.

1968 ஆம் ஆண்டு தொடக்கம் கொடித் தம்பம் நிறுவப் பெற்று, கொடியேற்றுவிழாத் தொடங்கித் தேர் தீர்த்தம் உட்படப் பன்னிரு நாட்கள் கோலாகலமான விழாக்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வருவதும் ஆலயத்தின் பொலிவைச் சிறப்பிக்கின்றது.

உழுகுடைத் துர்க்காதேவியின் அருள் நோக்கம் பெற்றுத் தொண்டு புரியும் தவச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்களைப் பற்றியும், இக்கட்டுரையில் எழுதாவிடின் இத்தொகுப்பு பூரணத்துவம் பெற முடியாது. சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டுபுரியுமாறு அன்னையின் வரப்பிரசாதமாக வாய்த்தவர் பண்டிதர் அவர்களாவர். அவர்கள் துர்க்காதேவியைத் தனது வழிபாட்டுத் தெய்வமாகவும், இளமை தொடக்கம் தன்னை வழி நடத்தும் மூல சக்தியாகவும் கொண்டு வளர்ச்சியடைந்தவர். சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் செல்வியவர்கள் தன் நாவன்மையாலும், ஆழ்ந்த அறிவுப் பெருக்கினாலும், இனிய சாரீரத்தினாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மனதைக் கொள்ளை கொண்டு பிரசங்க மழை பொழியும் முகிலாக விளங்குகிறார். தமிழகம், மலேசியா ஆகிய இடங்களுக்கெல்லாம் அவர் சென்று துர்க்கையினருளால் சைவமும் தமிழும் வளரத் தொண்டு புரிகிறார் என்பது ஈழத்துக்கே பெருமை தருவதாகும். ஈழத்துப் பெண்மணிகளுள் தலை சிறந்த பேச்சாளராக விளங்கிடும் திறமையினால், தமிழக விழாக்களில் தலைமை வகிக்கும் பேற்றையும் பெற்றுள்ளார்.

இப்பெண்மணி அன்னையின் அரவணைப்பில் தாம் வாழும் தன்மையுணர்ந்து, ஆலய வீதியில் சொந்தப் பொறுப்பில் சைவத்திருநெறித் திருமுறை மடத்தைத் தாபிதம் செய்து, திருமுறை வகுப்புகள், புராண வகுப்புகள், புராணபடன நிகழ்ச்சி ஆகியவற்றை நடத்தி வருகிறார். ஒரு காலத்தில் உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவர் போன்றவர்கள் இவ்வாலயத்தில் புராண படன நிகழ்ச்சியில் விரிவுரை நிகழ்த்திய பெருமையை மீண்டும் ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறாரெனலாம். ஆலய நிர்வாகசபைப் பொருளாளராகத் திருப்பணிக்கெல்லாம் உறுதுணையாக, ஆலய ஆக்க வேலைகளுக்கு உதவி புரிபவராகத் தொண்டுகள் யாவற்றுக்கும் அச்சாணியாக விளங்குகிறார். அவருடைய சைவத் தமிழ்த் தொண்டு பெண்ணுலகுக்குப் பெருமையளித்து நீடுவாழ்வதாக.

"மிகுதெல்லி உழுகுடைப் பதியில் வாழ்
துர்க்கையும்
வீர மொடு வாழி வாழி".

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

— க. க. சுப்பிரமணியம் —

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் புகழ்பெற்ற இராமநாதன் கல்லூரியில் ஆசிரிய மாணவியாகப் படிக்கும் பொழுதே, கல்லூரி மேடையிலே கதாப் பிரசங்கம் செய்து பலரின் பாராட்டையும் ஆசியையும் பெற்றவர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கல்வியிலும், சங்கீதத்திலும் சிறந்துவிளங்கிய அம்மையார். 1945-இல் ஆசிரியராகத் தொழில் புரிய ஆரம்பித்தார். ஆசிரியராகக் கடமை ஏற்ற காலம் தொட்டு ஆலயங்களிலும், விழாக்களிலும் சொற்பொழிவுகள் செய்து வந்வார். அம்மையார் பண்டிதர் பரீட்சையிலும், சைவப்புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார். இவரின் பேச்சுத் திறமையை அறிந்து கொழும்பு விவேகாநந்த சபையினர் 1953 விஜயதசமி தினத்தில் இவரைச் சொற்பொழிவு ஆற்ற அழைத்தனர். அன்றைய தினம் சபையினரின் அன்பையும், பாராட்டையும் பெற்றார். பேச்சுத் துறையில் 30வருட அனுபவமும், ஆசிரியத் தொழிலில் 28வருட அனுபவமும் அடைந்துள்ளார்.

1965-ஆம் ஆண்டு சைவ சித்தாந்த சமாஜ வைர விழாவிலே பங்குபற்றிச் சிதம்பரத்தில் உரையாற்றிப் பெரும் பாராட்டைப் பெற்றார். அதே ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக இலக்கிய விழாவிலே 'சிலம்பு' பற்றிப் பேசிப் பாராட்டைப் பெற்றுள்ளார்.

அம்மையார் தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாள் ஆலயத்தைப் புதிதாக அமைக்கப் பரிபாலன சபை உருவாக்கிய நாள் தொட்டு, இன்று வரை தனாதிகாரியாகக் கடமையாற்றி நற்பணி புரிந்து வருகின்றார். இச் சிவ கைங்கரியத்தில் அம்மையார் அடைந்த புகழும், பெருமையும் அதிகம். ஆசிரியத் தொழிலில் இருந்துகொண்டு, தன் சொந்தப் பணத்தில் திருமுறை மடத்தைத் துர்க்கை அம்பாள் ஆலயத்தில் சிறந்த முறையில் கவர்ச்சிகரமாகக் கட்டி எழுப்பியுள்ளார். எப்பொழுதும் தன் கண்ணிலும் கருத்திலும் தெல்லிப்பழைத் துர்க்கை அம்பாளே காட்சி தருகிறார் என்று அடிக்கடி கூறுவார். தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் இசை வளர்ச்சிக்கான நிலையமாகப் புதிய மண்டபம் ஒன்றைத் தனது சொந்தப் பணத்தில் கட்டிக் கொடுத்துள்ளார்.

• 1971ஆம், 1972-ஆம் ஆண்டுகளில் சித்திரை விடுமுறைக்கு மலேசியா, சிங்கப்பூர் சைவமக்களின் அழைப்பைப் பெற்றுப் பல சமயச் சொற்பொழிவுகள் செய்து பாராட்டையும் பெற்றுவந்துள்ளார். நாவலர் பெருமான் செய்த சைவத் தொண்டை இன்று தொடர்ந்து செய்பவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. இலவசப் பிரசங்கம் சென்ற 30 ஆண்டுகள் செய்து வருகின்றார் என்றால் அது நாம் பெருமையடைய வேண்டிய காரியம் ஆகும்.


இதுவரை அம்மையாரின் சைவத் தொண்டைப் பாராட்டுமுகமாக பல சைவ ஸ்தாபனங்கள், மடாதிபதிகள் அவரைக் கௌரவித்துப் பட்டமும் கொடுத்துள்ளனர். அவையாவன:

| ஆண்டு | | பட்டம் | வழங்கியோர் |
|---|---|---|---|
| 1. 1966 திசம்பர் | ... | செஞ்சொற் செம்மணி | மதுரை ஆதீனம் |
| 2. 1970 ஆகஸ்ட் | ... | சிவத்தமிழ்ச் செல்வி | காரை – மணிவாசகர் சபை |
| 3. 1971 திசம்பர் | ... | சித்தாந்த ஞானகரம் | காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் |
| 4. 1972 பெப்பிரவரி | ... | சைவதரிசனி | இராஜேஸ்வரி பீடாதிபதி (தமிழ்நாடு) |
| 5. 1972 ஏப்பிரல் | ... | திருவாசகக் கொண்டல் | சிலாங்கூர் இலங்கைச் சைவச் சங்கம் |
| 6. 1973 பெப்பிரவரி | ... | திருமுறைச் செல்வி | வண்ணை - வைத்தீசுவரன் தேவஸ்தானம் |
| 7. 1974 ஜனவரி | ... | சிவமயச் செல்வி | ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் |

அம்மையாரின் சமயச் சொற்பொழிவுகள் 25 ஆண்டுகளாக ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவ காலங்களில் நடைபெற்றுவருகிறது. மாணிக்கவாசகர் விழாவில் இவரின் பேச்சைக் கேட்பதற்கு வருடாவருடம் அடியார்கள் பலர் கூடியிருப்பார்கள். காரைநகர்தான் தமக்குப் பெருமை தந்த ஊர் என்று அம்மையார் அடிக்கடி பலருக்குக் கூறுவது வழக்கம். ஆனல் இன்று தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எங்கு எந்தக் கூட்டத்தில் பேசினுலும் கேட்பதற்கு ஆயிரம் ஆயிரம் பக்தர்கள் கூடுகிருர்கள். தமிழக அறிஞர்கள் பலரின் தலைமையில் அவர்கள் மெச்சும்வகையில் சிறப்புச் சொற்பொழிவாற்றிப் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சைவத்தையும், தமிழையும் பல்லாண்டு காலமாக வளர்த்துவரும் திருவாவடுதுறை ஆதீனம், சென்ற 27, 28, 29-10-73 ஆம் திகதிகளில் திருவிடை மருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி தேவஸ்தானத்தில் நடாத்திய திருமுறை விழாவின் போது, மகளிர் அரங்கத்துக்கு நம் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை தாங்கியது குறிப்பிடத்தக்கது: நாவலர் பெருமானைக் கௌரவித்த திருவாவடுதுறை ஆதீனம், நம் அம்மையாரையும் அழைத்துக் கௌரவித்ததுபற்றி நாம் பெருமையடைகின்ருேம்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தனது கணீரென்ற குரலில் சைவத்தை எழுச்சியுறச் செய்துள்ளார். பேச்சுத் துறையில் வெள்ளி விழாக்காணும் ஆசிரியை அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து சைவத்துக்கும், தமிழுக்கும் சேவை செய்ய வேண்டுமென்று ஈழத்துச் சிதம்பரத்தில் நித்தம் ஆனந்த நடனம் புரியும் நடராசப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.



*With Best Compliments*

*from*

# H. A. NAGINDAS & CO.

137, MAIN STREET,

COLOMBO 11.

*Telephone* : 2 2 2 3 2

*With Best Compliments*

*from*

# CHETTINAD CORPORATION PRIVATE LTD.

116/118, KEYZER STREET,

COLOMBO 11.

*Telephone* : **2 6 5 7 6**

With Best Compliments

from

# K. P. SUBBIAH & CO.

190, PRINCE STREET,

COLOMBO 11.

*Phone* : **23113**

*With Best Compliments*

*from*

# RAM BROTHERS

**140, MAIN STREET,**

**COLOMBO 11.**

With Best Compliments

from

# INDIAN BANK

on the occasion expressing
appreciation of
Miss Thangamma Appakutty's
contribution in
Hindu Religious Work

# INDIAN BANK

48, BAILLIE STREET,
COLOMBO 1.

*Telephone:* 23402

உ

தமிழுக்கும் சைவத்துக்கும் அருந் தொண்டாற்றி வரும்
தியாகச் சின்னம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர்
பண்டிதர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால்

ஈழத்தமிழர் பெருமைப் படுகின்றனர்.

**லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**
**தயாரிப்பவர்கள்**

---

உ

இன்பமே சூழ்க

**கலா ரேடிங் கம்பனி**

**134, இரண்டாம் குறுக்குத் தெரு,**

**கொழும்பு-11.**

*With Best Compliments*

*from*

# THALAYAN PRINTING WORKS

**178, DAM STREET,**

**COLOMBO 12.**

*Telephone* : 24531

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள் ஆற்றிவரும் சேவைக்கு
எமது உளங்கனிந்த
பாராட்டுக்கள்

**சுங்கத் திணைக்கள**
**இந்து ஊழியர் சங்கம்**
கொழும்பு.

---

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
சமய சமூகநல சேவைகளுக்கு
எமது பாராட்டுக்கள்

**வெள்ளியம்பதி**
அளவெட்டி.

*With Best Compliments*

*from*

# MALAYAN TRADING CO.,

**14, QUARRY ROAD,**

**COLOMBO 12.**

அழகான

அவசர திருத்தமான

அச்சு வேலைகளுக்கு

# குமரன் அச்சகம்

201, டாம் வீதி, கொழும்பு 12.

தொலைபேசி : 21388

*With Best Compliments*

*of*



# SARASWATHY STORES

( *SAREE PALACE* )

75-77, SEA STREET,

COLOMBO 11.

*Telephone*: 22839

*With Best Compliments*

*from*

MESSRS **KUNDANMALS LTD.**

**110/114, MAIN STREET,**

**COLOMBO 11.**

*Telephone*: **2 3 6 4 1**

அன்பளிப்பு

# தேவராசா நகை மாளிகை

23, மெயின் வீதி,
கொச்சிக்கடை.

தொலைபேசி: 34

உ

# ரகுநாதன் பதிப்பகம்

303, காலி வீதி,

கொழும்பு-3.

கிளைகள் :

| | |
|---|---|
| இல. 8, நவீன சந்தை,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | இல. 2, பட்டினசபை,<br>கே. கே. எஸ். வீதி,<br>சுன்னுகம். |

★ மாணவ, மாணவிகளுக்கான சகலவித பாடசாலை உபகரணங்கள்

★ அறிஞர்களின் சிந்தனைக் கருத்துக்கள்


★ தமிழ்நாட்டுச் சஞ்சிகைகள்

★ உள்ளூர் எழுத்தாளர்களின் ஆழ்ந்த கருத்துமிக்க நவீனப் படைப்புக்கள் அடங்கிய புதுப்புது வெளியீடுகள்

மற்றும் வாழ்த்து மடல்கள்

பெற்றுக்கொள்ள வேண்டுமானால்
முதன்முதலில் எமது ஸ்தாபனத்துடன்
தொடர்புகொள்ளுங்கள்.

**மக்கள் சேவையே எமது சேவை**



அகில இலங்கை இந்து மாமன்றம் அமைக்க இருக்கும்
கலாசார மண்டபத்தின் முகத்தோற்றம்

கட்டடத்திற்கு நிதியுதவி வழங்க விரும்புவோர் :

## அகில இலங்கை இந்து மாமன்றம்

**75, லோறன்ஸ் வீதி, கொழும்பு 4.**

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நியூ லீலா அச்சகம், கொழும்பு 12.